
சனிக்கிழமை
விபத்து
இந்திரா சௌந்தர்ராஜன்
திருமகள் நிலையம்

மின்னூலாக்கம்

A.K

# சனிக்கிழமை விபத்து!

## 1

'ஆஸ்திரேலியாவைச் சேர்ந்தவர் அந்த பெண் மணி. உலகைச் சுற்றி வருவதும், பலநாடு பலமொழி பலவித கலாசாரங்களை அறிந்து கொள்வதும் அவருக்கு விருப்பமான செயல். இந்தியா வந்த அந்த பெண்மணி நமது நாட்டின் பன்மொழி கலாசாரத்தைப் பார்த்து முதலில் அதிர்ந்தார். பிறகு ஆச்சரியப் பட்டார். அனைத்திற்கும் மேலாக இந்திய மண்ணின் ஆன்மீகச் சிறப்பை அவரால் நுட்பமாகவே உணர முடிந்தது. பலவித புராணங்கள், இதிகாசங்கள் என்று ஏராளமான இலக்கியங்கள் மண்டிக்கிடப்பதை பார்த்த வருக்குள் ஓர் உண்மை தெளிவாகப் புலனாயிற்று.

எவ்வளவு நீண்ட ஒரு பாரம்பரியம் இருந்திருந் தால் இது சாத்தியப்பட்டிருக்கும் என்பதுதான் அது! நீண்ட பாரம்பரியம் உள்ள ஓர் இடத்தில் நிச்சயம் ஒரு நல்ல தெளிவிருக்கும். ஏராளமான சான்றோர் பெரு மக்கள் ஒவ்வொரு நூற்றாண்டிலும் தோன்றி மறைந்திருப்பார்கள். அவர்களின் வாழ்க்கைப் பதிவுகள் வழிகாட்டிகளாக இருக்கும்.

*சுருக்கமாக சொல்லப் போனால், கிட்டத்தட்ட முதல் மனிதன் வாழ்ந்த அந்த நாள் வரை கூட இவர்களைக் கொண்டே எட்டிப் பார்க்க நம்மால் இயலக்கூடும்.*

*அந்த பெண்மணி மிகச் சரியாகவே நமது கலாசார சிறப்புகளை ஆராயத் தொடங்கினார். அவருக்குள் பிரமிப்புகளும் ஏற்பட ஆரம்பித்தன!'*

சென்னை ராதாகிருஷ்ணன் சாலையில் இருந்தது அந்த கார்ப்பரேட் அலுவலகம்! நல்ல உயரமான ஒரு மாடித் தளத்தில் அமைந்திருந்தது. சுற்றிலும் கண்ணாடிச் சுவர்கள்.

ஊடுருவினால் நாலாபுற சென்னையும் கண்ணில் அகப்பட்டது. அதிலும் சிவகுமாரின் அறைக்குள் சென்னையை மட்டுமல்ல, உலகத்தையே பார்க்க முடிந்தது.

ஒரு டேபிள் மேல் சூப்பர் கம்ப்யூட்டர்.

இன்னொன்றின் மேல் டிஜிட்டல் டி.வி. பாக்ஸ்.

மூன்றாவதாக உள்ள டேபிள் ஒன்றில் ஃபேக்ஸ் மெஷினும், கம்ப்யூட்டரின் பிரிண்டரும் ஒன்றிணைந்த நவீன ரக கருவி ஒன்றும் இருந்தது.

சிவகுமார் பறந்து கொண்டே இருப்பவன்.

அவன் தொழில் அப்படி!

விருதுநகர் சண்முகமும், ஜப்பானின் ஜிங்சாங்கும் ஒன்று சேர்ந்து 'சன்சாங்' என்கிற பெயரில் தொடங்கிய ஒரு கம்ப் யூட்டர் சாஃப்ட்வேர் நிறுவனத்தின் முதுகெலும்பே சிவகுமார்தான்!

அதனால் மாதத்தில் பாதி நாட்கள் ஜெனிவா, ஸ்விட்சர் லாந்து, ஃப்ராங்க்பர்ட், லண்டன் என்று ஓடிக் கொண்டிருப்ப வன். கம்ப்யூட்டர் மற்றும் எலக்ட்ரானிக்ஸ் துறையில் மிக

நவீனமான எந்த ஒன்றையும் முதலில் இந்தியாவுக்குள் வாங்கி வருபவனும் அவனாகத்தான் இருப்பான்.

குஜராத்தில் குமுத்லகானி என்று ஒரு சேட் இருக்கிறார். கல்கத்தாவில் ஒரு பானர்ஜி. இவர்கள் இருவரும் சிவ குமாரின் சரிக்கு சமமாக உலக நாடுகளில் பயணிப்ப வர்கள். ஆனாலும் இவன் அளவு தேசத்தை அவர்கள் அடையவில்லை.

நேற்று கூட ஒரு டிஜிட்டல் வாட்சை அமெரிக்காவின் அட்லாண்டா நகரில் வாங்கியிருந்தான். அந்த வாட்ச் இன்னும் அமெரிக்காவிலேயே மார்க்கெட் ஆகவில்லை. ஆனால், சிவகுமார் அதை எப்படியோ வாங்கி விட்டான். அதில் நேரம் மட்டுமில்லை, நமது உடம்பின் சர்க்கரை அளவு, இரத்தக்கொதிப்பு அளவு, உப்பின் அளவு, கொழுப்பின் அளவு என்று சகலத்தையும் உடனுக்குடன் பார்க்கலாம். அதன் கணிப்பும் அவ்வளவு துல்லியம்.

இருபத்து நான்கு மணி நேரத்துக்கு ஒருமுறை அது அன்றைய தினம் உடம்பில் எவ்வளவு கலோரிகள் உள்ளன என்பதையும் எவ்வளவு செலவாகியிருக்கிறது என்பதையும் கூட கூறிவிடும்.

சிவகுமாரும் அந்த வாட்சின் சதுரத் திரையை பார்த்த படி அமர்ந்திருந்தான். இடையிட்டது அவனது பாக்கெட் செல்போன்.

மெல்ல அதற்கு காதைக் கொடுத்தான்.

எதிர்முனையில் சிவாவின் நண்பர் சுந்தர்.

"சிவா..."

"யெஸ் சுந்தர்."

"ஃப்ரீயா இருக்கியா இப்ப?"

"யெஸ்..."

"அப்ப நான் ஒரு அஞ்சு நிமிஷம் எடுத்துக்கட்டுமா?"

"தாராளமா..."

"தேங்க்யூ சிவா. பை த பை வேளச்சேரி தாண்டி பழைய மகாபலிபுரம் ரோட்ல ஒரு இரண்டு கிரவுண்ட் இடம். பார்ட்டி இப்ப திருநெல்வேலிக்கு பக்கத்துல அம்பா சமுத்திரம்கற ஊர்ல இருக்காரு."

"விலை எவ்வளவு?"

"நல்ல விலைதான். நடுவுல புரோக்கர் தொல்லை கிடையாது. டைரக்டா பார்ட்டிகிட்டையே பேசிக்கலாம். என்ன சொல்றே?"

"விலையை சொல் சுந்தர். அப்புறம் பேப்பர்லாம் பக்காவா இருக்காங்கறதும் முக்கியம்."

"எல்லாத்தையும் பார்த்துட்டேன். பேப்பர் கிளீனா இருக்கு. அந்த லாண்டுக்கு இரண்டு பக்கமும் இரண்டு சினிமா ஸ்டார்கள் இடத்தை வாங்கியிருக்கிறார்கள்..."

"ஸ்டார் சரி... நடிகரா, நடிகையா?"

"நடிகைப்பா. ஒருத்தி உனக்கு ரொம்ப பிடிச்ச மோகனா ஸ்ரீ. இன்னொருத்தி நாட்டுக்கட்டை நளாதேவி."

"வாவ்... இரண்டு பேரும் இடம் வாங்கியிருக்காங்களா... இட்ஸ் எ இன்வெஸ்ட்மெண்ட் பர்ப்பஸா? இல்ல, வீடு கட்டிக்கிட்டு வரப் போறாங்களா?"

"அதெல்லாம் தெரியாது. அவங்க என்ன பண்ணா நமக்கு என்ன? நீ என்ன சொல்றே?"

"சரி சுந்தர். பார்ட்டியை பார்த்து பேசுவோம். அதுக்கு முந்தி அந்த இடத்தை நான் பார்த்துடறேனே..."

"நீ பார்க்காமலா... இன்னிக்கே கூட நீ பார்க்கறதுன்னா நான் ரெடி."

"அப்ப ஒன்னு பண்ணு. எங்க ஆபீஸுக்கு வந்துருக்கற ஒரு ஜெர்மன் கஸ்டமர் இப்ப மகாபலிபுரம் ரிசார்ட்ல ரெஸ்ட்ல இருக்கார். நான் அந்த ஆளை பார்த்து பிசினஸ் சேக் தாஜா பண்ண வேண்டிய வேலை இருக்கு. அதுக்காக நான் கொஞ்ச நேரத்துல கிளம்ப இருக்கேன். நீ என் கூட ஜாய்ன் பண்ணிக்கிறியா?"

"போகும் போது என் ஃபேக்டரிக்கு வா. நானும் உன் கூட சேர்ந்துக்கறேன். பை த பை... அந்த இடத்தை உன் கூட சேர்ந்து நானும் வாங்க பிரியப்படறேன்."

"அதுக்கு நீயே வாங்கிடலாமே.... எதுக்குடா ஜாய்ன்ட் வென்ட்ச்சர்?"

"அவ்வளவு பணம் இப்ப என்கிட்ட இல்லை சிவா..."

"ஏன், நான் உனக்கு ஹெல்ப் பண்ணமாட்டேனா?"

"நிச்சயம் பண்ணுவே. ஆனா எனக்குத்தான் கேட்க சங்கடமா இருக்கு. அதோட நாம இரண்டு பேரும் சேர்ந்து புதுசா ஒரு பிசினஸ் பண்ணனும்கறது என் ரொம்ப நாள் ஆசை. அந்த பிசினஸை நாம வாங்கப்போற அந்த இடத்துல வெச்சு பண்ண விரும்பறேன்..."

"சுந்தர்... நீ பெரிய திட்டத்தோட தான் இருக்கே. ஆனா, நான் நீ நினைக்கிறமாதிரி ஒன்னும் பெரிய பிக் ஷாட் இல்லை. ஒரு நல்ல சாஃப்ட்வேர் எஞ்ஜினியர். மாசம் ஒன்னரை லட்ச ரூபா சம்பாதிக்கறேன். தட்ஸ் ஆல்."

"உன் சம்பளம் ஒன்னும் பெருசா இல்லாம இருக்கலாம். ஆனா, நீ என்ன சாதாரண ஆளா? இந்தியாவோட முதல் பத்துப் பணக்காரர்ல ஒருத்தரான ஜம்னாலால் மாப்பிள்ளை ஆச்சே...?"

சுந்தர் பேச்சுப் போக்கில் சொன்ன அந்த உண்மை, ஒரு கணம் சிவகுமாரின் நெஞ்சைக் குத்தியது போல் இருந்தது.

"நோ சுந்தர்... நீ என்னை எப்படி பாக்கறேன்னு தெரிஞ்சு போச்சு. நான் ஜம்னாலால் மாப்பிள்ளைங்கற ஹோதாவுல என்னை நீ பார்த்தா தயவு செய்து அதை மாத்திக்கோ. நான் ஒரு சாஃப்ட்வேர் என்ஜினியர். எம்.டெக்ல கோல்ட் மெடலிஸ்ட். என் படிப்பை நீ மதிச்சா நான் பெருமைப்படுவேன். வேற எந்த உறவுமுறைப் பெருமைகளும் எனக்கு தேவையில்லை."

சிவகுமாரிடம் சட்டென்று தீப்பற்றிக் கொண்டது போல ஒரு சீரியஸ்நெஸ். சுந்தருக்கும் தப்பாக ஆரம்பித்து விட்டோமோ" என்று கூடத் தோன்றியது.

"சாரி சிவா... தயவு செய்து நான் பேசினதை மறந்துடு. நீ என் ஃபேக்டரிக்கு வா. நாம முதல்ல இடத்தை பார்ப்போம். பிறகு பேசுவோம்."

"இல்ல... அந்த இடத்தை நீயே வாங்கிக்கோ. என்னை விட்டுடு."

"சாரி சிவா... என்னால அதை வாங்க முடியாது. நானும் உன்கிட்ட இனி பார்ட்னர்ஷிப் பற்றியெல்லாம் பேச மாட்டேன். நீயே பார், பிடிச்சா வாங்கு. இல்லாட்டி விட்டுடு."

"ரைட்... இந்த முடிவுல எந்த மாற்றங்களையும் வெச்சுக்காதே..."

-சிவா பெருமூச்சோடு போனை துண்டித்தான்.

அவன் எதிரே சூப்பர் கம்ப்யூட்டரின் மகா பெரிய மானிட்டர் ஸ்கிரீனில் டெலி கான்ஃப்ரன்ஸ் மீட்டிங்கிற்காக ஜப்பானின் ஷியாமுகுடோ வந்து அமர்ந்திருந்தார்.

அவனும் தன் டேபிளின் டெலி கேமரா ஸ்விட்சை ஆன் செய்து விட்டு கழுத்து டையை இறுக்கி விட்டுக் கொண்டான்.

அடுத்து ஷியாமுகுடோ உரையாட ஆரம்பித்து விட்டார் சிவகுமாருக்கும் அவருக்கும் இடையில் சுமாராக

நான்காயிரம் மைல் தூரம். ஆனால் நாலு அடி தூர திரைக்குள் அவர் கம்பீரமாக அகப்பட சிவாவும் அவருக்கு அகப்பட விஞ்ஞானத்தின் ஓர் அன்றாட விந்தை அங்கே சர்வ சகஜமாக நடக்க ஆரம்பித்தது.

சிவா சரளமான ஆங்கிலத்தில் தன் உரையாடலை தொடங்கியிருந்தான்.

''ஹாய் மிஸ்டர் ஷியா! நம்ம ஆடிட்டரோட ரிப்போர்ட் வந்தாச்சு. லாஸ்ட் இயரைவிட கரண்ட் இயர்ல பாய்ண்ட் செவன் பர்சன்ட் இன்க்ரீஸ் ஆகியிருக்கு. ஆனாலும் ஆஸ்திரேலியா மார்க்கெட்டை அட்ராக்ட் பண்ண முடியலை. நம்ம மார்க்கெட்டிங் டீம் அங்க கங்காருவோட ஓடி விளையாடிக்கிட்டு இருக்காங்க. எப்பவும் போல அந்த மார்க்கெட் சீனாவோட யங்மங் குரூப் கைல ஸ்ட்ராங்கா இருக்கு. அதை பிரேக் பண்ணினாதான் நமக்கு அங்க பிளேஸ்மெண்ட் கிடைக்கும்.''

அவன் பேச்சுக்கு பதில் பேச்சை ஷியாமுகுடோவும் தொடங்கியிருந்தார்.

அப்போது அந்த அறைக்குள் எக்ஸ்க்யூஸ் மீ என்கிற பணிவான குரலோடு உள் நுழைந்திருந்தான், ஆபீஸ் பாய் ஜான்சன்.

அறையின் குப்பைக் கூடைகளை காலி செய்வது, அறை முழுக்க ஸ்ப்ரே செய்வது... பிறகு டேபிள் மேல் காலண்டர் தேதி முதல் நேரம் வரை சகலத்தையும் துல்லியமாக செட் செய்வது. ஜான்சனும் தன் அன்றாடத்தை தொடங்கினான். சிவாவும், ஷியாமுகுடோவும் மாறி மாறி பேசிக் கொண்டிருந்தனர். அதையும் நடுநடுவே ஓர் ஓரப் பார்வையால் பார்த்தான் ஜான்சன்.

சிவாவின் சீட் அருகே மட்டும் செல்லாமல் பேசி முடிக்கட்டும் என்று காத்திருக்கத் தொடங்கினான். கையில்

ஒரு நைவான் பிரிகளுடன் கூடிய விளக்குமார். சிவாவும் பேசி முடித்தான்.

பின் நிமிர்ந்து ஜான்சனை பார்த்தபடி எழுந்தான். ஜான்சனும் புரிந்து கொண்டு அவனது சீட்டுக்கு அருகில் உள்ள பிளாஸ்டிக் பேக் குப்பைகளை தான் கொண்டு வந்திருந்த பாலிதீன் பைக்குள் அள்ளிப் போட்டான். பின் டேபிள் காலண்டரில் தேதியை சரி செய்தான். பக்கத்து மைக்கா போர்டையும் சுத்தமாக துடைத்து பளிச்சென்று வைத்தான். இறுதியாக ஜன்னல் அருகே போய் நின்று கொண்டு கண்ணாடிக்கு புறத்தில் தெரியும் இராயபுரம் துறைமுகப் பகுதியை பார்த்துக் கொண்டிருந்த சிவாவுக்கு ஒரு விஷ் செய்து "ஓ.கே. சார்" என்றான். சிவாவும் மெல்ல தன் சீட்டில் போய் அமர்ந்தான். அவன் பார்வையும் தற்செயலாக டேபிள் காலண்டர் மேல் சென்றது. அன்றைய தினம் ஒரு சனிக்கிழமை! அதை உணரவும் அவன் ஹார்ட் பீட்டில் ஒரு வேகமான ஆரம்பம். கண்ணிரண்டிலும் ஊதிவிட்டது போல ஒரு கலக்கம்.

"மை காட்!" -என்றான் சற்று பலமாக.

## 2

***'அந்த ஆஸ்திரேலியப் பெண்மணி முதலில் வியந்தது, நமது வீடுகளின் முன்னால் தினமும் காலையிலும் மாலையிலும் நீர் தெளித்து கோலமிடும் பழக்கத்தைத்தான். அது ஒரு மங்களச் செயலாக அவருக்கு கூறப்பட்டது. ஆனால், கோலமிடுவதில் மங்கலம் மட்டுமில்லை. பெண்களுக்கான உடல் ஆரோக்கியம் மற்றும் எதையும் திட்டமிட்டு செய்யும்***

*சாதுர்யம் இவை ஒளிந்திருப்பதை அவருக்கு விளக்கிய போது அவர் வியப்பின் உச்சிக்கே போனார்.*

*வாசலில் சாணி தெளித்து சுத்தம் செய்வதால் கிருமிகள் அண்டுவதில்லை. அதன்மேல் சூரிய ஒளிபடும் போது ஜீவ வாயுக்கள் உருவாகின்றன. அதோடு அரிசி மாவால் புள்ளிகள் வைத்து கோலமிடுவது கணக்கு போடுவதுபோல ஒரு செயல். அது மறைமுகமாக திட்டமிட்டு எதைச் செய்தாலும் அது அழகாக முடிந்து மனதுக்கும் நிறைவைத் தரும் என்கிற ஓர் உண்மையை ஆழ்மனதில் புதைக்கிறது. அனைத்திற்கும் மேலாக கட்டை விரலும், ஆள்காட்டி விரலும் ஒன்று கூடி கோலமாவை எடுத்து வளைந்து நெளிந்து கோலம் போடும் போது உடம்பும் பலமுறை குனிந்து நிமிர்ந்திட அதுவே மறைமுகமாக ஒரு யோகாசனப் பயிற்சி போல அமைந்து விடுகிறது.*

*இறுதியாக கோலமாவுத் துணுக்குகளை மறு தினத்துக்குள் பல எறும்புகள் தங்களுக்கான உணவாக கருதி எடுத்துச் சென்று விடுவதால் வீட்டு வாசல் என்பது 'கலா ரூபம், சுகாதாரம், உயிர்களுக்கு உதவும் அன்னக் கூடம்' என்று மூன்று விதத்தில் சிறப்படைகிறது. வீட்டு வாசலிலேயே இவ்வளவு சிறப்புகள் அமைந்தால் வீட்டினுள் எவ்வளவு சிறப்புகள் இருக்கும்?'*

ரோஸ்வுட் கதவைத் திறந்து கொண்டு சுந்தர் சிவகுமாரின் அறைக்குள் நுழைந்த போது கம்ப்யூட்டர் மானிட்டரில் சிவா குறியாக இருந்தான்.

"சிவா..." அழைப்பு கேட்டு திரும்பினான். "என்னடா.... நீ வருவே வருவேன்னு உட்கார்ந்துகிட்டே இருந்தேன். நீ

வரவும் இல்லை. 'நான் வரலை'ன்னு ஒரு தகவலும் தரலையே...."

-சுந்தரிடம் சன்னமான கோபம் கலந்த கேள்வி.

சிவா பெருமூச்சு விட்டான்.

"இதோ பார்..... நான் நீ ஜம்னாலால் மாப்ளைன்னு பெருமையாதான் சொன்னேன். அதுல எந்த உள் அர்த்தமும் இல்லை. அது உனக்கு பிடிக்கலைன்னா ஐ ஆம் சாரி. அதுக்காக ஏன் இப்படி என்கிட்ட நடந்துக்கறே..."

"சாரி சுந்தர்... நான் இன்னிக்கு டென்ஷன்ல இருக்கேன்... இதுக்கு மேல எதுவும் பேசாதே..."

"டென்ஷனுக்கு காரணம்...?"

"சாரி... அது என்னோட பர்சனல்..."

"அப்ப அந்த இடம்..."

"வேண்டாம். ஒரு இடமும் எனக்கு வேண்டாம். அதுலையும் இன்னிக்கு சனிக்கிழமை. இன்னிக்கு என் வரைல எந்தப் பேச்செடுத்தாலும் அது உருப்படாது."

-சிவகுமார் தன் பதிலில் சனிக்கிழமையை தொடவும் சுந்தருக்கு சட்டென்று புரிந்து விட்டது.

"ஓ... இன்னிக்கு சனிக்கிழமைல்ல... நான் அதை நினைச்சே பார்க்கலை."

"நானும்தான். ஆபீஸ் பாய் வந்து டேபிள் காலண்டரை கரெக்ட் பண்ணும் போது தான் பார்த்தேன்."

"போகட்டும்... இந்த சனிக்கிழமை ஃபோபியாவுக்கு நீ அப்ப முற்றுப்புள்ளி வைக்கப்போறே?"

"இதை ஃபோபியான்னு சொல்லாதேன்னு எத்தனை தடவை சொல்லியிருப்பேன்."

"இது ஃபோபியா தாண்டா. அப்சல்யூட்லி ஃபோபியா. நீ ஒரு நல்ல டாக்டரைப் பாக்கறதுதான் உனக்கு நல்லது."

"போடா ஃபூல். டாக்டரை பாக்க நான் என்ன பேஷண்ட்டா."

"பின்ன... ஒரு சனிக்கிழமைக்கு பயப்படற நீ ஒரு பேஷண்ட் இல்லாம வேற யாராம்."

"சுந்தர்... போதும் நீ இடத்தை காலி பண்ணு. என்னோட எம்.டி வர்ற நேரம் இது. அவர் கூட எனக்கு ஒரு மீட்டிங் இருக்கு."

"அப்ப நீ இன்னிக்கு என் கூட எங்கேயும் வரமாட் டேன்னு சொல்."

"இன்னிக்கு மிட் நைட் பன்னெண்டு மணிவரை நான் இந்த ஆபீஸை விட்டு அப்படி இப்படி அசையப் போறதில்லை. அதுக்கு பிறகுதான் வீட்டுக்கே கிளம்ப உத்தேசம்."

"இது ரொம்பவே நூமச் சிவா... அதுலையும் உன்னைப் போல ஒரு கோல்ட் மெடலிஸ்ட் இப்படி சனிக்கிழமைக்கு பயப்பட்றது ஆனாலும் நூமச்..."

"இதோ பார் சுந்தர். பல சனிக்கிழமைகளா வேதனையை அனுபவிக்கிறவன் நான். எனக்குத்தான் உண்மை தெரியும்."

"ஓ.கே... அது என்ன உண்மை? அதை சொல்."

"ஊக்... சனிக்கிழமைன்னா தவறாம விபத்து ஏற்பட்டே இருந்து. ஒரு காயமாவது பட்டுடுது. அதுமட்டுமில்ல நான் ஒரு கனவு கண்டேன். அதுல ஒரு கறுப்பு உருவம் வந்தது. அது என்னைப் பார்த்து 'ஒரு சனிக்கிழமைதான், உன் முடிவு தினம்'னு சொன்னிச்சு. எனக்கு எப்படி இருக்கும்னு யோசிச்சுப்பார்..."

"ஏதாவது மர்மக் கதை படிச்சியா... இல்ல பயமுறுத்தும் ஓமன், எக்ஸார்ஸிஸ்ட் டைப் சினிமா பார்த்தியா?"

"போதும் சுந்தர்... நீ புறப்படு! உன்னோட கவுன் சிலிங்கை அப்புறமா வெச்சுக்கோ. நான் சுடுகாட்டுக்கு தனியா போய்ட்டு அங்கேயே படுத்து தூங்க முடிஞ்ச அளவு தைரியமுள்ளவன். மரணம்கறதை ஒரு மாற்றமா மட்டுமே நினைக்கிறவன். எனக்கு வந்த கனவு பயத்தால வந்ததில்லை..."

"பிறகு?"

"சாரி... அதைப்பற்றி பேச இது நேரமில்லை. நீ இடத்தை காலி பண்ணு."

-சிவகுமார் சீறியபடியே அறையின் கதவுப் பகுதியை சுந்தருக்கு காட்டினான். சுந்தரும் அரைமனதாக நடந்தான்.

கதவைத் தொட்டபடியே திரும்பியவன்-

"ஆமா... நீ இந்த அறைக்குள்ளே அடைஞ்சு கிடந்தா மட்டும் உனக்கு எதுவும் ஆயிடாதா?"

-என்று கேட்க சிவகுமாரிடம் ஒரு தடுமாற்றம்.

"உன்னைத்தான் சிவா... இங்கேயே நீ இருந்தா மட்டும் உனக்கு எதுவும் ஆயிடாதா?"

"தெரியல..."

"சரி, போன சனிக்கிழமை என்ன நடந்தது?"

"விடமாட்டேங்கறியே... ப்ளீஸ் எல்லா விஷயங் களையும் நாளைக்கு வீட்ல பேசுவோமே."

"சரி... நான் நைட் பன்னிரண்டு மணிக்கு வரேன். அதுக்கு பிறகு தான் உனக்கு பயமில்லையே. ஏதாவது ஒரு ஸ்டார் ஹோட்டலுக்கு போய் ட்ரிங்க்ஸ் எடுத்துப்போம். அப்ப சொல்லு உன் சனிக்கிழமை சங்கடங்களை..."

"கேட்டு என்ன பண்ணப்போறே?"

"அதுல எந்த அளவு உண்மை இருக்குன்னு பாக்க றேனே..."

''இல்ல சுந்தர்... இதுல நீ தலையிடாதே! இதை நான் பார்த்துக்கறேன்.''

''சிவா... எதுக்கு இந்த காம்ப்ளெக்ஸ்? நான் உன் நண்பன்டா. நண்பன்னா யாருடா? ஆபத்து காலத்துல உதவுறவங்கதானே...?''

-சுந்தர் மடக்க சிவாவும் மடங்கினான். ''ஓ.கே... நைட் வா.'' என்றான்.

நிரோஷா பார்ப்பதற்கு அவ்வளவு ஜில்லென்று இருந்தாள். உடம்பு என்பது அழியப் போகிற ஒன்றுதான். அதற்கு வியர்வை, அழுக்கு என்கிற எல்லாமும் உண்டு. கூடவே நரை திரை மூப்பு என்பதையும் சேர்த்துக் கொள்ளலாம்.

ஆனால், நிரோஷாவை பார்க்கும் போது அதெல்லாம் தோன்றவே தோன்றாது.

'பளிச்சென்ற முகம்
பளபளப்பான கண்கள்
கறுப்புப் பட்டு நூல் போன்ற கூந்தல்
புசுபுசு கன்னம்
ரோஸ் நிற உதடுகள்
வாளிப்பான கழுத்து
ஆரஞ்சு மார்பு
கயிறு போட்டு கடையத் தூண்டும் இடுப்பு
ஒரு மலைப்பாதை வளைவு போல பின்புறம்
பாதம் தெரியாதபடி தழைந்து கிடக்கும்
புடவை கட்டு' -என்று நிரோஷா உலுக்கி எடுத்தாள்.

லண்டனில் பிறந்தவள். வயிற்றுக்குள் இருந்த போதும் சரி, அதற்கு பிறகும் சரி, குங்குமப் பூவிலேயே ஊறியவள்.

புஷ்டி என்றால் அப்படி ஒரு புஷ்டி!

இதனால் இளமை, அவள் மேனி மேல் ஒரு கொடிக்கு இரண்டு கொடியாக கட்டி பறந்தபடி இருந்தது.

அவளும் பால்கனியில் நின்று கொண்டிருந்தாள்.

புறத்தில் அபார்ட்மென்ட் பிள்ளைகள், 'திருடன் போலீஸ்' விளையாட்டு விளையாடிக் கொண்டிருந்தனர். அதை ரசித்தபடியே நின்று கொண்டிருந்தாள். அபார்ட்மென்ட் முகப்பு ஒரு ஃபவுண்டைன் நீர்க்குளத்தோடு இருந்தது. அதன் கைப்பிடி சுவர் மேல் ரிட்டயர்ட் கேசுகள் அமர்ந்து அரட்டிக் கொண்டிருந்தனர். அதில் ஒரு கிழடு நிரோஷாவை பால்கனியில் பார்த்து விட்டு தன் எதிரே உள்ளவரையும் தூண்டி விட்டது.

"கிரேட் ஜம்னாலால் பொண்ணு பால்கனில நிக்கறா பாரு."

"நான் பாத்துட்டேன். கோடி கோடியா பணம் இருந்தும் அதோட தலை எழுத்தைப் பார். இங்க தனியா அது கொட்டு கொட்டுன்னு நின்னுகிட்டிருக்கிறது."

"இந்த காலத்துப் பசங்களுக்கு ஆனாலும் தைரியம். பெத்த அப்பன் சொத்து சுகம்னு அவ்வளவையும் தூக்கிப் போட்டுட்டு ஓடி வந்துட்டாளே இந்த பொண்ணு. தைரியம்தான்."

"அட போய்யா நீ ஒண்ணு. இவ ஓடி வந்தாதான் என்ன, வராட்டி தான் என்ன? ஜம்னாலால் சொத்து அவ்வளவும் இவளுக்குதான். இவ புருஷனும் கை நிறையதான் சம்பாதிக்கறான். என்ன குறை?"

"என்ன குறையா? நீ என்னத்த பாக்கறே...? அப்பா கூட இருந்தவரை இவளை சுத்தி நூறு வேலைக்காரங்க. ஆனா, இங்க இந்த பொண்ணு தான் எல்லா வேலையும் பாக்கறா. அடுப்புல வெந்நீர் போடத் தெரியாது. அப்படிப்பட்ட

பொண்ணு, தினம் மூன்று வேளை இங்கு அடுப்புல வேகறாய்யா... எல்லாம் காதல் கல்யாணம் படுத்தறபாடு..."

"இருக்கலாம்... ஆனா இது ரொம்ப நாள் நீடிக்காது பார்."

"அப்படின்னா...?"

"ஜம்னாலால் சென்ட்ரல் கவர்மென்ட்லயும் செல்வாக்கான ஆள். கம்யூனிஸ்ட்டுங்க கூட ஜம்னாலால்னா நல்ல ஸ்னேகமா தான் இருக்காங்க. அதனால தன் பொண்ணு இப்படி நாமல்லாம் பாக்க கஷ்டப்பட்றதை நிச்சயம் அனுமதிக்க மாட்டாரு. கூடிய சீக்கிரமே அந்த பொண்ணு அப்பாவோட சமாதானமாயிடுவா பார்..."

–ஃபவுண்டைன் மதில்சுவர் மேல் அமர்ந்திருக்கும் கிழடுகள், தான் வெளியே நிற்பதை வைத்து இப்படி பல கோணங்களில் அலசிக் கொண்டிருப்பது நிரோஷாவுக்கு சுத்தமாய்த் தெரியவில்லை.

அவளுக்கு பயங்கரமாய் போரடித்தது.

சற்று உள்ளே வந்து செல்போனில் சிவகுமாரை கூப்பிட்டாள்.

"டார்லிங்..."

"சொல்லு டியர்!"

"இங்க எனக்கு பயங்கர போர் அடிக்குது."

"அதுக்கு என்னை என்ன பண்ணச் சொல்றே?"

"சீக்கிரமா கிளம்பி வாங்க. நாம எங்கேயாவது வெளியே போய்ட்டு வரலாம்."

"சாரி டியர். இன்னிக்கு சனிக்கிழமை. நான்தான் மறந்துட்டேன். தீரமா?"

–அவன் ஞாபகப்படுத்தவும் அவளுக்கு சுருக்கென்றது. அதன்பின் அவனிடம் பெரிதாய்ப் பேச்சு இல்லை.

"டார்லிங்... நீ அநாவசியமா பயப்படாதே! நான் இன்னிக்கு நைட் பன்னெண்டு மணி முடிஞ்ச உடனேயே வீட்டுக்கு வரேன். சுந்தரும் வரேன்னு சொல்லியிருக்கான். மூணு பேரும் நைட். எதாவது பார்ட்டி ஹாலுக்கு போவோம்."

"மிட் நைட்லயா...?"

"வேற வழி..."

"அதுவரை....?"

"டி.வி.பார்... புக் படி...!"

"சாரி டியர்... டி.வி. பார்த்துப் பார்த்து கண் வலிக்குது. அதுலையும் சில விளம்பரங்கள் திரும்பத் திரும்ப வந்து டார்ச்சர் பண்ணுது."

"சரி... உன் விருப்பப்படி என்ன செய்யத் தோணுதோ செய்."

"இப்படியே இந்த சனிக்கிழமை பயம் எத்தனை நாளைக்குங்க?"

"சுந்தர் வர்றான்.... பேசி ஒரு முடிவு எடுப்போம்."

-அவன் ஒரு தற்காலிக முடிவுக்கு வர- நிரோஷாவும் ஒரு முடிவுக்கு வந்தாள். எங்கிருந்தோ கோயில் மணி சப்தம் காதில் விழுந்து அவளைத் தூண்டியது. அவளுக்குள்ளும் 'கோயில் வரை போய் வந்தால் மனதுக்கு சற்று தெம்பாய் இருக்கும்' என்று தோன்றியது. புறப்பட்டு விட்டாள்!

## 3

**'அந்த பெண்மணியை வியப்படைய வைத்த அடுத்த விஷயம் நமது குடும்பப் பெண்கள் வீட்டிக்**

சமைக்கும் முறை. குறிப்பாக ஆட்டுக் கல்லில் மாவு ஆட்டி அதை வழித்தெடுப்பதும், மொத்த வீட்டையும் கூட்டுவதும், பின் கொல்லைப் புறத்தில் உள்ள கிணற்றின் சகடையில் நீர் இறைப்பதும், துணி துவைப்பதும் என்கின்ற அடுக்கடுக்கான செயல்பாடுகள்... இவை ஒவ்வொன்றுமே ஒருவித உடற்பயிற்சி. துணி துவைப்பது கைக்கும் விரல்களுக்கும் பயிற்சி என்றால், தண்ணீர் இழுப்பது மூச்சுப் பயிற்சியாக அமைகிறது. வீடு கூட்டுவது இடுப்புக்கு பயிற்சியளிக்கிறது. இவ்வளவையும் செய்து விட்டு இறுதியில் பூஜை அறையில் நெய் விளக்கேற்றி வழிபடுவது என்பதுதான் உச்சக்கட்டம்.

நெய்விளக்கு, நைட்ரஜன் ஆக்ஸைட் கதிர்களை வெளியேற்றுகிறது. அது பரவும் இடத்தில் தவறான அணுக்கதிர் வீச்சுக்கு இடமேயில்லை. இப்படிப்பட்ட பெண்களின் கர்ப்பப்பை மிகவும் வலிமையுடையதாகவும் செறிவோடும் இருப்பதுதான் சிறப்பு. இதனால் இவர்களின் கருப்பைகளில் உருவாகும் குடும்ப வாரிசுகளின் ஆரோக்கியத்தில் ஒரு குறையும் இருக்க வாய்ப்பில்லாது போய் விடுகிறது.

இப்படிப்பட்ட பணிகள் எதுவும் செய்யாமல் டி.வி. பார்ப்பது, சாப்பிடுவது, தூங்குவது என்றாகி விட்ட பெண்களின் கருப்பைகள், மயோமா என்னும் கட்டிக்கு இடமளித்து இரத்தப் பெருக்கையும் உருவாக்கி ஒரு கட்டத்தில் கர்ப்பப்பையையே வெட்டி எடுத்துவிட வேண்டி வந்து விடுகிறது.

பெண்மையின் ஆதார சக்தியும் ஆக்க சக்தியும் கர்ப்பப் பையின் சரியான செயல்பாட்டில்தான் உள்ளது. அதன் ஆரோக்கியத்தை மையமாக வைத்தே அவர்களை வீட்டு வேலைகளில் ஈடுபடுத்திய நம்

*முன்னோர்களின் ஞானம், அந்த ஆஸ்திரேலிய பெண்மணியை பெரிதும் வியப்பிலாழ்த்தியது!*

ஜம்னா மில்ஸ்!

மும்பையின் மிகப் பெரிய மில்களில் ஒன்றான ஜம்னா லால் மில்லில் கார்ப்பரேட் ஆபீஸ், பைகுல்லா பகுதியில் உயரமான கட்டிடப் பகுதியாக காட்சியளித்தது.

அதன் மையத்தில் உச்சியில் ஒரு வெண்கல சிங்கம் பாய வருவது போன்ற சிலை!

ஓங்கி உயர்ந்த வேல்கம்புகளால் தொகுக்கப்பட்ட மெயின்கேட்.

தடதடவென்று செக்யூரிட்டி வாட்ச்மேனால் திறக்கப் பட்ட அந்த கதவை, ஒரு பென்ஸ் கார் கடந்து சென்றது.

காருக்குள் இருந்து முகப்பு போர்ட்டிகோ பகுதியில் ஒரு ஃபர்தா அணிந்த பெண் ஒருத்தி இறங்கினாள்.

அவளை மரியாதையாக ஒருவன் வந்து உள்ளே அழைத்துச் செல்லத் தொடங்கினான்.

வழியெங்கும் இராஜஸ்தானின் பளபளப்பான வயலட் நிற மார்பிள். சில்லென்ற சிலுசிலுப்பு காலை அப்பி எடுத்தது. சென்ட்ரலைஸ்டு ஏ.சி.யின் இதமான வியாபிப்பு ஒரு சுகமான மூட்டை உருவாக்குவது போலவும் இருந்தது. இறுதியாக அந்தப் பெண் ஓர் அறைக்குள் நுழையவும் கதவு தாழிட்டுக் கொண்டது.

உள்ளே...

அந்த அறை கண்ணாடி இழைத்தது.

சோபாவும் மேடாவும் மட்டுமே பல லட்ச ரூபாய் மதிக்கலாம். தொங்கியபடி இருந்த லஸ்தர் விளக்குகளில் மஞ்சளாய் ஒளிவெள்ளம்.

அறையில் அங்கங்கே பட்டு திரைச்சீலை சுருட்டிக் கொசுவம் போல கட்டப்பட்டிருந்தது.

சுவர் எல்லாம் பால்போல ஒரு வெண்மை. வெண்ணெய் போல ஒரு பளபளப்பு.

நிர்வாணமாய் ஒரு ரோமாபுரிப் பெண்ணின் சிலை ஒன்று மையத்தில் இருக்க அவளின் மார்பகங்கள் மேல் மட்டும் ஒரு ரிப்பன் கட்டப்பட்டு பார்ப்பவர் கவனமும் அந்த பாகத்தின் மேல்தான் சென்றது.

அவளும் அங்கு கிடந்த சோபா ஒன்றில் போய் அமர்ந்தாள். அவள் வரையில் ஒரு மெதுமெதுப்பில் புதைவது போலவும் இருந்தது.

அவள் மெல்ல தன் பர்தாவை விலக்கினாள்.

அப்போது அவளுக்காக ஒரு கண்ணாடி தம்ளரில் ஆப்பிள் ஜூஸ் எடுத்து வந்த பணியாளன், அவள் முகத்தைப் பார்த்து சற்று விக்கித்துப் போனான்.

அவள் பம்பாய் திரை உலகின் படுபயங்கர கவர்ச்சிக் கன்னி ஸ்ரேயா சௌத்ரி!

அவளது ஓர் ஆட்டத்துக்கு மட்டுமே ஐம்பது லட்ச ரூபாய் சம்பளம்!

அவனுக்கு அந்த நொடியே அவளது ஃபர்தாவுக்கு காரணம் புரிந்து விட்டது.

ஃபர்தா ஒரு புனிதமான உடை. பெண்மைக்கும் அவள் கற்புக்கும் அது ஓர் அரண்.

இங்கே இவள் வரையில் ரசிகர்களின் பார்வைக் கற்பழிப்பில் இருந்து தப்பித்துக் கொள்ள அது ஒரு சாதனமாக பயன்படுவதை அவனும் கவனித்தான்.

கவனித்தபடியே தான் ஆப்பிள் ஜூஸை நீட்டினான்.

அப்படியே "உங்களை பாஸ் காத்திருக்க சொன்னாரு... அஞ்சு நிமிஷத்துல வந்துடுவேன்னாரு..." என்றான்.

"நீ அவர் பி.ஏ.வா...?"

"இல்லம்மா... நான் இந்த ஆபீஸ் செக்யூரிட்டி ஆபீசர்."

"ஓ.... நான் வந்துருக்கறது யாருக்கும் தெரியக்கூடாது. அது தெரியும் தானே உனக்கு?"

"பாஸ் சொல்லியிருக்காரும்மா..."

"ஜாக்ரதை...! நான் உன் பாஸை பார்க்க வந்த தகவல், எந்த பத்திரிகைல வந்தாலும் சரி... உன் சீட்டு கிழிஞ்சிடும்."

"நான் எதுக்கும்மா அதை எல்லாம் சொல்லப் போறேன்?"

"குட்... ரூமுக்குள்ள யாரையும் விடாதே..."

அவள் அதட்டலாய்ப் பேசி அவனை அனுப்பிவிட்டு தன் கனி உதட்டால் அந்த கனி ரசத்தை சூப்பத் தொடங்கினாள். அதில் கூடுதலான சர்க்கரைக் கலப்பு.

அவளுக்கு மொத்த உடல் பாகத்திலும் ஓர் இனிய கூச்சத்தை அது ஏற்படுத்தியது.

அதன்பின் சரியாக ஐந்தாவது நிமிடம் இந்தியாவின் டெக்ஸ்டைல் உலகின் சிங்கம் எனப்படும் ஜம்னாலால் அந்த அறைக்குள் நுழைந்தார். வட இந்தியர்களுக்கே உரிய ஷெர்வானி உடை மேலே வெஸ்ட், தலையில் புசு புசு எம்.ஜி.ஆர். தொப்பி, கண்களில் கோல்ட் ஃப்ரேம் கூலிங் கிளாஸ்.

சற்று கேட்காத காது அவருக்கு என்பதற்கு அடையாளம் போல காது மடலில் நவீன ஹியரிங் எய்டின் மினி ரிசீவர்.

"ஹாய் ஸ்ரேயா..." அவர் அருகில் வந்து அமர்ந்தார். அவள் உற்சாகமாகி மொத்த பர்தாவை விலக்கினாள். அவள் மார்பில், பெயருக்கு ஒரு ரவிக்கை. அவிழ்ந்து

விழுவது போல இடுப்பில் ஒரு சுருக்குச் சேலை. ஜம்பாலாவுக்குள் விர்ரென்று ஒரு தாங்க முடியாத அளவுக்கு காம மின்சாரம் பாய ஆரம்பித்தது. அருகே மேடா மேல் ஒரு ரிமோட் இருந்தது. அதை எடுத்து டோர் பக்கம் காட்டி பட்டனை அழுத்தினார். கதவு ஆட்டோ லாக் ஆகியது. இனி யாராலும் கதவைத் திறந்து கொண்டு வர முடியாது.

"இப்படி திருட்டுத்தனமா வந்து பாக்கறது எவ்வளவு சங்கடமா இருக்கு தெரியுமா?" அவள் அவர் மடி மேல் ஏறி அமர்ந்து கொண்டு கழுத்தை வளைத்துக் கட்டிக் கொண்டாள்.

அவரிடம் ஓர் அழுத்தமான மௌனம் தொடர்ந்தது.

"என்ன டார்லிங்... ஏன் இறுக்கமா இருக்கீங்க? எனி பிராப்ளம்?"

"பிராப்ளம்தான்... ஆனா எப்படி சொல்றதுதான்னு தெரியல..."

"என்ன டார்லிங்... பிடிகை பலமா இருக்கே."

"ஷ்ரேயா... நான் நிரோஷா பற்றின கவலைல இருக்கேன். அதைக் கொஞ்சம் புரிஞ்சுக்கோ..."

"அவளை மறந்து தலை முழுகிட்டதா சொன்னீங்க?"

"அப்படி எல்லாம் பண்ண முடியாது. வக்கீல் வந்து சொன்ன விஷயங்கள் அப்படி."

"தெரியுது. தாத்தா சொத்து பேரனுக்கோ, பேத்திக்கோ... அதானே?"

"அதுமட்டுமில்ல... என்னோட ஜெய்ப்பூர் பேலஸ், அபு மௌன்டைன் எஸ்டேட், பிலாய் ஃபேக்டரின்னு எல்லாமே அவபேர்லதான் இருக்கு. அவதான் அதுக்கு சேர்மன் அண்ட் மேனேஜிங் டைரக்டர். போர்டு மீட்டிங் வேற கூடப்போகுது. அப்ப அவ வந்தே தீரணும்."

"இப்ப என்ன... அவளைக் கூப்பிட்டு சாமர்த்தியமா எல்லாத்தையும் நீங்க எழுதி வாங்கிட்டு துரத்தி விட்டு டுங்க..."

"ஏன் துரத்தி விடணும்? கூடவே இருந்துட்டு போகட்டும். ஆனா அவதான் வரமாட்டேங்கறா..."

"காரணம்?"

"சொன்னா அதிர்ச்சியடைய மாட்டியே...?"

"அது எனக்குத் தெரியாது. நீங்க சொல்லுங்க முதல்ல."

"அவளுக்கு உனக்கும் எனக்குமான உறவு தெரிஞ்சிருக்கு."

-ஜம்னாலால் ஏதோ ரகசியத்தை கூறுவதுபோல கூறினாலும் ஸ்ரேயா அதை கேட்டு அதிரவில்லை.

"என்ன ஸ்ரேயா... உனக்கு இந்த விஷயம் தெரியுமா?"

"உம்..."

"ஆச்சர்யமாயிருக்கே..."

"ஆச்சரியப்பட என்ன இருக்கு. நான் உங்களோட ஸ்விட்சர்லாந்து வந்ததை யாரோ அங்க இருந்து உங்க மகளுக்கு போட்டு விட்டுட்டாங்க. அதை கேட்டுட்டு அவளே எனக்கு போன் பண்ணி பேசினா. 'தயவு செய்து எங்கப்பாவை விட்டுடு உனக்கு நான் எவ்வளவு பணம் வேணாலும் தரேன்' னு அழுதா!"

ஸ்ரேயா சௌத்ரி ஒரு புதிய தகவலை ஜம்னாலாலிடம் சொல்லத் தொடங்க-அவர் முகத்தில் பதில் அதிர்வுகள்!

"என்ன டார்லிங்... நான் சொல்றதை நம்ப முடியலியா?"

"இல்ல ஸ்ரேயா... நிரோஷாவுக்கு உன் விஷயம் தெரியாதுன்னுதான் நான் நினைச்சிருந்தேன். ஆனா நீ இப்ப சொல்லும்போது தான் புரியுது."

"அவ காதலுக்காக மட்டும் காதலனோட ஓடலை. நம்ம விஷயமும் ஒரு காரணம்."

"நீ சொல்றது உண்மையா இருந்தா அவ என்கூட இருந்துல்ல போராடணும். ஏன் காதலனோட ஓடிப் போகணும்?"

"அதுக்கு பதிலையும் நானே சொல்லிடட்டுமா?"

"உனக்கு தெரியுமா?"

"ரொம்ப சிம்ப்பிள் டார்லிங். என் வரைல நிரோஷா என்னை வெறுக்க அவ காதலன் தான் காரணமா இருக்கணும்."

"அது எப்படி அவ்வளவு தீர்க்கமா சொல்றே?"

"இது ஒரு சாதாரணமான கணக்கு. அஞ்சும் மூணும் எட்டுங்கற மாதிரி ஒரு சின்ன விஷயம்தான். அந்த பையன் 'உங்களுக்கு பிறகு உங்க அவ்வளவு சொத்துக்கும் அவன் தான் வாரிசு' ன்னு கணக்குப் பண்ணியிருக்கான். அதுக்கு போட்டியா நான் வந்தா விடுவானா...? நமக்கு ஒரு குழந்தை பிறந்தா அப்புறம் அதுவும்ல வாரிசா மாறிடும்..."

"இந்த வயசுல எனக்குக் குழந்தையா?"

"ஒய் நாட் டார்லிங்? இப்பல்லாம் மெடிக்கல் சைன்ஸ் எங்கயோ போயிடிச்சு. உங்க விந்துவை எடுத்து எனக்குள்ள வெச்சு செயற்கை முறைலயே என்னைத் தாயாக்க நம்ம மும்பைல மட்டுமே நாற்பதுக்கும் மேல டாக்டர்ஸ் தயாரா இருக்காங்க. டு யூ நோ...?"

-ஸ்ரேயா செளத்ரி ஜம்னாலாலின் மார்பு மேல் தன் மார்புகள் அழுத்த குழைவாக பேசியது ஜம்னாலாலை என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்தது. ஜம்னாலாவின் கண்களிலும் காம போதை ஏற ஆரம்பித்தது. அதை கச்சிதமாக கவனித்து அந்த மாபெரும் தொழிலதிபரின் காதுகளில் கிசுகிசு குரலில் கேட்டாள்:

"டார்லிங்... எனக்கு ஒரு குழந்தை வேணும். தருவீங்களா?" ஜம்னாலாலும் பதிலுக்கு அவளை இறுக்கி அமுக்கிப் பிடித்தார்.

## 4

ஆஸ்திரேலியப் பெண்மணியின் ஆய்வில் அடுத்தடுத்த கட்டங்கள் மிக சுவாரஸ்யமானவை. அதில் பெண்கள் செவ்வாய், வெள்ளியில் எண்ணெய் தேய்த்து தலைமுழுக்கு போடுவதும் ஒன்று. நல்லெண்ணெயில் ஊறிக் குளிப்பது என்பதே அந்த பெண்ணுக்கு ஓர் அதிசயமான விஷயமாகத்தான் தோன்றியது. அந்த பெண்ணே குளித்தும் பார்த்த போதுதான் அதன் சுகமும் விளங்கியது. அன்றெல்லாம் மிக ஆழ்ந்த உறக்கம். கண்களிலும் அப்படி ஒரு குளிர்ச்சி. ஜலதோஷம் கூட பிடித்துக்கொண்டது. பிறகுதான் அந்த பெண்மணிக்கு பல புதிய செய்திகள் தெரிய வந்தன. வீட்டு வேலைகளால் உண்டாகும் உஷ்ணத்தை -குறிப்பாக அடுப்படியில் விறகு அடுப்பு அருகே அமர்ந்து சமைக்கும் போது உருவாகும் வெப்பத்தை தணிக்கத்தான் எண்ணெய்க் குளியல். எல்லாவற்றுக்கும் மேலாக உடம்பின் ரோமக் கால்கள் நல்லெண்ணெயால் நெகிழ்ந்து போகின்றன. தோலிலும் பளபளப்பு கூடுகிறது. உடம்பு வெளியிடும் வெப்பம் குறைகிறது. இந்த எண்ணெய்க் குளியலையும் செவ்வாய், வெள்ளி என்று வைத்ததன் பின்னே ஒரு நுட்பமான காரணம் இருந்தது. பெண்களுக்கு செவ்வாய், வெள்ளி என்றால்-ஆண்களுக்கு புதனும் சனியும். இதனால் ஒரு குடும்பத்தில் ஆணும் பெண்ணும் தாம்பத்ய சுகத்தில் ஈடுபடும் போது ஒரு

*குளிர்ந்த உடல் ஒரு வெப்ப உடல் என்கிற சேர்க்கை நிகழ்கிறது. இது கருச்சேர்க்கைக்கும் பெரிதும் உதவுகிறது. இந்த என்னெய்க் குளியலை அடுத்து பொட்டு வைத்துக் கொள்ளும் அந்த கலாசாரம்.*

*புருவ மையத்தில் மஞ்சள் மற்றும் செந்தூரம் கலந்து உருவாக்கப்பட்ட குங்குமம் இரு விதங்களில் செயலாற்றுகிறது. ஒரு பெண்ணைப் பார்ப்பவரின் பார்வைத் தாக்கத்தை குங்குமப் பொட்டு சிதற அடிக்கிறது. கழுத்து உடம்பில் புருவ மையத்தில்தான் ஆக்ஞா சக்கரம் உள்ளது. அது அங்கு தேங்கும் துர்நீரை உறிஞ்சி ஆவியாக்கி அந்த பாகத்தை பாது காக்கிறது. இதனால் பார்வைக் கோளாறு தவிர்க்கப் படுவதோடு நுட்பமாக சிந்திக்கும் ஆற்றலும் வளர்கிறது.*

*இப்படி ஒவ்வொன்றுள்ளும் ஒரு நுட்பமான காரணம்!*

எட்டு மணி இருக்கும்!

ஆபீஸே காலியாகி விட்டிருந்தது. சிவகுமார் மட்டும் சீட்டில் இருந்தான். இறுதியாக ஆபீஸ் பாய் எட்டிப் பார்த்தான்.

"என்ன ஜான்சன்?"

"நான் கிளம்பட்டுமா சார்."

"ஓ.கே... நீ கிளம்பு."

"சார். எப்ப கிளம்புவீங்கன்னு தெரியல..."

"எனக்கு லேட்டாகும். நீ போ... நான் செக் யூரிட்டிகிட்டே சாவி கொடுத்துடுவேன்."

"அவசியம் இல்ல சார். E.D.P. செக்ஷன்ல இன்னிக்கு நைட் ஷிஃப்ட் பாக்குறாங்க."

"ஒண்ணு பண்ணு... எனக்கு சரவணபவன்ல டிபன் வாங்கிக் கொடுத்துட்டு போ..."

"சரி சார்..."

அந்த ஜான்சன் அடுத்த நொடியே கதவை மூடிக் கொண்டு கிளம்பினான். சிவக்குமாரும் மானிட்டரில் சலனமாகினான். களைப்பாக இருந்தது.

அறையில் ஏ.சி. குளிரை மீறிக் கொண்டு ஒருவித கசகசப்பும் சோர்வும் ஆட்கொண்டு வளைத்தது. சுழல் நாற் காலியை விட்டு எழுந்து நின்றான். சோம்பல் முறித்தான்.

விருந்தினர்களுக்கான செந்நிற சோபா அவனை அழைத்தது. அதில் போய் விழுந்தான். பக்கத்தில் ரிமோட் எடுத்து அழுத்தினான்.

டி.வி. திரையில் ஒரு சினிமா பாடல்!

கதாநாயகி, நிரோஷாவை ஞாபகப்படுத்துவது போல இருந்தாள். அவனுக்குள்ளும் நிரோஷாவைப் பற்றிய எண்ணம், அலை அலையாக சுருள் சுருளாக பின்னோக்கி சென்றது.

அது ஒரு வர்த்தக கண்காட்சி. டெக்ஸ்டைல் வர்த்தக கண்காட்சி. மும்பையின் அந்தேரியில் என்ஜினியரிங் கல்லூரியின் ஆடிட்டோரியம் ஹாலில் நடப்பது வழக்கம். அந்த கண்காட்சியில் கோயம்புத்தூர் தீபா டெக்ஸ்டைல்ஸ் சார்பில் ஓர் அரங்கம் அமைக்கப்பட்டிருந்தது. அந்த அரங்கில் தீபா டெக்ஸ்டைல்ஸின் தரமான அவ்வளவு தயாரிப்புகளும் பார்வைக்கு வைக்கப்பட்டு ஏற்றுமதி ஆர்டர் புக்கும் அங்கு வைக்கப்பட்டிருந்தது.

நேர் எதிரில்தான் ஜம்னாலாலின் ஜம்னாமில்ஸ் அரங்கம். தீபா டெக்ஸ்டைல்ஸ் அரங்கம் போல பத்து மடங்கு பெரிய அரங்கு அது. நுழைவாயிலில் ஏர்ஹோஸ்டஸ் பெண்மணி களைப் போல வரவேற்பாளப் பெண்மணிகள். உள்ளே

அனைவருக்கும் விலைமதிப்புடன் கூடிய கிஃப்ட்டுகள். பிசினஸ் என்கொயரி செய்பவர்களுக்கு மட்டும் அதிர்ஷ்டக் குலுக்கல் முறையில் பரிசுகள் என்று ஒரே தடபுடல்.

அரங்குக்கு ஒருநாள் ஜம்னாலாலும் விஜயம் செய்தார். அவரது வருகையை ஒரு கடவுளின் வருகை போல அமர்க்களப்படுத்தி விட்டனர். யானை மாலை போட, ரோஜா மலர்கள் டன்டன்னாக இறைக்கப்பட ஜம்னாலால் விஜயம் நிகழ்ந்தது. கூடவே வந்திருந்தாள் நிரோஷா! தேவதை என்கிற வார்த்தைக்கு இலக்கணம் எழுதினாள். பொதுவாகவே மும்பைப் பெண்கள் நல்ல அழகிகள். காரணம் அவர்களின் உணவுப் பழக்கவழக்கம். பாலும், கோதுமையும் தோலை வெண்மையாக்குவதில் முன் நிற்பதுதான் காரணம்.

நிரோஷா அந்த வெண்மையிலும் வெண்மையாக சொட்டு நீலம் போட்டவள் போல இருந்தாள். ஜம்னாலால் வந்து போன பிறகும் நிரோஷா அரங்கத்தில் இருந்தாள்.

சரியான கூட்டம்!

அவ்வளவு பேரும் விமானம் ஏறி வந்தவர்கள். சமுதாயத்தில் வி.ஐ.பி. அந்தஸ்த்தில் உள்ளவர்கள். சிவகுமார், தீபா டெக்ஸ்டைல் மில்லின் பிரவுஷரை கொத்தாக கையில் வைத்துக் கொண்டு வருவோர் போவோருக்கெல்லாம் விநியோகித்துக் கொண்டு இருந்தான். கோட் சூட்டில் பார்க்க லட்சணமாக நல்ல ஆங்கிலமும் அங்கங்கே ஹிந்தியும் பேசி அவன் செயல்பட்ட விதத்தை தன் அரங்கிற்குள் இருந்தபடியே நிரோஷாவும் பார்த்துக் கொண்டுதான் இருந்தாள். ஏதோ ஒரு வகையில் முதல் பார்வையிலேயே சிவகுமார் அவளைக் கவ்விப் பிடித்தான். அப்பொழுதுதான் அந்த விபரீதமும் அங்கே அரங்கேற ஆரம்பித்தது. அந்த அரங்கத்தின் ஒரு

புறத்தில் குபீர் என்று தீ! கும்மென்று கரும்புகை உட்புறமாக மண்டிக் கொண்டு வரவும் ஆளுக்கு ஆள் ஓட்டமெடுக்கத் தொடங்கினர். நிரோஷாவும் ஓடினாள்... அந்த புகைக்கும் ஜனசந்தடிக்கும் நடுவில் அவளால் சிவகுமாரின் அரங்கத்துக்குள் தான் புக முடிந்தது. அந்த நிலையிலும் சிவகுமார் அவளை அந்த அரங்கின் பாதுகாப்பான ஓர் இடத்தில் போய் நிற்கச் சொல்லிவிட்டு. 'தீயை அணைக்க வழி உண்டா' என்று பார்க்கத் தொடங்கினான்.

ஆனால், உயிருக்குப் பயந்த கூட்டத்தின் அசுர பாய்ச்சலில் அதற்கெல்லாம் இடமே இல்லாமல் போய்விட்டது. சிலர் இரும்புக்கிராதி கூரைமேல் ஏறி ஆஸ்பெஸ்டாஸ் ஷீட்டை உடைத்துக் கொண்டு அதன் வழியாகவெல்லாம் தப்பிக்கப் பார்த்தனர்.

அந்தக் களேபரத்தில் நிரோஷாவைப் பற்றி யோசிக்கக் ஒருவர்கூட இல்லை. சிவகுமாரை அவள் நிலைதான் வெகுவாக யோசிக்க வைத்தது.

நடுங்கியபடி ஒரு மூலையில் நின்றவளை தேடிப்போய் தன் கரத்தை நீட்டி பிடித்துக் கொள்ளச் சொன்னான். அப்படியே தலைதெறிக்க ஓடுவோர் நடுவில் அவளுடன் அவனும் ஓடி அவளோடு அவன் வெளியே வந்த போது காத்திருந்தது போல அவனை மயக்கம் வந்து ஆட்கொண்டது. அவன் கை கால்களிலும் தீக்காயங்கள்!

மும்பை தினசரிகள் அந்த தீ விபத்தை ஒரு திட்டமிட்ட சதியாகவே எழுதின. 'எதிரிகள் மும்பை மில் தொழிலாளிகள் அவ்வளவு பேரையும் ஒரே நாளில் ஒருமணி நேரத்தில் சாம்பலாக்கிப் பார்க்க ஆசைப்பட்டதாக' பரபரப்பான செய்திகளை டி.வி. செய்தி நேரத்தில் வாசித்தார்கள்.

யார் யாரை எல்லாம் குறிவைத்து இந்த தீவிபத்து உருவாக்கப்பட்டது என்கிற லிஸ்ட்டில் ஜம்னாலால் பெயரும் நிரோஷா பெயரும் இருந்தது. ஆனால்

நிரோஷாவை தன் உயிரைக் கூட பொருட்படுத்தாமல் காப்பாற்றிய சிவகுமார் வேறுமாதிரி சித்திரிக்கப்பட்டிருந்தான்.

அவனை அவனது நிர்வாகத்தினர் சஸ்பெண்ட் செய்து விட்டனர். அவன் தன் அரங்கத்து உறுப்பினர்களைப் பாது காப்பதை விட்டு விட்டு நிரோஷாவைக் காப்பாற்ற முயன்றதாக கன்னாபின்னாவென்று எழுதியிருந்தார்கள்.

அவ்வளவு பேப்பரும் நிரோஷாவின் கைகளில். அவளுக்கு சிவகுமாரை நினைக்க பாவமாக இருந்தது. ஒவ்வொரு பத்திரிகைக்காய் போன் செய்து 'செய்தி தவறு. தான் காப்பாற்றப்பட்டதே சிவகுமாரால் தான்' என்று தகவல் கொடுத்து முடித்தாள். அந்த சூட்டோடு சிவ குமாரை பார்க்கப் ஆஸ்பத்திரிக்கும் புறப்பட்டு விட்டாள். ஆஸ்பத்திரியில்...

கிழிந்து போன வாழை இலை மேல் பரிதாபமாக கிடத்தப்பட்டிருந்தான் சிவகுமார். அருகில் ஒருவர் கூட இல்லை. உடம்பில் தீக்காயங்களின் மேல் மஞ்சளாய் களிம்பு போல ஆயின்மெண்ட் பூசப்பட்டிருந்தது. அதைப் பார்க்கவும் பகீர் என்றது. தீ நாக்குகள் தாக்க வந்த ஒவ்வோர் இடத்திலும் அவளை அணைத்துக் கொண்டு தன் முதுகை அந்த தீ நாக்குகளுக்கு காட்டி அவன் தாவித் தாவிக் குதித்து ஓடி தன்னை காப்பாற்றியது அவ்வேளையில் நிரோஷாவுக்குள்ளும் பாய்ந்து ஓடியது.

அவள் வந்து நிற்பதால் டாக்டர்கள் சிலரும் நர்சுகள் சிலரும் கூட ஓடி வந்து விட்டனர்.

"இவர் என் பெஸ்ட் ஃப்ரெண்ட். இவர் நல்லவிதமா குணமாகியே தீரணும். அதுக்கு எவ்வளவு விலைன்னாலும் நான் தரத் தயாரா இருக்கேன்..." -என்று அவர்களைப் பார்த்து ஆணையிட்டாள். அதன்பின் அவர்களிடமும் ஓர் அசாத்ய சுறுசுறுப்பு. சிவகுமாரும் மெல்லத் தேறி எழுந்தும் அமர்ந்தான்.

அவ்வளவும் அரசாங்கத்தின் ஏற்பாடு என்றுதான் எண்ணிக் கொண்டிருந்தான். ஒருநாள் அவன் விழித் திருக்கும் போது டாக்டர்கள் புடைசூழ நிரோஷா வரவும் தான் இதற்கெல்லாம் அவள்தான் காரணம் என்று புரிந்து கொண்டான். அவளுக்கு நன்றியும் கூறினான்.

அவளோ அது தன் கடமை என்றாள். இடையில் ஒரு நாள் ஜம்னாலால் கூட வந்து சிவகுமாரை பார்த்து "தன் மகளை காப்பாற்றியதற்கு நன்றி" என்று கூறியதோடு ஒரு பிளாங் செக்கை கொடுத்து தமிழ்நாட்டிற்கு போய் சிகிச்சை எடுத்துக் கொள்ளச் சொன்னார். அவர் போன பிறகுதான் அவர் அப்படிச் சொன்னதற்கான காரணம் சிவகுமாருக்கும் தெரிய வந்தது. மும்பை பத்திரிகைகள், நிரோஷா சிவகுமாரை காதலிப்பதாக எழுதியிருந்தன. அவனுக்கோ சிரிப்புதான் வந்தது.

அவன் எங்கே? அவள்தான் எங்கே...?

ஞாபகமாக நிரோஷா வரவும் பிளாங் செக்கை அவள் வசம் ஒப்படைத்தவன், "நான் உதவியை விலைக்கு விற்க தயாரில்லை" என்று கூறி விட்டான். ஜம்னாலால் விருப்பப் படியே சென்னை வந்து ஒரு தனியார் மருத்துவமனை யிலும் சேர்ந்து விட்டான். அவன் சேர்ந்தான் என்பதைவிட ஜம்னாலால் ஆட்களால் சேர்க்கப்பட்டான் என்றால் பொருத்தமாக இருக்கும்.

ஆனால், நிரோஷாவும் சென்னைக்கே அவனைத் தொடர்ந்து வந்ததுதான் எதிர்பாராத திருப்பம். ஒரு பத்திரிகை நிருபர் கூட குறும்பாக "சிவகுமாரை காதலிக் கிறீர்களா?" என்று முகத்துக்கு நேராகவே கேட்டார். நிரோஷா அவரிடம் கண்டதைச் சொல்லி சமாளிக்க வில்லை.

"யெஸ்.... ஐ லவ் ஹிம் ஸோ மச்."- என்று ஆமோதித்து அவர்களை மட்டுமல்ல, சிவகுமாரையே அதிர வைத்தாள்.

அவனும் அவளிடம் "இதெல்லாம் ரொம்ப அதிகம்" என்று சொல்லிப் பார்த்தான்.

"இல்லை... நான் சொன்னால் சொன்னதுதான்" என்றாள், அவளும்.

அதன் பின் ஒரு சினிமா வசனக் காட்சியும் அங்கே அரங்கேறியது.

"நிரோஷா நான் ஒரு மிடில் கிளாஸ். படிப்புதான் என் சொத்து. ஆனா உங்களுக்கு பத்து காலேஜ் சொத்தா இருக்கு."

"அதனால் என்ன...? நானும் ஒரு பெண். எனக்கும் ஒரு வாழ்க்கைத் துணை வேணும் தானே?"

"அதுக்கு நான் தகுதியானவன் இல்லை..."

"அதை கல்யாணம் பண்ணிக்க விரும்பற நானுல்ல சொல்லணும்?"

"சாரி நிரோஷா... எனக்கு இப்ப ஒரு நல்ல வேலை கூட செட் ஆகலை. நீயோ வறுமைன்னா என்னன்னே தெரியாதவ..."

"உங்களை நான் கல்யாணம் பண்ணிக்கறதுக்கும் வறுமைக்கும் என்ன சம்பந்தம் சிவா...?"

"நம்ம கல்யாணம் நடந்தா உன் அப்பா எனக்கு ஆதரவு தரும் ஒருத்தரை கூட விட்டு வைக்கமாட்டார்."

"இது உங்க கற்பனை. எங்க அப்பாவை பத்தி உங்களுக்கு எதுவும் தெரியாது சிவா. அவரைப் பத்தி எனக்கு மட்டும்தான் தெரியும்."

"சொன்னா கேள்... நான் சாதிக்க வேண்டியது எவ்வளவோ இருக்கு..."

"அதுக்கு நானும் உதவியா இருக்கேனே..."

"அது முடியாது. நீ வடநாட்டுப் பெண். நான் தென்னாட்டுப் பையன். கலாசாரம், கல்வி, ஜாதி, அந்தஸ்து பழக்க வழக்கம்னு எல்லா விஷயத்துலையும் நாம வேறு பட்டிருக்கோம். ஆறுமாசம் நாம ஒண்ணா வாழமுடியாது. பேசாம நீ உன் அப்பா பேச்சைக் கேள்."

"சிவகுமார்... நீ என்னை ஏத்துக்கலைன்னா எந்த நெருப்புகிட்ட இருந்து என்னை நீ காப்பாத்தினியோ அதுக்கு நான் பலியாகியே தீருவேன்." என்று உணர்ச்சி மிகுதியோடு பேசியவள், ஒரு தீக்குச்சியை எடுத்து கிழித்து அந்த சுடரை உள்ளங்கையிலும் காட்டிக் கொள்ளத் தொடங்கினாள். படுத்த படுக்கை நிலையில் எழுந்து எகிறிக் குதித்து அந்த தீக்குச்சியை தட்டிவிட்ட சிவகுமார், அதன் பின் அவளிடம் மறுப்பேதும் கூறவில்லை.

நிரோஷாவின் காதல், ஜம்னாலால் காதுகளுக்கு போன போது அவருக்கு அது பலத்த அதிர்ச்சியாக மாறியது.

"ஒரு மதராஸியையா தன் மகள் காதலிப்பது?" என்று குமைந்தவர், பெரிய மனிதர்களுக்கே உரிய அழுத்தமான புத்தியின் அடிப்படையில் டொமினிக் என்பவரை கூப்பிட்டு காதில் ஏதோ கிசுகிசுத்தார். டொமினிக் சிரித்துக் கொண்டே "அவர்கள் காதலை முறித்து அவர்களைப் பிரிப்பது இனி என் பணி..." என்று அவரிடம் சல்யூட் அடிக்காத குறையாக கூறி விட்டு விலகிக் கொண்டான். அதை ஒருவன் நிரோஷாவிடமும் போட்டுவிட நிரோஷா, படு வேகமாக தன் அடுத்த மூவை செயல்படுத்தினாள். அதன்படி 'டொமினிக்கின் கை காலை முறித்து ஒரு வருடத்திற்காவது அவன் ஆஸ்பத்திரியில் கிடக்க வேண்டும்' என்று முடிவெடுத்தவள், அதற்காக மும்பை தாதா ஒருவனை விலைக்கு வாங்கினாள். இறுதியில் தாதாதான் ஜெயித்தான். டொமினிக் ஆஸ்பத்திரியில் போய் படுத்தவன்

தான். கை, கால்களில் மட்டும் நாற்பது தையல். எழுந்து நடக்கவே ஏழெட்டு மாதம் என்று டாக்டர் கூறி விட்டார்.

அதற்கு மேல் நிரோஷாவும் சும்மா இருக்கவில்லை. ஒருநாள் சரியான சாட்சியங்களோடு ரிஜிஸ்தர் திருமணம் செய்து கொண்டாள். பத்திரிகைகளும் முதல் பக்கத்திலேயே அந்த செய்தியைப் போட்டு அமர்க்களப்படுத்தின. ஜம்னா லால் அதில் நொறுங்கிப் போனார். இன்று வரை நிமிர்ந்த மாதிரியே தெரியவில்லை!

## 5

*நமது கலாசாரத்தில் எண்ணெய் தேய்த்துக் குளிக்கும் பழக்க வழக்கத்துடன் விரதம் இருக்கும் ஒரு பழக்கமும் வழக்கத்தில் உள்ளது. ஏகாதசி விரதம், கிருத்திகை விரதம், சஷ்டி விரதம், சிவ ராத்திரி விரதம், அமாவாசை விரதம், வெள்ளிக்கிழமை விரதம் என்று அடுக்கடுக்காய் விரதங்கள். 'இந்த விரதங்கள் எதற்காக...? இதனால் என்ன நன்மை?' என்றெல்லாம் ஆராயப் போனால் அதிசயிக்க வைக்கும் தகவல்கள் கொட்டிக் கிடக்கின்றன. 'விரதத்துக்கு இவ்வளவு மகிமையா?' என்று அவை எண்ண வைக்கின்றன.*

*'ம்' என்பது, ஒன்றில் இருந்து விடுபடுவதை குறிக்கும் சப்தம். இதோ 'த' சேர்ந்து 'தம்' என ஆகும் போது அது மிக வேகமாக நடைபெறுவதைக் குறிக்கிறது. இந்த வேகம் மிக மிக வேகமெடுக்கும் போது 'ரதம்' ஆகிறது. இந்த ரதத்தோடு 'வி' சேரும் போது வினை ஏற்படுகிறது. அது என்ன வினை?*

உடம்பில் இரத்தம் ஓடியபடி உள்ளது. இதயம் துடித்தபடியே உள்ளது. இந்த இரண்டும் ஒரு சீரான வேகத்தில் செயல்பட்டபடி உள்ளன. இந்த வேகத்தைக் கூட்டிக் குறைப்பவைதான் எண்ணங்கள். அதிர்ச்சிகரமான செய்திகள், அச்சமூட்டும் அனுபவங்கள், இதயத்துடிப்பை அதிகரிக்கும்; இரத்த ஓட்டத்தையும் வேகப்படுத்தும். இதனைத்தான் 'இரத்த அழுத்தம்' என்கிறோம். விரத காலத்தில் அதாவது எதுவும் உண்ணாமல் மனதை இறைசிந்தனையில் மட்டுமே வைத்துக் கொள்ளும்போது ஜீரண உறுப்புகள், சுரப்பிகள் ஓய்வு பெறுகின்றன. இதயத் துடிப்பும் சீரான வேகம் அடைகிறது. இரத்த ஓட்டத்திலும் உணவுப் பொருள்களின் சக்திப் பொருள்கள் கலப்பது நிகழாமல்- இரத்தம் தன் சேமிப்பில் உள்ள சக்தி ஆதாரங்களை எடுத்துச் செயல்படுகிறது. இதனால் உடம்பின் நாடிகளில் கூட சீரான தன்மை ஏற்படுகிறது. விரதத்திற்கு பின்னாலே இப்படி அடுக்கடுக்கான நன்மைகள் இருப்பதை அந்த ஆஸ்திரேலியப் பெண்மணி கண்டறிந்து பெரிதும் வியந்தார்.

விரதத்துக்கும் பட்டினிக்கும் நிறைய வேற்றுமை உள்ளது. பட்டினியின் போது மனதில் எதிர்மறையான எண்ணங்கள் இருந்தால் அதனால் பாதிப்பு உருவாகும். ஆனால் விரதம் என்பது மன பலத்தால் மன நலனுக்காக ஏற்படுத்தப்பட்டது. இப்படிப்பட்ட விரதத்தையும் நினைத்த நேரங்களில் செயல்படுத்த நமது முன்னோர்கள் அனுமதிக்கவில்லை. அதற்கென்று சரியான கால நேரங்களைத் தேர்வு செய்து வைத்து அந்த காலங்களில் விரதங்களை அனுஷ்டிக்கச் சொன்னார்கள். இதை எல்லாம் அறிந்த அந்த பெண்மணியை அடுத்து கவர்ந்த மிக முக்கியமான விஷயம்தான் சகுனங்கள்!

ஒரு பாலிதீன் பையில் டிபன் பொட்டலங்களுடன் அறைக்குள் நுழைந்தான் ஜான்சன். சிவகுமார், தன் காதல் நினைவுகளில் மூழ்கியிருந்தான்.

''சார்...''

''...''

''சார், டிபன் வாங்கிட்டு வந்துட்டேன்.''

''...''

ஜான்சனுக்கு சிவகுமாரின் அந்த பிரக்ஞையற்ற நிலை ஓர் ஆச்சர்ய அனுபவமாகத்தான் இருந்தது. இப்படி ஒரு சனிக்கிழமையில் இரவு வீட்டுக்கு போகாமல் அவன் இருப்பதில் இருந்து தன்னிலை மறந்து கிடப்பது வரை எல்லாமே ஜான்சனுக்கு புதிய அனுபவங்கள். மெல்ல சிவகுமாரின் தோளைத் தொட்டான். நல்ல வேளை... சிவகுமாரின் கனவும் கலைந்து போனது.

''சார் டிபன்...''

''வெச்சுட்டு போ...''

''சரி சார்.... குட் நைட் சார்...''

தேங்கித் தேங்கி நடந்து ஒவ்வொரு வார்த்தையாக உதிர்த்துவிட்டு கதவை திறந்து கொண்டு வெளியேறினான் ஜான்சன்.

கடந்த கால நினைவுகளை மீறிக் கொண்டு நன்றாகவே பசித்தது. டிபன் பொட்டலங்களை பார்க்கவும் உள் சுரப்பிகள், வேகமாக வேலை செய்யத் தொடங்கின. கம்ப்யூட்டர் திரையை அணைத்து விட்டு மேஜை மேல் டிபன் பொட்டலங்களை எடுத்து வைத்துக் கொண்டு பிரிக்க ஆரம்பித்தான். ஜான்சன் சிவகுமாரின் ரசனை அறிந்தவன்! எனவே பூரி கிழங்கு, சாம்பார் வடை... ஆனியன் தோசை என்று அயிட்டங்கள்!

நாக்கில் எச்சில் ஊற, பூரியை பிய்த்த பிறகே குடிக்க தண்ணீர் இல்லை என்பது அவனால் உணரப்பட்டது.

எழுந்தான். கதவைத் திறந்து கொண்டு ஆபீசின் மற்ற பாகங்களைப் பார்த்தான். மினரல் வாட்டர் கேன் கண்ணில் பட்டது. அருகே நெருங்கவும் தான் அதில் தண்ணீர் தீர்ந்து விட்டது தெரிய வந்தது. E.D.P. செக்ஷ னுக்கு போனால் அங்கு தண்ணீர் இருக்கலாம். அதற்கு லிஃப்ட்டில் கீழிறங்க வேண்டும். அவர்கள் முதல் தளத்தில் இருக்கிறார்கள். சிவகுமாரை அகோரப் பசி வழி நடத்தியது. லிஃப்டில் ஏறிக் கொண்டு கீழிறங்கத் தொடங்கினான். முதல் தளத்தில் விளக்கு தான் எரிந்து கொண்டிருந்தது. எல்லோரும் பக்கத்து ஹோட்டலுக்கே சாப்பிடச் சென்று விட்டனர். அங்கேயும் வாட்டர் கேன் காலியாகி விட்டிருந் தது. மறுநாள் ஞாயிற்று கிழமை விடுமுறை என்பதால் தண்ணீர் பிடித்து வைக்க ஆபீஸ் பாய் முயலவில்லை. இது தெரியாத சிவகுமாருக்குள் கோபம் பீறிட்டது.

"இடியட்ஸ்.... ஒரு பயலைக் கூட காணலையே. இப்படியா ஆபீஸை திறந்து போட்டுட்டு போவாங்க...?" என்று முணுமுணுத்துக் கொண்டே ஆபீஸ் தளத்தை விட்டு வெளியில் வந்தான். எதிரே ஒரு பெட்டிக்கடை! நிச்சயம் வாட்டர் பாட்டில்கள் கிடைக்கும் என்று தோன்றியது. அந்த நேரத்து நெருக்கடி அவனைப் பிடித்து தள்ளியது. அலுவலக கட்டடத்தை விட்டு வெளியில் வந்தவன், இருபுறமும் சாலையை பார்த்தான். அங்கும் இங்குமாய் சில வாகனங்கள்!

சட்டைப் பாக்கெட்டை தொட்டுப் பார்த்தான்.

பர்ஸ் இருந்தது.

தைரியமாக நடந்தான். நூறு ரூபாய் தாளை நீட்டி வாட்டர் பாக்கெட், பிஸ்கட் பாக்கெட், ஜூ.வி., ரிப்போர்ட்...

டர் என்று புத்தகங்கள் வாங்கிக் கொண்டு திரும்பத் தொடங்கினான். அவன் வரையில் அவனது சனிக்கிழமை பயம் சற்று அவனை விட்டு விலகியிருந்தது. ஆனால் அதை உண்மையாக்குவதைப் போல ஒரு கார்-அதனிடம் அசுர வேகம், ஹெட்லைட் எரியாத நிலையில் அது வருவது தெரியவில்லை. படுவேகமாக சாலை மையத்தில் சிவகுமார் நடக்கும் போது அதுவும் அவனை நெருங்கிவிட்டது.

அதன்பின்...?

ஹாஸ்பிடல்!

வார்ட் நம்பர் 306. பரபரப்பாக நுழைந்த சுந்தரின் எதிரில் காலில் பெரிய கட்டுடன் சிவகுமார்! நல்லவேளை கான்ஷியஸில் இருந்தான். பக்கத்தில் நிரோஷா! ஹார்லிக்ஸ் கலக்கியபடி... சற்று தள்ளி ஒரு பெரிய மேஜை மேல் ஏராளமான பூங்கொத்துகள், கூடை கூடையாக ஆப்பிள், ஆரஞ்சு பழங்கள், அவை, சிவகுமாரை ஒரு பெரிய கூட்டமே வந்து பார்த்துவிட்டுப் போனதை ஊர்ஜிதம் செய்தன. சுந்தரைப் பார்க்கவும் நிரோஷா அந்த சூழலிலும் ஒரு சிறிய புன்னகையை உதிர்த்தாள்.

"வாங்க சுந்தர்..."-என்றாள்.

சிவகுமாரும் தன் இனிய நண்பனை ஊடுருவினான்.

"சிவா..."

"வா சுந்தர்... பார்த்தியா என் நிலையை...?"

"எப்படிடா?"

"அதுதான் என் சனிக்கிழமை தலை எழுத்தாச்சே..."

"நீதான் உன் ஆபீஸ்லயே இருந்தியே... அப்புறம் எப்படி?"

"வாட்டர் பாட்டில் ரூபத்துல விதி வேலை செஞ்சிடிச்சுடா..."

சிவா பேச முடியாமல் பேசிட டாக்டர் வந்தார். ரிப்போர்ட்டை பார்த்தார். ஒரு சிரிப்பு சிரித்தார். அதற்கு காரணத்தையும் அவரே கூறத் தொடங்கினார்.

"மிஸ்டர் சிவா... உங்களுக்கு நடந்த ஆக்சிடெண்ட் டுக்கும் மூனு குட்டிக்கரணம் அடிச்சு விழுந்ததுக்கும் குறைஞ்சது மூணு மாசம் நீங்க படுத்த படுக்கையா இருக்கணும்! ஆனா பல நேரங்கள்ல எங்களை இந்த டைம் கான்சப்ட் ஆச்சரியப்பட வெச்சிடுது. சுருக்கமா சொன்னா மிராகிள், மிராகிள்னு ஒரு வார்த்தை இங்கிலீஷ்ல உண்டு. உங்க தமிழ்ல அதை 'அமானுஷ்யம்' னு சொல்வாங்க. உங்களுக்கு எலும்பு கூட விஷயமும் அமானுஷ்யம் தான். உங்களுக்கு எலும்பு கூட முறிலைங்கறது எவ்வளவு ஆச்சரியமான விஷயம் தெரியுமா?"

"அப்ப இவ்வளவு பெரிய கட்டு எதுக்கு சார்?" சுந்தர் படக்கென்று கேட்டு விட்டான்.

"நீங்க...?"

"சிவாவோட குளோஸ் ஃப்ரெண்ட்."

"தென் ஓ.கே... இந்தக் கட்டு, எலும்பு முறிவுக்கு இல்ல; சதைப் பிசகுக்கு. அதுவும் நாலு நாள்தான். அதுக்கு பிறகு இவர் தாராளமா நடக்கலாம், ஓடலாம், ஆடலாம்..."

"அவசரம் இல்ல டாக்டர்... ஒரு வாரம் பத்து நாள்கூட இருக்கட்டும். உடம்பு குணமானா சரி."

"இன்ஃபாக்ட் இவருக்கு ராயல் ட்ரீட்மெண்ட் கொடுக்கும்படி ஒரு போன் கால். உங்களுக்கே தெரியும் யார்கிட்ட இருந்து வந்துருக்கும்னு..."

டாக்டர் கண்சிமிட்டிச் சிரித்தார்.

"யார் டாக்டர் அது... என் அப்பாவா?" நிரோஷா அவரிடம் ஆங்கிலத்தில் ஆவேசமாக திருப்பிக் கேட்டாள்.

"ஆமாம்மா... உன் அப்பாவே பேசினார்."

"அவருக்கு எப்படி டாக்டர் இவருக்கு ஆக்சிடென்ட் ஆன விஷயம் தெரியும்?"

"நான் சொன்னேன்மா..."

"வாட்...?"

"அம்மா நீங்க ரொம்ப பெரிய இடம். நாளைக்கு எனக்கு எந்தப் பிரச்சினையும் வந்துடக் கூடாது பாருங்க. அதான் தகவல் தந்தேன்."

"உங்களை யார் டாக்டர் தகவல் தரச் சொன்னது?"

"நான் தான் சொன்னேனே.... ஃபார் சேஃப் சைட் சொன்னேன்மா."

"இப்ப சொல்றேன். இனி எந்த காலத்துலையும் நான் உங்க ஹாஸ்பிடலுக்கு வரமாட்டேன்."

"சாரிம்மா... நான் செஞ்சது என்ன அவ்வளவு பெரிய குற்றமா?"

"என் வரைல குற்றம்தான். நான் என் அப்பா அம்மான்னு எல்லாரையும் தொலைச்சுத் தலைமுழுகிட்டு தான் சிவாவோட வாழ வந்திருக்கேன்."

"காதல்ல இது ரொம்ப சகஜம்மா. காலத்தால சரியாகற விஷயமும் கூட. இன்ஃபாக்ட் உங்கப்பா ரொம்ப கவலைப்பட்டார். செலவைப் பாக்காதீங்கன்னார்."

"அதெல்லாம் நடிப்பு. இந்த ஆக்சிடென்ட் மேலயே எனக்கு டவுட் இருக்கு. அது தெரியுமா உங்களுக்கு?"

"என்னம்மா சொல்றீங்க?"

"அவர், இவரை கொலை செய்ய ஆட்களை ஏவி விட்டதா நான் நினைக்கறேன்."

"இல்லம்மா... நீங்க அநாவசியமா எக்ஸைட் ஆகறீங்க."

"ஓ.கே... இனி உங்ககிட்டே பேசறதுல ப்ரயோஜனம் இல்ல. அவருக்கு பெருசா எதுவும் இல்லைன்னு சொல் விட்டீங்க. தேங்க்யூ. நான் இப்பவே டிஸ்சார்ஜ் பண்ணி கூட்டிக்கிட்டு போறேன்."

"நோ... நோ... நீங்க ரொம்ப அவசரப்படறீங்க. நான் வேணும்னா உங்கப்பாவுக்கு தகவல் தந்ததுக்காக உங்க கிட்ட மன்னிப்பு கேட்டுக்கறேன். டிஸ்சார்ஜ் பத்தி எல்லாம் யோசிக்காதீங்க. சார் இப்ப நல்ல ரெஸ்ட்ல இருக்கணும்."

-டாக்டர் கைகளை கூப்பினார். அவருக்கு இதெல்லாம் தேவையே இல்லை. அவ்வளவு பெரிய டாக்டர் அவர். நிரோஷாவின் கோபமும் அவளது அந்தஸ்தும் அவரை கைகூப்ப வைத்து விட்டது.

அவளும் அரைமனதாக சம்மதித்தாள்.

அவ்வளவையும் கவனித்துக் கொண்டிருந்த சுந்தருக்குத் தான் தலையை சுற்றியது!

## 6

***'சகுனத்தை பற்றிய அந்த பெண்மணியின் ஆய்வு, கால நேரம் என்றால் என்ன என்பதை உணர்த்துவதாக இருந்தது. உண்மையில் காலம் என்பது தினந்தோறும் இரவு பகலாக விரிந்து கிடக்கிறது. இதில் பூமியில் மட்டும்தான் பௌர்ணமி, அமாவாசை போன்ற வானியல் நிகழ்வுகளை உணர முடியும். அதை வைத்தே ஒவ்வொரு நாளும் இரவுப் பொழுதில் வித்தியாசங் களையும் உணர முடியும். இந்த வித்தியாசங்களை வைத்தே ஒவ்வொரு நாளுக்கும் அடையாளமாகப் பெயர்கள் இடப்பட்டன. இதில் இருந்து தான் திதி,***

ஹோரை, கிழமை, தேதி என்று சகலமும் அறிய வந்தது. இதனால் நூறு ஆண்டுக்கு பிறகு வரும் ஒரு நாளைக்கூட நாம் அடையாளம் கண்டு கொள்ள முடியும் ஒரு நிலை இன்று உள்ளது. அந்த நாளில் பூமிக்கும் சூரியனுக்கும் உள்ள தூரம். அன்றைய தேதி, அன்றைய கிழமை, அன்றைய திதி என்று சகலத்தையும் கூறிவிட முடியும். ஒருபடி மேலே போய் அன்றைக்கு என்ன நட்சத்திரம், அது எவ்வளவு நாழிகை நேரம் உள்ளது என்பதை கூட கூறி விட முடியும். இது அவ்வளவுமே மனிதன் தன் வான சாஸ்திர அறிவால் கண்டறிந்த உண்மைகள். சுருக்கமாக கூறுவதானால் இது மாயமோ, மந்திரமோ அல்ல. இது கணக்கு!

இந்தக் கணக்குக்குள்தான் சகுனங்களும் செயல் படுகின்றன. ஒரு வீட்டின் ஈசான்ய பாகத்தில் காகம் ஒன்று இடைவிடாது கரைந்தால், அந்த வீட்டுக் காரருக்கு ஒரு பெரிய இடத்தில் இருந்து அழைப்பு வருகிறது என்பது உட்பொருள். கொல்லையில் காகம் கரைந்தால் உறவினர்கள் வருகின்றனர். வெளியேறும் போது பூனை குறுக்கே போனால் அது எந்த பக்கத்தில் இருந்து எந்த பக்கம் செல்கிறது என்பதை வைத்து அதனுள் ஒரு செய்தி உள்ளது.

அதேபோலத்தான் எதிரில் ஒற்றை பிராமணன் வருவது, சுமங்கலி வருவது. கர்ப்பவதி வருவது, முடவன் வருவது என்று ஒவ்வொன்றும்... இவை அவ்வளவும் ஒரு செய்தி. இதை உணர அந்த கால நேர கணக்கு தெரிய வேண்டும். அது தெரிந்தால் அதைக் கொண்டு சகுனக் காட்சிகளை கூட்டிக் கழித்து நடக்க போவதை முன்பே கூறிவிடலாம்.

மந்திரி வருவதற்கு முன்னால் சைரன் கார் வருவது போன்றது இந்த சகுனங்கள். ஒவ்வொரு

*வருக்கும் அவரவர் செயல்பாடுகளுக்கு ஏற்ப அதன் தொடர்புகளுக்கு ஏற்ப, காலம் அது தொடர்பான செய்திகளைக் கூறிக் கொண்டுதான் உள்ளது.*

*ஆனால், அதை தெரிந்து கொள்ளும், புரிந்துகொள்ளும் அறிவுதான் மனிதனிடம் குறைவாக உள்ளது. அப்பெண்மணியோ சில சகுனங்களை பரீட்சை செய்து பார்த்து உண்மையை அறிந்து வாயைப் பிளந்து விட்டார்!*

**செ**ட்டிங்கில் இருந்தாள் ஸ்ரேயா சௌத்ரி. உடம்பில் ஒரு பிகினி உடை. மேனி முழுக்க செம்மெழுகை பூசியிருந்தான் மேக்கப்மேன். அது தோலை பளபளவென்று மின்னவிட்டது. ஸ்ரேயா காட்சி நேரம் போக மீதி நேரத்தில் ஒரு நீண்ட ரெய்ன்கோட் போன்ற காட்டன் அவுட் வியரை அணிந்திருந்தாள். ஸ்ரேயாவுக்கு புகைக்கும் பழக்கம் உண்டு. சிகரெட் பற்ற வைத்தால் படுநேர்த்தியாக புகை விடுவாள். தன்னை யாராவது கவனிக்கிறார்களா என்றும் பார்த்தபடியே இருப்பாள். கவனிக்காவிட்டால் கவலைப்படுவாள். எப்பொழுதும் யாராவது சில பத்திரி கைக்காரர்கள் சுற்றிச் சுற்றி வருவார்கள். வித்தியாசமான கோணத்தில் அவளை படம் பிடித்து வைத்துக் கொள்ளவும் துடியாய்த் துடிப்பார்கள்.

பல ஹிந்திப் பத்திரிகைகள் அவளது அரைகுறை ஆடையுடன் கூடிய உடையை அட்டையில் போட்டு கடைத்தேறியிருக்கின்றன. அந்த வார விற்பனை மட்டுமே ஐம்பதாயிரம் காப்பி வரை எகிறி விடும். அந்த படத்தை எடுத்த புகைப்படக்காரனுக்கும் நல்ல சன்மானம் கிடைக்கும். இதெல்லாம் ஸ்ரேயா சௌத்ரிக்கும் தெரியும். தன் உடம்பால் ஒரு பக்கம் தயாரிப்பாளர் பிழைக்கிறார். இன்னொரு பக்கம் பத்திரிகைகள்... அதற்கும் பின்னாலே இப்படி சில

போட்டோகிராபர்கள் பிழைப்பதில் அவளுக்கு சந்தோஷம் தான். ஆனால், எல்லாம் உடம்பு சுளையாக இருக்கும் வரைதான். இந்த உடம்பு கிழடு தட்டிப் போனால் நாய் கூட சீந்தாது என்பதற்கு முப்பது நாற்பது வருடங்களுக்கு முன்பு கவர்ச்சி காட்டி ஆடிய ஜூலி என்கிற நடிகை ஓர் உதாரணம். பாவம் ஜூலி... சில வீடுகள் கட்டி அதில் வரும் வாடகையில் பிழைத்து வருகிறாள். உடம்பு முழுக்க சர்க்கரை. தினசரி இன்சுலினுக்கே நூறு ரூபாய் தேவைப் படுகிறது. எங்கேயும் நடந்து போய் வர முடியாது. உடம்பைக் காட்டி பிழைத்ததால் நல்ல குடும்பத்தில் வாழ்க்கைப்பட முடியவில்லை. ஒரு டைரக்டருக்கு வைப் பாட்டியாக தான் வாழ முடிந்தது. அவரும் போய்ச் சேர்ந்து விட்டார். இப்போது யாருமே இல்லை. ஜூலியின் சோகக் கதை ஸ்ரேயா சௌத்ரிக்கு தெரியுமாதலால், அவளுக்குள் பலமான பல முடிவுகள். அதனால்தான் ஜம்னாலாவை தன் பிடிக்குள் அப்படிப் போட்டு முடிந்து வைத்திருக்கிறாள். ஆனால், ஜம்னாலாலோ ஏதோ தேவரகசியம் போல அவளது உறவை மூடி வைத்தே தொடர்கிறார். 'வெளியே தெரிந்தால் இமேஜ் கெட்டு விடும்' என்கிறார். அதுவும் உண்மைதான். ஸ்ரேயா பாலிவுட்டில் ஒரு காமப் பதுமை! எனவே ஒரு மதிப்பான பார்வை அவள்மேல் யாருக்குமே இல்லைதான்.

இருந்தாலும் ஸ்ரேயாவுக்கு அதை உடைத்துக் கொண்டு ஜம்னாலாலுடன் சேர்ந்துவிட வேண்டும். 'ஸ்ரேயா ஜம்னா லால்' என்று உலகம் கூப்பிட வேண்டும் என்பதுதான் அவளது விருப்பமும்...

அமைதியாக ஷூட்டிங் பிரேக்கில் அமர்ந்திருக்கும் போது ஸ்ரேயாவுக்குள் ஜம்னாலால் நினைப்புகள் தான் ஓடும். அது ஓடும் போதே நிரோஷா தன்னை விரும்புவாள் என்றும் அவள் யோசித்ததுண்டு. அவள் விரும்ப மூற்பட்

டாலும் சிவகுமார், அவளைக் கலைத்து விடுவதாகத்தான் நினைக்கிறாள்.

இதோ இப்பொழுதும் அந்த நினைப்புதான்.

இதோ இப்பொழுதும் அந்த நினைப்புதான். சிகரெட் புகையோடு போட்டிப் போட்டது அவளுக்குள் நிரோஷாவின் நினைப்பு. இப்போது கழுத்தில் ஒரு டிஜிட்டல் கேமராவுடன் மார்ல்பரோ சிகரெட் பிடித்தபடி எதிரில் வந்தான் ஜெயகர். இவன் ஒரு மராட்டிய பத்திரிகையின் புகைப்பட கலைஞன். பாலிவுட் கலைஞர்கள் அவ்வளவு பேருடனும் நல்ல நட்பு வைத்திருப்பவன். கன்னியமாகவும் பழகத் தெரிந்தவன்.

ஸ்ரேயாவின் சிகரெட்டும் சிந்தனையுமான தோற்றத்தைப் பார்த்தபடியே அவள் எதிரில் வந்து 'நமஸ்தே மேடம்' -என்றான்.

"நமஸ்தே ஜெயகர்..." -ஸ்ரேயாவும் உற்சாகமானாள்.

"டேக் யுவர் சீட்."

"தேங்க்யூ மேடம்."

"எப்படி இருக்கீங்க ஜெயகர்?"

"கொயட் ஃபைன். ஆமா இதென்ன போஸ் ரொம்ப கவலையோட...?"

"அப்படியா...? என்னைப் பார்த்தா கவலைப்பட்ற மாதிரியா தெரியுது?"

"நல்லா கேட்டீங்க போங்க. இப்பல்லாம் எப்பப்பார் யோசிச்சுகிட்டே இருக்கீங்க. ஹாலிவுட் சான்ஸ் ஒன்னைக்கூட வேண்டான்னுட்டீங்களாமே..."

"ஆமாம்... அதுல நியூடா ஒரு சீன் வரணும்னாங்க."

"கதைக்கு தேவைன்னா ஏத்துக்கலாமே. இப்ப பாருங்க ஜீவிதா படேகர் அதை ஒத்துக்கிட்டாங்க. ஒரு லட்சம் டாலர் அட்வான்ஸ் மட்டுமே வாங்கியிருக்காங்க."

''ஐ டோன்ட். கேர்... நான் கவர்ச்சியா பாலிவுட்ல நடிக்கறதையே குறைச்சுக்க விரும்பறேன்.''

''அது உங்க விருப்பம். ஆனா சிகரெட்டை நீங்க அவசியம் குறையுங்க. ஹெல்த்துக்கு நல்லது.''

''ஓ... தேங்க்யூ ஜெயகர். வேற எதாவது விசேஷமான செய்தி உண்டா?''

''பாலிவுட் எப்பவும் போல ஒரு பக்கம் காதல், ஒரு பக்கம் தாதாயிசம், ஒரு பக்கம் அக்ரசிவான முயற்சிகள்னு தன் பாதைல போய்கிட்டே இருக்கு.''

''இது யூசுவல். அன்யூஷுவலா எதாவது...''

''சொல்வேன். ஆனா, உங்களுக்கு வருத்தமா இருக்கும்.''

''என்னைப் பத்தியா?''

''எக்ஸாக்ட்லி...''

''சரி சொல்லுங்க... நான் ப்ளூ ஃப்லிம்ல நடிக்கறதா எதாவது வதந்தியா?''

''அது ரொம்ப பழசு மேடம். இது கொஞ்சம் நம்ப முடியாத வதந்தி...''

''வாட் ஈஸ் தட்...?''

''ஆனா, இதுக்காக நீங்க வருத்தப்பட தேவையில்லை. ஏன்னா இந்த வதந்திப்படி நடந்தா உங்களுக்கு நல்லது தான்.''

''என்னன்னு சொல்லுங்க ஜெயகர்'' ஸ்ரேயாவும் டென்ஷனானாள்.

''உங்களுக்கும் மல்டி மில்லியனர் ஜம்னாலாலுக்கும் ஒரு லிங்க் இருக்கறதாவும், நீங்க அவரை கல்யாணம் பண்ணிக் கிட்டு செட்டில் ஆயிடப் போறதாவும் கேள்விப்பட்டேன்.''

''ஐ.சி...'' -சாதாரணமாக அதை ஒப்புக் கொண்டாலும் உள்ளுக்குள் ஒரு வியப்பும் அவளுக்குள் ஏற்படத்தான்

செய்தது. 'உலக மகா ரகசியமாக தான் கருதிக் கொண்டிருக்கும் இந்த உண்மை இவனுக்கு எப்படி தெரிந்திருக்க முடியும்' என்கிற கேள்விதான் அவளுக்குள் குதித்துக் கொண்டு ஓடியது.

"என்ன மேடம்... உங்களுக்கு இந்த செய்தியால கோபம் எதுவும் வரலையா...?"

"எதுக்கு கோபப்படணும் ஜெயகர்...?"

"இல்ல... அதானே உண்மை..."

"சரி, யார் உங்ககிட்டே இப்படி பத்தவெச்சது?"

"அதை மட்டும் கேட்காதீங்க..."

"சரி, கேக்கலை. ஆமா இது ஒரு நடக்க முடியாத விஷயம்கறது உங்க எண்ணமா?"

"நான் அப்படி நினைக்கலை. ஜம்னாலலால் ஒரு சினிமா ரசிகர். உங்க மேலே அவருக்கு ஒரு கிரேஸ் இருக்கலாம். ஆனா, கல்யாணம் வரை போக நோ சான்ஸ்."

"எதனால அப்படி?"

"அவர் ஒரு மில்லியனர், அவர் ஸ்டேட்டசுக்கு உங்களை கல்யாணம் பண்றது அவர் இமேஜை டேமேஜ் பண்ணிக்கற ஒரு விஷயம்..."

"நான் அவ்வளவு கேவலமானவளா?" சட்டென்று ஸ்ரேயா சௌத்ரியிடம் ஓர் ஆவேசம் தொற்றியது.

"நோ நோ... இது என் அபிப்ராயமில்ல... ஃபீல்டுக்குள்ள இருக்கறவங்க அபிப்ராயம்."

"உங்க அபிப்ராயம் என்ன?"

"நீங்க கேக்கறதை பார்த்தா..."

"யெஸ்... நான் அவரை லவ் பண்றேன். அவரைத்தான் கல்யாணம் செய்துக்கவும் போறேன்."

"மேடம்..."

"நம்புங்க ஜெயாகர்... இட் சஸ் எ ட்ரூத்"

"நிஜமாவா...? ஜம்னாலால் சம்மதிச்சிட்டாரா..."

"சம்மதிப்பார்... கூடிய சீக்கிரம்."

"அப்ப, இப்ப அவர் சம்மதிக்கலைன்னு சொல்லுங்க."

"என் உயிரைக் கொடுத்தாவது சம்மதிக்க வைப்பேன்."

"நடக்கற வரை என்னால அதை நம்ப முடியாது."

"நடக்கும்... நீங்க பார்ப்பீங்க."

"எப்படி மேடம்... அவருக்கு உங்க வயசுல ஒரு பொண்ணு இருக்கும் போது..."

"யார் இருந்தா என்ன... நான் ஜெயிப்பேன். ஜலஜி அக்கா மாதிரி அநாதையா நான் கஷ்டப்பட மாட்டேன்."

"சந்தோஷம் மேடம். நீங்க ஜெயிச்சா எனக்கும் சந்தோஷம்தான். ஆனா, அது அவ்வளவு சுலபம் இல்லைன்னு நான் நினைக்கறேன்."

"அது எனக்கும் தெரியும்."

"அப்புறம் எப்படி... எதாவது மாயம், மந்திரம்?"

"மாய மந்திரமா... வாட்டு யூ மீன்?"

"மாய மந்திரம் தெரியாதா உங்களுக்கு?"

"இந்த காலத்துல மாய மந்திரமா... என்ன உளர்றீங்க?"

"நான் உளறலை. உங்களுக்குத்தான் எதுவும் தெரியலை. உலக அழகி ஐஸ்வரிராயை அக்பர்கான் எப்படி மடக்கினாராம்...?"

"எப்படி?"

"நிஜமா தெரியாதா?"

"சத்தியமா தெரியாது. இரண்டு பேரும் லவ்வுல்ல பண்ணாங்க."

"அதுக்கு ஆரம்பம் எது தெரியுமா?"

"ஏது?"

"நேபாளத்துல இருந்து வந்த ஒரு மந்திரவாதியும் அவன் தந்த ஒரு மையும்தான்..."

"என்ன ஜெயகர்... என்னை சின்ன பொண்ணா நினைச்சு சந்தா மாமா கதை சொல்றீங்களா?"

"இது கதை இல்ல மேடம்... சத்தியமான உண்மை."

"என் காதுல அப்படி இப்படி கூட விழலையே..."

"நான் வேணும்னா அந்த மந்திரவாதியையே கூட்டிக் கிட்டு வரேன். அப்ப நம்புவீங்களா?"

-ஜெயகரின் ஆணித்தரமும், பாடிலாங்வேஜும் ஸ்ரேயா சௌத்ரியைக் கொஞ்சம் போல யோசிக்க வைத்தது. என்னதான் தன்னம்பிக்கையோடு பேசினாலும் மாயம் மந்திரம் என்று ஜெயகர் சொன்னது தனக்கு உதவகக்கூடும் என்றும் தோன்றியது. கொஞ்சம் பயமாகவும் இருந்தது.

"என்ன மேடம்... என்ன யோசனை?"

"இல்ல... இது எல்லாம் எந்த அளவு உண்மைன்னு யோசிக்கறேன்."

"இந்த ஒரு விஷயத்துல மட்டும் எப்பவும் அனுபவம் தான் உண்மை. நான் அந்த நபரைக் கூட்டிக்கிட்டு வரேன். நீங்க உங்க பிராப்ளத்தை சொல்லுங்க. அதை அவர் தீர்த்து வைப்பார். அவருக்கு தேவை பணம். அவ்வளவுதான்!"

"பணம் ஒரு விஷயமில்லை. எனக்கு பிராப்ளமே ஜம்னாவோட டாட்டர்தான்..."

"ஓ... ஓடிப்போன அந்த பொண்ணா?"

"ஆமாம்... அவளைக் கூட நான் சமாளிச்சிடுவேன். அவளைக் கெடுக்கறதே அவனோட லவ்வர்தான்."

"லவ்வர் இல்ல. இப்ப அவர் புருஷன்."

"எவனோ ஒருத்தன்..."

"அப்ப அந்த பொண்ணு ஓ.கே. சொன்னா ஜப்னா உங்களை கல்யாணம் பண்ணிக்குவார். அப்படிதானே?"

"ஆமாம்... இல்லேன்னா நான் அவர் வரைல ஒரு கீப் தான்."

"வெல்டன் மேடம்... உங்க பிராப்ளம் சால்வ் ஆயிடும். நான் அந்த நேபாளத்துகாரரோட வரேன். ஓ.கே..."

"ஜெயகர்... இந்த விஷயத்துல..."

"நோ பிராப்ளம்.. என் உயிர் கூட போகும். ஆனா என்கிட்ட இருந்து இந்த விஷயம் மட்டும் கசியாது."

"அது போதும் எனக்கு..."

-ஸ்ரேயா மார்பில் கை வைத்து சொன்னாள். அப்போது அவுட் வியர் ஒதுங்கி மார்பு நடுவே ஒரு சரிவு கண்ணில் பட்டது. அதில்தான் ரசிகர்கள் சரிந்து விழுந்து கொண்டிருக்கிறார்கள்.

# 7

*'அந்த பெண்மணியின் சகுன ஆய்வில் சில அரிய செய்திகள் அவருக்குக் கிடைத்தன. குறிப்பாக ஒருவர் கறுப்பு உடை அணியும் தினத்திலெல்லாம் அவருக்கு காலில் அடிபட்டது. அதேபோல ஒருவர் நெற்றியில் பெரிய அளவில் குங்குமப் பொட்டு வைத்துக் கொண்டு சென்ற நாளெல்லாம் அவர் உடல் நலத்தோடு திகழ்ந்தார். பொட்டு இல்லாத தினங்களில் உடல்வலி, தலைவலி என்று அவஸ்தைப் பட்டார். இந்த விஷயங்கள் நம் தோற்றத்துக்கும் கால நேரத்துக்கும் ஒரு தொடர்பு இருப்பதை அவருக்கு உணர்த்தியது. அந்த தொடர்பின் [illegible]*

*படுவதாக அவர் கருதினார். கண்ணுக்கு தெரியாத, ஆனால் ஏதோ ஒரு விதத்தில் உணர முடிந்த இந்த விஷயங்களை ரேடியோ, மற்றும் தொலைபேசி அலைவரிசை போன்ற ஒரு மின்னோட்டமாகத்தான் அவரும் கருதினார்.*

*உதாரணமாக மெட்டல் டிடெக்டர் கருவி அலை வரிசையில்தான் செயல்படுகிறது. இரும்பின் மேல் கருவியின் அலை மோதும் போது சப்தம் எழுப்பும் விதமாக அது வடிவமைக்கப்பட்டுள்ளது.*

*இதேபோல் தான் நாம் ஒரு விஷயம் பேசும் போது அது சுவர் பல்லி மேல் பட்டு அது சப்தம் எழுப்பி அந்த விஷயத்தின் சாதக பாதகத்திற்கு ஒரு பதிலைத் தருகிறது என்பது வரை அவர் உணர்ந்து கொண்டார்.*

*இவ்வாறெல்லாம் புரியப் புரிய ஆன்மிகமும் ஒரு விஞ்ஞானமாகத்தான் அவரால் கருதப்பட்டது.*

**சி**வா நன்றாகவே தேறி விட்டான். டாக்டர்கள் சொன்னது போல மூன்று நாட்கள்தான். எழுந்து சாதாரண மாக நடந்தான். நடக்க முடிந்தது. ஆனாலும் அவன் ஓடவில்லை. 'தவறாமல் ஆபீசுக்கு போக வேண்டும்' என்று மட்டும் முடிவுக்கு வந்தான்.

நிரோஷா தடுத்தாள்!

"இன்னும் பத்து நாளைக்கு நீங்க வேலைக்கு போகக் கூடாது டியர்" -என்று குறுக்கில் நின்றாள்.

"அதான் எனக்கு நல்லாயிடிச்சுல்ல..."

"பரவால்ல... வீட்ல ரெஸ்ட் எடுங்க. என்கூட இருங்க. எனக்கு இப்ப உங்களை நினைச்சா பயமா இருக்கு...!"

"பைத்தியக்காரி... பயப்பட என்ன இருக்கு?"

"நிஜமா சொல்லுங்க... உங்களுக்கு பயமா இல்லையா?"

"எனக்கு சனிக்கிழமைன்னா மட்டும்தான் பயம்..."

"இனி சனிக்கிழமை மட்டுமில்ல... எல்லா நாளுமே பயம்தான்."

"என்னடா உளர்றே... எல்லா நாளும்னா?"

"அனேகமா உங்களை காலி பண்ண இனி எல்லா நாளுமே என் அப்பாவோட ஆட்கள் முயற்சி செய்வாங்க."

"நிரோ..."

"ஆமாங்க... உங்களுக்கு ஏற்பட்ட விபத்துக்குப் பின்னால் என் அப்பாதான் இருக்கார். அவருக்கு உங்களை நான் காதலிச்சது பிடிக்கலை; கல்யாணம் பண்ணிகிட்டது பிடிக்கலை."

"இருக்கலாம். அதுக்காக அவர் இவ்வளவு தூரம் போவார்னு நான் நினைக்கல டியர்."

"இல்ல அவர் போவார். போயிருக்கார். உங்களுக்கு தெரியாது. ஆனா எனக்கு தெரியும்."

"புரியும்படி சொல்லு."

"என் அப்பா ஆரம்ப காலத்துல தன் தொழில்ல போட்டி போட்ட பலரை பம்பாய்ல உள்ள தாதாக்களை வெச்சு உருத்தெரியாம அழிச்சிருக்கார்."

-நிரோஷா முதல் தடவையாக சொன்ன ஒரு விஷயம் சிவகுமாரை சற்று அதிர வைத்தது. கண்களில் ஏராளமான படபடப்பை காட்டத் தொடங்கினான்.

சுசீந்திரமாக சுந்தரும் வந்து நின்றான். "வாங்க... டயதுக்கு தான் வந்திருக்கீங்க. உங்க நண்பருக்கு உடனே வேலைக்குப் போகணுமாம்."

"ஏன்டா... கொஞ்சம் ரெஸ்ட் எடுத்தா என்ன குறைஞ்சா போயிடுவே...?"

"ரெஸ்ட் எடுக்கற வேளை இல்லைடா என் வேலை. என் மாதிரி நபர்கள்ளாம் படுக்கைல விழக் கூடாது. விழுந்தா வாழ்க்கையும் விழுந்துடும்டா..."

"உளறாதே! நீ இப்ப ஒரு பேஷண்ட். சுவர் இருந்தாதான் சித்திரம் எழுத முடியும்."

"இல்ல சுந்தர்... நீயும் சரி, நிரோவும் சரி என்மேல் உள்ள அன்புல பேசறீங்க. ஆனா யதார்த்தம் எனக்குத்தான் தெரியும். நிரோஷா என் உடம்புக்கு பயப்படலை. என் உயிருக்கு எதாவது ஆயிடுமோன்னுதான் பயப்பட்றா."

"உயிருக்கா... அப்படின்னா?"

"ரொம்ப சிம்ப்பிள். எனக்கான ஆக்சிடெண்ட்டை அவ ஒரு மென்மேடாத்தான் நினைக்கறா."

"எனக்கும் அந்த சந்தேகம் இருக்குடா..."

இதுதான் சந்தர்ப்பம் என்று சுந்தரும் குண்டைத்தூக்கிப் போட்டான். நிரோஷாவுக்குள் பளிச்சென்று ஓர் ஒளி. தனக்கு ஒரு துணை கிடைத்துவிட்டது போல...

"நல்லா சொல்லுங்க. நான் என் அப்பாதான் காரணம்னு சொன்னா நம்ப மாட்டேங்கறார்."

"சும்மா இரு நிரோஷா... சுந்தர்... நீயே யோசிச்சுப் பார். நிரோஷா நினைக்கறமாதிரி இவ அப்பா என்னைக் கொல்ல நினைச்சா, அதுக்கு எதுக்கு ஒரு சனிக்கிழமையை தேர்ந்தெடுக்கணும்? எப்ப வேணா அவர் என்னைப் போட்டுத் தள்ளலாமே?"

"அதுவும் வாஸ்தவம்தான். இருந்தாலும் நீ இப்ப எல்லாருக்கும் தெரிஞ்ச ஒரு ஃபிகர் ஆயிட்டே. ஆகையால உன் வரைல சனிக்கிழமையைத் தேர்ந்தெடுக்கலாம்."

"அதான் ஏன் சனிக்கிழமையைத் தேர்ந்தெடுக்கணும்? அதுதான் என் கேள்வி."

"தெரியல... அதை கண்டுபிடிக்கணும். அதே சமயம் உனக்கு ஒரு தகவல். உன்மேல மோதின கார்க்காரன் ஒரு மும்பைக்காரன். அவன் பாக்கெட்ல உன் மாமனார்ோட விசிட்டிங் கார்ட் இருந்துருக்கு. இதுக்கு என்ன சொல்றே?"

-சுந்தர் சொன்ன செய்தி சிவகுமாரை ஓர் உலுக்கு உலுக்கி விட்டது.

"சுந்தர் நிஜமாவா சொல்றே?"

"சத்தியம் சிவா. சந்தேகமா இருந்தா உன் கேஸை ஃபைல் பண்ணியிருக்கிற இன்ஸ்பெக்டரை கேள். இன்ஃபாக்ட் இன்னும் FIR போடாம இருக்காங்க. போட்டா பேப்பர்ல நியூஸ் வந்துடும். நான் தடுத்து வெச்சிருக்கேன். அப்படியும் ஒரு பத்திரிகைல செய்தி வந்தாச்சு அவங்களும் 'இலை மறைவு காய்மறைவா உன் விபத்துக்கு பின்னால உன் மாமனார் இருக்கலாம்'னு எழுதிட்டாங்க பார்க்கறியா?"

-சுந்தர் சட்டையை விருட்டென்று மேலுக்கு தூக்கி வயிற்று மடிப்பில் இருந்து ஒரு பேப்பரை எடுத்து நீட்டினான். அதில் அந்த செய்தி!

நிரோஷாவும் அந்த செய்தியை வேகமாக பார்த்தாள். தமிழ் படிக்கத் தெரியாததால் திருதிருவென்று விழித்தாள்.

"இல்லடா... இல்ல... சான்ஸே இல்லை." திரும்பவும் சிவகுமார் மறுக்க ஆரம்பித்தான்.

"எதை வெச்சு நீ இல்லேங்கறே...?"

"அன்னிக்கு ரோட்ல சரியா கணிக்காம மெத்தனமா நடந்தது நான்... அந்த நேரம் நான் ரோட்டுக்கு வருவேன்; வாட்டர் பாட்டில் வாங்குவேன்றதெல்லாம் யாராலையும் யூகிக்க முடியாத விஷயங்கள்."

"இங்கதான் நீ தப்பு பண்றே. உன்னைக் கொல்ல ஒரு ஆளை நியமிச்சாச்சு. அவன் வேலை உன்னை ஃபாலோ பண்றதுதான். நீ எப்ப எதுக்காக வெளியே வந்தாலும் அவன் கவனிச்சு ஆக்சிடென்ட் பண்ண முயற்சி செய்வான் கறதுதான் என் அபிப்ராயம்."

"சரி... அவன் எதுக்கு சனிக்கிழமையா பாத்து முயற்சிக் கணும்? எனக்கு புரியலியே..."

"ரொம்ப சிம்பிள்... சனிக்கிழமை உன் கம்பெனி அரைநாள் தான். மதியத்துல இருந்து நைட் பத்து பதினோரு மணி வரை நீ பல காரணங்களுக்காக சிட்டிக்குள்ற நட மாடுவே, மத்த நாள்ல ஆபீஸ் விட்டா வீடு... வீடு விட்டா ஆபீஸ்... இது தானே உன் அட்டவணை? ஆகையால நிறைய நடமாட்டமுள்ள சனிக்கிழமையை கொலைகாரன் தேர்வு செய்திருக்கான்னு நான் நினைக்கறேன்."

-பதிலுக்கு பதில் என்று சுந்தர் சொன்ன விஷயங்களில் மறுப்பதற்கு எதுவுமே இல்லாத மாதிரி தான் இருந்தது. நிரோஷாவோ, சுந்தர் விரித்துப் பேசப் பேச சிவக்கத் தொடங்கி விட்டாள். நுனிமூக்கு சிவந்து கண்ணிரண்டும் கலங்கி ஓர் ஆவேசம் அவளுக்குள் முளைக்க ஆரம்பித்தது.

சட்டென்று செல்போனை எடுத்து அதன் மூலம் ஜம்னா வாலிடமே டைரக்டா பேச முயன்றாள். அந்த பக்கமாய் ஜம்னாலாலின் பி.ஏ. கோகலே!

"நமஸ்தே மேடம் ஜீ." -என்று பணிவாகவே ஆரம் பித்தார்.

"கோகலே.. ஐ வாண்ட்டு டாக் மை ஃபாதர்."

"எக்ஸ்க்யூஸ் மீ மேடம் ஜீ. தெஹ ஹீ ஈஸ் இன் த இம்பார்ட்டன்ட் கான்ஃப்ரன்ஸ்."

"ஓ.கே. அவர்கிட்ட நான் சொன்னதா ஒரு விஷயத்தைச் சொல்லுங்க."

"சொல்லுங்க மேடம். வேணும்னா வாய்ஸ் மெய்ல்ல நான் ரெக்கார்ட் பண்ணிட்றேன்."

"நீங்க என்னமோ செய்துக்கோங்க. நான் என் மனசுக்குப் பிடிச்சவரோட சந்தோஷமா வாழ்ந்துகிட்டிருக்கேன். அவர் மேல இனி ஒரு துரும்பு விழுந்தாலும் சரி சும்மா இருக்க மாட்டேன். பதிலுக்கு என் அப்பா பற்றி எனக்கு தெரிஞ்ச எல்லா சீக்ரெட்டையும் நான் மீடியாவுல சொல்ல ஆரம்பிச்சிடுவேன். இதை ஞாபகமா அவர்கிட்ட சொல்லிடுங்க. அவரோட கொலை முயற்சிகளை தூரத் தூக்கி போடச் சொல்லுங்க. இல்லே நடக்கறதே வேற!"

"மேடம்... நீங்க தப்பா புரிஞ்சுகிட்டு இருக்கீங்க. எம்.டி. உங்களையும் உங்க கணவரையும் நினைச்சு ரொம்பவே பெருமைதான் பட்டுக்கறார். நீங்க ஓடிப்போயிருக்க தேவையே இல்லை. இப்பகூட அவர் உங்களை வந்து பார்க்கணும்னுதான் துடிச்சிகிட்டிருக்கார்."

"போதும் கோகலே... அவர்கிட்ட வாங்கற சம்பளத்துக்கு நீங்க இவ்வளவு புளுக வேண்டிய அவசியமில்லை. எனக்கு உங்களைவிட என் அப்பாவை பத்தி நிறையவே தெரியும்."

-நிரோஷா, முகத்தில் அறைந்த மாதிரி கூறினாள். அதற்குமேல் கோகலேயும் அவளிடம் பேச விருப்பப்படவில்லை என்பது மறுபக்கம் மௌனமாக இருப்பதிலேயே தெரிந்துவிட்டது.

நிரோஷாவும் செல்போனை அணைத்து தன் டம்பில் பைக்குள் தூக்கிப் போட்டாள்.

அவ்வளவையும் பார்த்தபடி இருந்த சுந்தர் தனக்குள் ஒரு முடிவுக்கு வந்திருந்தான்.

"சிவா... இந்த சனிக்கிழமை இந்த புதிருக்கு நாம விடையை கண்டுபிடிச்சிடலாம். நீ என்ன சொல்றே?" என்று கேட்டான்.

"ஐ மீன்?"

"நீ தைரியமா இந்த சனிக்கிழமை அவுட்டிங் போ. உனக்குப் பின்னால உன்னை நிழல்போல ஒரு குரூப் ஃபாலோ பண்ணும். அது உனக்கு எப்படி விபத்து ஏற்படுத்துறதை கண்டுபிடிக்கும்."

"நல்ல ஐடியாதான்... ஆனா இந்த வாரம் நான் தப்பிச்சிட்டது எதிரிக்கு தெரியும்தானே?"

"நிச்சயமா!"

"அப்ப உடனே ஒரு பதில் முயற்சியை அவங்க செய்வாங்கன்னு நீ நினைக்கறியா?"

சிவகுமாரின் கேள்வியும் சுந்தரை யோசிக்க வைத்தது.

"நிச்சயமா கொஞ்ச நாளைக்கு எதுவும் பண்ண மாட்டாங்க. நான் வேற அப்பாவுக்கு போன் போட்டு இப்பதான் கத்தி முடிச்சிருக்கேன். ஆகையால கொஞ்ச நாளைக்கு அமைதியாதான் இருப்பாங்க.

-என்று நிரோஷாவும் எடுத்துக் கொடுத்தாள்.

"அப்ப எந்தப் பிரச்சினையும் இப்ப இல்லைங்கறதுதான் உங்க முடிவா?"

"ஆமா... இருந்தாலும் சனிக்கிழமை ட்ரையல் பாக்கறதுல எனக்கு ஆட்சேபனை இல்லை."

-நிரோஷா எல்லா கோணங்களிலும் தன் எச்சரிக்கையை வெளிக்காட்டினாள்.

"ஓ.கே... இந்த விஷயத்தை சும்மா விடக்கூடாது. அந்த உண்மையான குற்றவாளியை நெருங்காம மட்டும் விடக்

கூடாது.'' -என்றார் சுந்தர். அந்த நொடியே தன் திட்டத்தில் அடுத்த கட்டத்துக்குள் நுழைய ஆரம்பித்துவிட்டான்!

## 8

சகுனங்களைப் பற்றி தெளிவாகவே அறிந்து கொண்ட ஆஸ்திரேலிய பெண்மணி, இந்த மண்ணில் மிகச் சிறந்த ஒரு விஷயமாக உணர்ந்து கொண்டது நமது முன்னோர்கள், கால நேரத்துக்கு கண்டிருக்கும் அடையாளங்கள்தான். குறிப்பாக திதிகள்! ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு திதி வருகிறது. இதில் சதுர்த்தி திதி விநாயகருக்கு உரியது. இந்த திதியில் சதுர்த்தி விரதம் இருந்து விநாயக வழிபாடு புரிவதும் இவ் வேளையில் மூன்று கண்களை உடைய சூரைக்காயை சிதறு காயாக உடைப்பதும், அருகம் புல்லால் விநாயகப் பெருமானுக்கு அர்ச்சனை செய்வதும் எதனால் விசேடம் என்கிற கேள்வி இந்த அம்மை யாருக்குள் எழும்பியது. அதே போக்தான் ஏகாதசி திதி. துவாதசி திதி, த்ரயோதசி திதி, சஷ்டி திதி போன்ற திதிகளும்! இந்த திதிகள் வரும் நாட்களில் கண்களால் பார்க்கும்படியான காட்சிகளில் அதாவது சூரிய உதயம், அஸ்தமனம் போன்றவற்றில் எந்த மாறுதலும் தெரிவதில்லை. ஆனால், நமது உடம்புக்குள் ஒருவித மின்னோட்டம் எப்போதும் உள்ளது. அதேபோல பலவித சுரப்பிகள் இடைவறாது செயல்பட்டபடி உள்ளன. இந்த சுரப்பிகளின் செயல்பாட்டிலும் உடம்பின் மின்னோட்டத்தில் ஒருவர் தன் மனதாலோ அல்லது உணர்வாலோ உணர முடியாத அளவிற்கு நுட்பமான மாற்றங்கள் ஏற்படுகின்றன. [illegible] சுரப்பிகள் வழிமுறைகளோ

*அல்லது குறைவாகவோ சுரக்கின்றன. பின்னோட்ட அளவிலும் மாறுபாடுகள் ஏற்படுகின்றன. இதனால் இந்த தினங்களில் ஒரு மனிதன் எப்படி செயல்பட வேண்டும் என்பதை சாஸ்திரங்களின் வழி முன்னோர்கள் கூறியுள்ளனர்.*

*குறிப்பாக த்ரயோதசி திதியில் குறிப்பாக அந்தி சந்தி வேளையில் மனதை ஒருநிலைப் படுத்தி சிவ நாமம் சொல்வது நல்லது. அவ்வாறு செய்யாமல் இவ்வேளையில் பாவச் செயல்களை நம்மை அறியாது நாம் செய்தாலும் அது பலமடங்கு அதிகரித்து பதில் வினைகளை நமக்கு ஏற்படுத்துகிறது. இதனால் நடை முறை வாழ்வில் நாம் பல துன்பங்களை அடையும் நிலை உருவாகிவிடுகிறது.*

**அ**ந்த கான்ஃப்ரன்ஸ் ஒருவழியாக முடிவுக்கு வந்தது. அயல்நாட்டில் இருந்து பல டெலிகேட்சுகள் வந்திருந்தனர். எல்லோருமே தனித்தனியே ஜம்னாலாலை சந்தித்து கைகுலுக்கி தங்கள் மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டனர். அந்த கான்ஃப்ரன்ஸின் முடிவில் இந்திய டெக்ஸ்டைல் ஃபெடரேஷன் அமைப்புக்கு ஜம்னாலாலையே தலைவ ராகப் போடுவது என்றும் ஏக மனதாய் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

கூடவே 'இந்திய கிரிக்கெட் கிளப்பிற்கும் ஜம்னாலால் தலைவராக வேண்டும்' என்று பலர் விருப்பம் தெரிவித் திருந்தனர். 'ஜம்னாலால் சரி என்றால், தான் உடனே விலகிக் கொள்வதாக,' நடப்புத் தலைவரும் ஒரு கடிதம் எழுதி அனுப்பியிருந்தார். எல்லாமே ஜம்னாலால் என்கிற பிசினஸ் மேக்னட்டுக்கு கிடைத்த வெற்றிகள்!

இதெல்லாம் குறைவு...

இதற்கு மேலும் கூட அவரால் வெற்றிகளைக் குவிக்க முடியும். ஏனென்றால், அவர் வெற்றிகளுக்கு சொந்தக்காரர். ஒரு வெற்றி எப்பொழுதுமே இன்னொரு வெற்றியை கூடவே அழைத்து வரும். அது, அதற்கடுத்த வெற்றியை அழைத்து வரும். அது, அதற்கும் அடுத்த வெற்றியை அழைத்துவரும். வெற்றிகள் குவியத் தொடங்கிவிட்டாலோ அதன்பின் அவர்கள் சொல்வதுதான் வேதம். இப்படித்தான் ஆதாம் ஏவாள் காலத்தில் இருந்தே நடந்து வருகிறது.

ஜம்னாலலால் மட்டும் எப்படி விதி விலக்காக முடியும்? ஆனால், ஜம்னாலாலலால் இந்த வெற்றிகளை எண்ணிச் சந்தோஷப்பட முடியவில்லை; பெட்டி பெட்டியாக உள்ள பணத்தை எண்ணியும் சந்தோஷப்பட முடியவில்லை. 'வெற்றி என்பது பணம், பதவியில் இல்லை' என்பதாக அவருக்குள் சன்னமாக ஒரு குரல் ஒலிக்க ஆரம்பித்திருக்கிறது. அதற்கு முழு முதல் காரணம் நிரோஷா! ஒரே மகள்!

அன்பு செலுத்தி அப்பாவுக்கு அனுசரணையாக இருக்க வேண்டியவள். இப்பொழுது விலகிப் போய்விட்டாள். தூரப் போயும் அவள் சண்டையிடுவதுதான் கொடுமை. ஜம்னாலால் தன் துக்கத்தை மனசுக்குள் சுமந்தபடி கான்ஃப்ரன்ஸ் ஹாலைவிட்டு வெளியே வரவும், காத்திருந்த கோகலே அவரை கவ்விக் கொண்டார்.

"எக்ஸ்க்யூஸ்மீ சார்."

"என்ன கோகலே... ஏதாவது முக்கியமான செய்தியா?"

"ஆமாம் சார்... நிரோஷா மேடம் போன் பண்ணினாங்க."

"ஓ... என்ன விஷயம்?"

"சொல்ற மாதிரி எதுவும் இல்லை சார். அவங்க கணவருக்கு ஏற்பட்ட ஆக்சிடெண்ட்டுக்கு நீங்கதான் காரணம்னு நினைச்சுகிட்டு ரொம்ப ஆத்திரப்பட்டாங்க..."

"ம்!"

"நான் எவ்வளவோ சமாதானம் செய்யப் பார்த்தும் அவங்க காது கொடுத்தே கேட்கலே."

"ஏன் இப்படி எல்லாம் நிரோஷா நினைக்கறா? நான் அவ அப்பாங்கறத மறந்துட்டாளா?"

"ஆரம்பத்துல அவங்க காதலை நீங்க ஏற்க மறுத்ததோட எதிரொலி சார் இது."

"அதான் இப்ப நான் சமாதானமாயிட்டேனே. இன்னும் என்ன?"

"அதை அவங்க நம்பணும் இல்லையா?"

"நம்ம முடியாத அளவுக்கு நான் அவ்வளவு மோசமானவனா?"

-ஜம்னாலால் ஓர் ஊசிப் பட்டாசு அளவுக்குத்தான் வெடித்தார். அதற்கே கண்ணிரண்டும் கலங்கிவிட்டது. நிறைய பத்திரிகையாளர்கள் வந்திருந்தனர். அதில் ஒரு பொல்லாத பத்திரிகையாளர் தன் ஸ்டெடி கேம் மூலம் ஜம்னாலால் கலங்குவதை துல்லியமாக படம் பிடித்துக் கொண்டிருந்தார். அதை கோகலேயும் கவனிக்கவில்லை. அதே சமயம் ஜம்னாலாலுக்கு பதில் தெரிந்தும் சொல்வதற்கு தயக்கமாக இருந்தது.

"கோகலே... இப்ப என் மாப்ளே எப்படி இருக்கார்?"

"ப்ராப்ளமில்லை சார். ஹாஸ்பிட்டல் டாக்டர்கிட்டே கேட்டேன். பெரிய விபத்துதான். ஆனா, இவருக்கு சின்ன காயம்தான். டிஸ்சார்ஜ் ஆயிட்டதா கூட சொன்னார்..."

"சரி... இதை இப்படியே விடக்கூடாது. மீடியா வேற கவனிச்சுகிட்டே இருக்குது. நான் இம்மீடியட்டா நிரோஷாலை மீட் பண்ண ஏற்பாடு செய்யுங்க."

"இல்ல சார்... இப்ப நீங்க மீட் பண்ண முயற்சி செய்தா அது இன்னும் தப்பா ஆகும். நீங்க தப்பு செய்துட்டு

தப்பிக்க முயற்சி செய்யறதா நினைக்க நிறைய வாய்ப்பு இருக்கு.''

''நான் என்ன தப்பு செய்தேன்?''

''அவங்க அப்படி நினைக்கறாங்களே...''

''எதை வெச்சு...?''

''நான் தொடக்கத்துலேயே சொன்ன பதில்தான்.''

''சரி... இப்படி ஒரு லவ் மேரேஜை எந்த பேரண்ட்ஸ் எடுத்த எடுப்புல பர்மிட் பண்ணியிருக்காங்க? அதுலையும் அந்த சிவகுமார் ஒரு ஆர்டினரி சாஃப்ட்வேர் என்ஜினியர். வேற என்ன ஸ்டேட்டஸ் அவன்கிட்ட இருக்கு?''

''எல்லாம் சரிசார். ஆனா, நீங்களும் எந்த ஸ்டேட்டசும் இல்லாத ஸ்ரேயா சௌத்ரியை...''

-கோகலே தொடக்கூடாத விஷயம் என்று தெரிந்தும் தொட்டார். அவரை அது தாக்கவும் ஆரம்பித்தது.

''வாட் நான்சென்ஸ் யூ ஆர் டாக்கிங்! அது என் பர்சனல். அவ என் ஃப்ரெண்ட். தட்ஸ் ஆல்.''

''அதை மேடம் நம்பிட்டா மற்றதெல்லாம் சரியாயிடும் சார்...''

''நிரோஷா ஸ்டார்ட்டிங்ல இருந்தே இந்த விஷயத்துல சரியில்லை. எனக்கு ஸ்டேட்டஸ் பெருசு. நான் ஸ்ரேயாவை எந்த நிலையிலையும் மனைவியா ஏத்துக்க மாட்டேன். இது ஏன் அவளுக்குப் புரியல...?''

''வெரி சாரி சார். பிரச்சினையோட ஆணிவேரே அவங்க தான். இன்ஃபாக்ட் 'தன் கணவரைக் கொல்ல நீங்க முயற்சி செய்யறதே அவங்க சொல்லித்தான்'னு ஒரு கோணம் இதுல இருக்கு சார்...''

-பேசக்கூடாது... பேசக்கூடாது என்று பயந்து கொண்டே பேசிவிட்டார் கோகலே!

"புல்ஷிட்... ஸ்ரேயா இந்த நிமிஷம் வரை அப்படி நினைக்கலை. இன்ஃபாக்ட் அவ வரைல நிரோஷா எனக்கு எதிரா இருக்க காரணமே அந்த பையன்தான்கறதுதான் அவ அபிப்பிராயம்."

"இப்படிதான் சார்... ஒருத்தர் மாற்றி ஒருத்தர் தப்பா புரிஞ்சுகிட்டு அதுக்கு தோதா தப்பாவே நடந்துகிட்டும் போறீங்க."

"ஓ.கே... இதுக்கு நான் ஒரு முற்றுப்புள்ளி வைக்கறேன்."

"வெச்சுதான் சார் தீரணும். ஏன்னா நீங்க கொலை முயற்சி செய்யறதா மெட்ராஸ் போலீஸ் கூட பேசிக்க தொடங்கிட்டாங்க."

"மைகாட்!" -ஜம்னாலால் கையை உதறிக் கொண்டே போய் தன் படகு காரில் ஏறி அமர்ந்தார். டிரைவரும் லகுவாக காரை எடுத்தான்.

ஹிந்தியில் அவனிடம் தன் அந்தரங்க மாளிகைக்கு போகச் சொன்னார். அப்படியே ஸ்ரேயா சௌத்ரிக்கும் போன் போட்டார்.

"ஸ்ரே..."

"சொல்லுங்க டார்லிங்."

"ஷூட்டிங்ல இருக்கியா?"

"ஆமா..."

"எப்ப முடியும்?"

"நோ பிராப்ளம். என்ன டார்லிங் கம்பெனி வேணுமா?"

"ஆமாம். வழக்கம்போல யாருக்கும் தெரியாதபடி ஃபார்தாவுல உன்னை எதிர்பார்க்கறேன்."

"அரை மணி நேரத்துல அங்க இருப்பேன்."

"நோ பிராப்ளம். டேக் யுவர் ஓன் டைம். இன்னிக்கு நான் உன்கூட என் எதிர்காலம் பற்றி பேசப் போறேன். ஆகையால கொஞ்சம் ப்ளசன்டாவே வா."

"ஓ... ஷ்யூர்...ஷ்யூர்!"

அந்த பக்கமாய் ஸ்ரேயா உற்சாகமாய் சொல்லி முடிக்க-காரும் பம்பாய் நகர சந்தடிக்குள் நழுவி நழுவிச் சென்று கொண்டே இருந்தது.

ஸ்ரேயா முகத்தில் லேசான ஆச்சரியக் கோடுகள் திராட்சைக் கண்ணிரண்டும் இடுங்கிச் சுருங்கிக் கொள்ள அவளுக்குள் தீவிர சிந்தனை. தொலைவில் டான்ஸ் மாஸ்டர் லக்ஷ்மிலால் அடுத்த மூவ்மென்ட்டிற்காக தயாராக இருந்தார்.

அது ஒரு க்ளப் டான்ஸ் நடனக் காட்சி! துணை நடிகைகள் பத்து பேர், நடிகர்கள் பத்து பேர் முகத்தில் அடிக்கும் பச்சைக் கலரில் இறுக்கமான உடையை அணிந்து கொண்டு ஜிகினாப் பூச்சில் விட்டில் பூச்சிகள் உடம்பில் அங்கங்கே அமர்ந்திருப்பது போல காட்சியளித்துக் கொண்டிருந்தனர்.

ஸ்ரேயா, லக்ஷ்மிலால் அருகே சென்றாள்.

"மாஸ்டர், பயங்கர தலைவலி."-என்று லேசாக முகத்தை சுணக்கினாள். அவர் கள்ளத்தனமாக பதிலுக்கு சிரித்தார். அதனுள் 'எனக்கு உன்னைத் தெரியும் ஸ்ரேயா' என்கிற இளக்காரம். ஸ்ரேயா சௌத்ரிக்கும் அந்த இளக்காரம் விளங்கியது. இருந்தும் ஜம்னாலால் போனில் பேசியது தூக்கலாக வேலை செய்தது.

"நாளைக்கு இரண்டு கால்ஷீட் ஓர்க் பண்ணி சரி செய்துட்றேன்..." என்றபடியே ஷாலை எடுத்துப்போர்த்திக் கொண்டு மேக்கப் ரூம் நோக்கி நடந்தாள். அப்போது அவள் சற்றும் எதிர்பாராத விதத்தில் அவள் எதிரில் பத்திரிகையாளன் ஜெயகர்."

"ஹலோ மேடம்..."

"ஓ... ஜெயகர்..."

"என்ன மேடம்... ஷுட்டிங் ஓவரா?"

"இல்ல... நான் கட் பண்ணிகிட்டேன். அவர் என்னை அவசரமா பாக்கணும்னார்."

"வெரிகுட். நானும் அந்த நேபாளத்துக்காரரை கூட்டிகிட்டு வந்துருக்கேன்."

"அப்படியா... எங்க?"

"யாருக்கும் தெரியாம உங்க மேக்கப் ரூம்ல உக்கார வெச்சிருக்கேன்."

"மைகாட்... இங்க என் மேக்கப் ரூம்லையா?"

"நோ பிராப்ளம் மேடம். அவரை ஒரு பத்திரிகை காரர்னு சொல்லித்தான் கூட்டிக்கிட்டு வந்துருக்கேன்."

ஜெயகர் சமாளித்தான். ஆனால், ஸ்ரேயாவிடம் டென்ஷன் எகிறத் தொடங்கியது.

உள்ளே அந்த நேபாள மந்திரவாதி!

சாதாரணமான பைஜாமா குர்தா என்கிற தோற்றம். தோளில் ஒரு லெதர் பேக் தொங்கிக் கொண்டிருந்தது. சரியான பூனைக் கண்கள்.

ஊசிபோல கூர்மையான மூக்கு.

தலையில் பஞ்சாபிபோல டர்பன்.

ஸ்ரேயாவை பார்த்த மாத்திரம் ஒரு சிறிய புன்னகை அவன் முகத்தில்.

ஸ்ரேயா, மேக்கப் அறைக் கதவை உட்பக்கமாக தாழிட்டாள். படபடப்போடு திரும்பினாள்.

"இவர்தான் மேடம் நான் சொன்ன நபர். பேர் வக்காணி..."

-ஜெயகர் அறிமுகத்தை தொடங்க ஸ்ரேயா கைகூப்பினாள். அப்படியே எதிரில் அமர்ந்தாள்.

அவனோ ஸ்ரேயாவை கண்களாலேயே நக்கத் தொடங்கினான். அவன் திரைப்படத்தில் மட்டும் பார்த்த உருவம். எதிரில் ஒரு மெழுகுப் பொம்மைபோல அமர்ந்திருக்கவும் அவனுக்கு கண்ணிலேயே எச்சில் ஊறியது.

ஸ்ரேயாவும் ஆண்களின் வக்ரத்தை நன்றாக எடை போடத் தெரிந்தவள். எனவே அவன் பார்வையால் கூசிப் போனாள். அவள் உடம்பிலும் வெட்கம் வேலை செய்தது.

ஷாலை தலை வரை உயர்த்தி முட்டாக்கு போல போட்டுக் கொண்டு அமர்ந்தாள். கொஞ்சம் தர்ம சங்கடத்தோடு ஜெயகர் பக்கமும் திரும்பினாள்.

"மேடம்..."

"எனக்கு பயமில்லை ஜெயகர். அங்க அவர் காத்துகிட்டிருக்கார்..."

"நல்லதுதானே மேடம்... இங்க லக்கானிகிட்ட இருந்து மருந்து வாங்கிட்டு போய் அதை சாருக்கு கொடுத்தா அதுக்கு பிறகு அவருக்கு நீங்க சொல்றதுதான் வேதம்."

"மருந்தா?"

"யெஸ்... அதை இவங்க அப்படித்தான் சொல்றாங்க. லக்கானி... அதை மேடத்துகிட்ட காட்டு."

-ஜெயகர், லக்கானிக்கு சிக்னல் தரவும் லக்கானி தன் தோல் பைக்குள் கைவிட்டான். ஒரு வேலைப்பாடுள்ள மரப்பெட்டி வசப்பட்டது.

வெளியே எடுத்தான். திறந்தான்.

உள்ளே குட்டிக் குட்டி சதுரத்தில் மனிகை டப்பாபோல இருந்தது. அதில் மிளகுபோல ஒரு பாகத்தில் கிடந்ததில் இரண்டே இரண்டை வெளியே எடுத்தான்.

மற்றவற்றில் என்னென்னவோ இருந்தன. அதில் ஒரு பிஞ்சு சுண்டு விரல் துண்டும் இருந்து ஸ்ரேயாவை முகம் சுளிக்கச் செய்தது.

"இதுதான் மேடம் அந்த மருந்து. இதை ஜரிதா பீடாவுக்குள்ள வெச்சு அவருக்கு கொடுத்துட்டா அவர் அப்புறம் உங்களுக்காக எதை வேணும்னாலும் செய்வார்..."

"இது என்ன மிளகு மாதிரி..."

"வக்காளி... இது என்னன்னு சொல்லுய்யா. அப்படியே இது எவ்வளவு விலைன்னு சொல்லிடு..."

-ஜெயகர் வக்காளியை இழுத்து விட்டான்.

வக்காளி ஒரு குரூர சிரிப்பு சிரித்தபடி ஆரம்பித்தான்.

"மேடம் ஜீ... இது வசிய மாத்திரை. வயித்துல குறைஞ்சது மூணு வருஷம் ஜீரணமாகாம அப்படியே இருக்கும். இது இருக்கற வரைதான் அவர் உங்கமேல ப்ரியமா இருப்பார். இதை நாங்க மந்திர சாஸ்த்ரத்துல சொன்னபடி செஞ்சிருக்கோம்.

அமாவாசை அன்னிக்கு அந்த திதியோட சென்டர் டைம் ரொம்ப முக்கியம்! அந்த நேரத்துல நாங்க சுடுகாட்டுல இதை செய்வோம். ஏன்னா சுடுகாட்டுலதான் பாசிடிவ் வேவ்ஸ் ரொம்ப இருக்காது. அது ஒரு துக்கமான இடம். ஐ மீன் வெரி டார்க் பிளேஸ்.

அப்படி ஒரு சுடுகாட்டுல வசிய மூலிகைச் செடியோட வேர் எடுத்து வந்து அதை சுட்டு சாம்பலாக்கி அந்த சாம்பல்ல பிளாக் பிளட் கொஞ்சம், பச்சை ஒணான் பிளட் கொஞ்சம் சேர்த்து ஸ்புடம் போட்டா இப்படி இது மருந்து உருண்டையா வரும்.

இதை ஒருத்தர் சாப்பிடும்போது எதிர்ல யார் இருக்காங்களோ அவங்கமேல ரொம்ப ஆசையாயிடுவாங்க..."

-வக்காளி கொஞ்சம் போல அந்த மருந்து பற்றி குறிப்புகள் கொடுத்தான். வசிய மூலிகைச் செடி இரத்தம் அது இது என்று அவன் சொன்னது அவள் வரையில் குழப்பியது.

"லுக்... அவர் என்மேல நல்லா பிரியமாதான் இருக்கார். ஆனா கல்யாணம் பண்ணிக்கத்தான் தயங்கறார். எங்க என்னை ஒரு கீப்பாவே கண்டினியூ பண்ணிடுவாரோன்னு பயமா இருக்கு.

"டோன்ட் ஓர்ரி... இதை கொடுத்த பிறகு நீங்க கல்யாணம் செய்துக்க சொன்னா உடனே சம்மதம் சொல்வார்..."

"அது எப்படி?"

"கொடுத்துப் பார்த்துட்டு அப்புறம் சொல்லுங்க மேடம்?"

"சரி... இது எவ்வளவு விலை?"

"ஒரு உருண்டை அஞ்சு லட்சம்."

"வாவ்... அஞ்சு லட்சமா? திஸ் ஈஸ் டூ மச்."

"உங்க கல்யாணத்துக்கு ஒரு பத்து லட்ச ரூபா செலவு செய்யறது டூ மச்சா மேடம்."

"நோ... நோ... இது என்ன வைரமா, இல்ல மாணிக்கமா... இவ்வளவு சொல்றதுக்கு...?"

"இல்ல மேடம்... இதை செய்யறது ரொம்ப கஷ்டம். உயிரை வெறுத்துதான் இவங்க இதை செய்யறாங்க."

-ஜெயகர் இடையில் லக்கானிக்கு வக்காலத்து வாங்கினான்.

"நோ... நோ... இந்த மிளகு மாதிரி உருண்டை என் டார்லிங்கை மாத்தும்ங்கறதையெல்லாம் என்னால நம்ப முடியலை."

"நோ ப்ராப்ளம். அவர் ஓ.கே. சொல்லி கல்யாணம் நடந்த பிறகு பணம் கொடுங்கோ மேடம்."

"ஆமாம் மேடம்... இது பலிச்சா காசு கொடுங்க..."

-ஜெயகர் திரும்பவும் எடுத்துவிட்டான்.

"ரைட்... முதல்ல காரியம் நடக்கட்டும். அப்புறம் நம்பறேன்..." என்றாள், ஸ்ரேயா சௌந்ரியும்.

"அப்ப உங்களுக்கு இந்த நிமிஷம் நம்பிக்கை இல்ல... அப்படித்தானே?"

"ஆமாம்... நான் எதையும் சைன்டிஃபிக்காவே பார்த்து பழகிட்டவ. இதெல்லாம் ஒரு பர்சன்ட் கூட நம்ப முடியல என்னால..."

"இதுவும் சைன்ஸ்தான். ஆனா இதை புரிஞ்சுக்க டைம் ஃப்ரேம் நமக்கு தெரியணும். அவ்வளவுதான்."

"நீங்க எவ்வளவுதான் பேசினாலும் ரிசல்ட் வந்த பிறகுதான் நான் நம்புவேன்."

-ஸ்ரேயா தீர்மானமாக பேசினாள்.

'ரைட்.... இப்ப இந்த ரூம்ல நான் ஒரு மேஜிக் காட்டவா?" -லக்கானி உடனேயே ஆவேசம் ஆனான்."

"மேஜிக்..."

"யெஸ்... மை பிளாக் மேஜிக்."

"அது என்ன பிளாக் மேஜிக்?"

"நீங்க ஒரு நோட் எடுத்து அப்படி போய் உட்கார்ந்து எதையாவது ரைட் பண்ணுங்கோ. எதை வேணா எழுதுங்கோ. அப்புறமா என் எதிர்ல வந்து உக்காருங்கோ, நீங்க எழுதினதை நான் அப்படியே நோட் உங்ககிட்ட இருக்கும் போதே சொல்றேன்."

"ரியலி...?"

"இங்க இப்பவே டெஸ்ட் பண்ணுங்கோ. அப்புறம் தெரியும். இந்த லக்கானி ஷிமோகா வில்லேஜ்ல டென் இயர்ஸ் பிளாக் மேஜிக்கை ஒரு கோர்ஸா எடுத்து படிச்ச சாமர்த்தியம்."

"மை காட்... இது ஒரு கோர்ஸா?"

"யெஸ்... இட் ஈஸ் எ சப்ஜெக்ட். இதுக்கு பாடம் இருக்கு. புத்தகம் இருக்கு. ஹோம் ஒர்க் உண்டு."

"ஓ.கே. அதையும் பாக்கறேன்."-என்ற ஸ்ரேயா தன் வேனிடி பேக்கில் இருந்து பேடையும் பேனாவையும் எடுத்துக் கொண்டு ஒரு மூலைக்கு போய் தன் தாய் மொழியான தெலுங்கில் தன் தாய் சிறுவயதில் எப்பொழுதும் எழுதும் ஸ்ரீ ராமஜெயத்தை ஒரு பத்து தடவை எழுதி முடித்துவிட்டு திரும்ப வந்தாள். லக்கானி அவளைப் பார்த்து சிரித்தான்.

"உம்... எழுதிட்டேன். என்ன எழுதினேன்னு சொல்லு பார்ப்போம்."

"உங்கம்மா உங்க சின்ன வயசுல நீங்க பார்க்க எழுதின ஸ்ரீ ராமஜெயம், சரியா?"

-லக்கானி சாதாரணமாக கேட்டான்.

ஸ்ரேயா செளத்ரி ஆடிப்போய்விட்டாள்.

## 9

***'தி**திகளில் ஏகாதசி திதியும் விசேஷமானது. இந்த திதியில் பட்டினி கிடப்பது நல்லது. ஏகாதசி திதி நாளில் கோள்களின் சுழற்சி வேகத்தில் பிரபஞ்ச வெளியில் சரப்பிகளில் சரப்பதிலும் ஏற்ற தாழ்வு நிலவுகிறது. அது மட்டுமல்ல இன்று பட்டினி*

இருப்பதால் நீரான உறுப்புக்கு நன்கு ஓய்வு ஏற்படு கிறது. உடம்பின் இரத்த ஓட்டத்திலும் ஒரு சிறுமாற்றம். இதன் காரணமாக மாற்றம் நிகழ்ந்து உடம்பின் கணையத்தில் சேமிக்கப்பட்ட சக்திகள் செலவாகின்றன. இன்று சாப்பிடுவதால் உடம்பின் அமிர்த குணம் அழிகிறது. நோய்க் காரணிகள் ஊக்கம் பெறுகின்றன. இன்று உணவு உண்ணாமல் மறுநாள் துவாதசியில் சாப்பிடும்போது நேர் எதிராக விளை வுகள் ஏற்படுகின்றன. அதாவது துவாதசியில் அகத்திக் கீரையையும், நெல்லிக்காயையும் முதல் உணவாக உட் கொள்ளச் சொல்வார்கள். பின் கசப்பான பாகற்காய், வேப்பம் பூ ரசம், சுண்டை வத்தல் குழம்பு போன்றவை முழுக்க முழுக்க உடல் நலத்துக்கு ஆதாரமாக அமைகின்றன.

இப்படி திதிகளுக்கு பின்னாலே அனேக ரகசியங்கள் உள்ளன. திதிகளைக் கடந்து 'நாழிகைப் பொழுது' என்றும் ஒன்று உள்ளது. இதில் அமிர்த நாழிகைப் பொழுது என்று ஒன்று உள்ளது.

இந்தப் பொழுதில் யார் எதைத் தொடங்கினாலும் அது விருத்தியாகும். மகிழ்ச்சியில் மட்டுமே முடியும். இந்த அமிர்த நாழிகைப் பொழுதைப் பற்றி அறிய ஜோதிடம் தெரிந்திருக்க வேண்டியது மிக அவசியம்!

அந்த ஆந்திரேயிலைப் பெண்மணி தொட்டுத் தொட்டு ஜோதிட சாஸ்திரத்திடம் வந்து நின்றாள்!

மும்பை நகரின் மையத்தில் உள்ள அந்த அரண்மனை போன்ற கட்டடத்தினுள் அந்த கார் உள் நுழைந்தது. உள்ளே இருந்து ஃபர்தா உடைக்குள் ஸ்ரேயா சௌத்ரி இறங்கினாள்.

சுற்றிச்சுற்றி பார்த்தபடியே நடந்தாள்.

எதிரில் ஒரு வயதான குஜராத்திக் காரர் வந்தார்.

சந்தனப்பொட்டு, வெள்ளைக்குல்லா, கறுப்பு வெஸ்ட் முழுக்கை சட்டை கீழே பஞ்சகச்சம் என்று ஜொலித்தார். தோற்றமே அவர் ஒரு பிரபல ஜோதிடர் என்பதை ஸ்ரேயா சௌத்ரிக்கு உணர்த்திவிட்டது.

குஜராத் பத்திரிகை ஒன்றில் வாரம் தவறாமல் ஜோதிடக் குறிப்புகள் எழுதுபவர். பல அதிசய தகவல்களை முன்பே தந்தவர். 'இந்தியாவில் குஜராத் மாநிலம் மட்டுமே அடுத் தடுத்து பாதிப்புக்குள்ளாகும்' என்று பாதிப்புக்குள்ளாகும் முன்பே பத்திரிகையில் எழுதி எச்சரித்தவர். அவர் பெயர் விட்டோபா!

ஸ்ரேயா, அவர் ஜம்னாலாலைத்தான் பார்க்க வந்ததை யூகித்துவிட்டாள்.

அது உண்மை என்பதை அவள் ஜம்னாலாலை அவரது அறைக்குள் சந்தித்தபோது உணர ஆரம்பித்தாள்.

"கமான் ஸ்ரேயா... அப்படி உட்கார்..." என்று ஜம்னாலால் ஒரு மூன்றாவது நபரை அணுகுவது போல அணுகவும் லேசாக சிதற ஆரம்பித்தது அவள் மனது. இருந் தும் அவரைக் கட்டி அணைத்து முத்தமளிக்க முயன்றாள். ஆனால், ஜம்னாலால் அவளை ஒரு திமிறலோடு தவிர்த்தார்.

"நோ ஸ்ரேயா... நோ..."

"என்னாச்சு டார்லிங்...?"

"சொல்றேன். முதல்ல உட்கார்."

அவளும் சோகம் கப்பிய முகத்துடன் அமர்ந்தாள். கண்களில் குத்தீட்டி போல ஒரு கூர்மை.

"ஸ்ரேயா... நான் இப்ப ஒரு பெக்கூலியரான ப்ராப்ளத் தில இருக்கேன்."

"சொல்லுங்க..."

"உனக்கே தெரியும் என் மகள் ஒருத்தனோட ஓடிப் போய் சென்னைல இருக்கற விஷயம்."

"அதுக்கென்ன?"

"அங்க அவ புருஷனுக்கு ஒரு கார் ஆக்சிடெண்ட்."

"தெரியும். நானும் கேள்விப்பட்டேன்."

"அந்த ஆக்சிடெண்ட் ஒரு தற்செயல்னுதான் நான் நினைச்சேன். ஆனா அது என்னோட கொலை முயற்சின்னு அவ நினைக்கறா..."

"உங்களை அவ்வளவு மோசமாவா அவ நினைக்கறா?"

-ஸ்ரேயாவின் கேள்விக்கு மௌனமாக அதே சமயம் அழுத்தமாக அவர் தலை ஆமோதிப்பதாக அசைந்தது.

"எந்த அப்பாவும் இப்படி நடந்துக்கமாட்டாங்கன்னு அவளுக்குத் தெரியாதா?"

"சாரி ஸ்ரேயா... இப்படி எல்லாம் நீ யோசிக்கலாம். நானும் யோசிக்கலாம். ஆனா நிரோஷா யோசிக்கலை. அதுக்கு காரணமும் எனக்குத் தெரியும்."

"அது என்ன காரணம்?"

"சொன்னா நீ அதிர்ச்சி அடையமாட்டியே...?"

"இன்னிக்கு எனக்கு எல்லா வகையிலையும் ஒரு அதிர்ச்சியான நாள்தான் டார்லிங்..."

"ரைட்... நான் சொல்ல வேண்டியதை சொல்லிடறேன். நிரோஷா இவ்வளவு தப்பா நினைக்க எனக்கும் உனக்குமான தொடர்புதான் காரணம்."

"இல்ல... எல்லாத்துக்கும் அவ புருஷன்தான் காரணம்."

"இதோ பார்... நீ எப்படி அவனை சொல்றியோ அதேமாதிரி அவ உன்னை நினைக்கறா."

"சரி... அதுக்கு என்ன பண்ணப்போறீங்க...?"

"அதை நான் கடைசியா சொல்றேன். அதுக்கு முன்னால நீ சில உண்மைகளை தெரிஞ்சிக்கோ."

"தெரியும் டார்லிங்... நீங்க என்னை கை கழுவப் போறீங்க. அதானே?"

"பைத்தியம் மாதிரி பேசாதே... என் வாழ்க்கையிலையும் சில வெளிய தெரியக் கூடாத விஷயங்கள் உண்டு. அது என் நிரோஷாவுக்கு தெரியும். அதை அவள் மீடியாவுல போட்டு உடைப்பேன்னுல்லாம் மிரட்டியிருக்கா..."

"சரி டார்லிங்... முடிவா நீங்க என்ன சொல்லப் போறீங்க. அதை சொல்லுங்க."

-ஸ்ரேயாவின் கண்களில் கண்ணீரும் உருளத் தொடங்கியது.

"நீ அழாதே... கொஞ்ச நாளைக்கு நீ என்னை சந்திக்காதே. நான் நிரோஷாவை சமாதானப்படுத்தி இந்த சிக்கல்ல இருந்து வெளிய வந்துட்றேன். அப்புறமா நாம ஒரு முடிவுக்கு வரலாம்."

"அதாவது இனி உனக்கும் எனக்கும் சம்பந்தமில்லை. நீ எப்பவும் ஒரு சினிமாக்காரிதான்னு சொல்லாமே சொல்றீங்க. அப்படித்தானே?"

-ஸ்ரேயா குமுறத் தொடங்கிவிட்டாள். கையிரண்டும் அந்த ஹேண்ட் பேக்கை பற்றியிருந்தது. அதனுள் லக்கானி கொடுத்த அந்த வசிய மருந்து!

"ஸ்ரேயா... உனக்கு ஆனாலும் பேராசை. எந்த தைரியத்துல நீ நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்குவேன்னு நினைச்சே...?"

-ஜம்னாலாலிடமும் மெல்ல கோபம் எட்டிப் பார்க்கத் தொடங்கியது.

"டார்லிங்..."

"நோ... அப்படி கூப்பிடாதே! நீ ஒரு ஆர்ட்டிஸ்ட். காசுக்கு எவ்வளவோ வேஷம் போட்றவ. என்கிட்டேயும் கொஞ்சநாள் வைப்பாட்டி வேஷம் போட்டே. அவ்வளவு தான்..."

"டார்லிங் இது டூ மச்... நான் உங்களுக்காக எனக்கு வந்த பல நல்ல சான்ஸை எல்லாம் வேண்டாம்னேன்..."

"இதோ பார்... உனக்கு என்னைவிட என் சொத்து மேலதான் குறி..."

"வேண்டாம் டார்லிங்... உங்க பெண்ணை திருப்திப் படுத்த என்னைத் தண்டிக்காதீங்க."

"நான் தண்டிக்கலை. எவ்வளவு உனக்கு பணம் வேணும்னு கேள். தரேன். வாங்கிட்டு போய்டு. நான் என் ஸ்டேட்டஸை காப்பாத்திக்கவாவது என் மகளோட சமரசமா போக விரும்பறேன்."

"அப்ப உங்க மகள்தான் இப்ப உங்க டார்கெட்டா?"

"ஆமா... அவ கைலதான் என் எதிர்காலம் இருக்கு."

"அவளே உங்களையும் என்னையும் ஏத்துகிட்டா?"

-ஸ்ரேயாவின் கேள்வி ஜம்னாவாலைக் கொஞ்சம் குழப்பியது.

"என்ன உளர்றே... அவ எப்படி உன்னை ஏத்துக்குவா?"

-அது எதுக்கு உங்களுக்கு...? அவளை நான் சம்மதிக்க வைக்கறேன்."

"நீ தலை கீழாக நின்னாலும் முடியாது..."

அப்படி முடியாம போனா நான் விலகிக்கறேன். உங்க கிட்ட இருந்தும் ஒரு நயா பைசா வேண்டாம். ஓ.கே வா...?"

"ஹவ் இட்ஸ் பாசிபிள். நான் இப்ப கூட விட்டோபா கிட்ட ஜாதகம் பார்த்தேன். அவர் 'என் பொண்ணு

என்கிட்ட வந்து சேர்ந்துடுவா. அதே சமயம் எனக்கு இரண்டாம் தாரம்லாம் இல்லை' ன்னு சொன்னாரு...''

''ஓ... ஜாதகம்லாமும் பாத்தாச்சா?''

''ஆமாம்... நான் இப்ப வாழ்க்கைல கிரிட்டிகல் சிச்சுவேஷன்ல இருக்கேன். தொழில் ரீதியான எதிரிகள் ஒருபக்கம். மகள் ஒரு பக்கம். நான் இதுக்கு நடுவுல என்னோட தொழில் வெற்றிகளை தக்க வெச்சுக்க என்னவேணா செய்வேன்...''

இதோ பாருங்க... உங்களுக்கு ஸ்டேட்டஸ். எனக்கு நீங்க. உங்களை நான் இழக்கமாட்டேன். இழக்க என்னால யும் முடியாது.''

“நீ சொல்றது அத்தைக்கு மீசை முளைச்சா சித்தப்பாங்கற மாதிரி ஒரு விஷயம்.''

“மீசை முளைக்கும். நீங்களும் பார்ப்பீங்க. உங்க மகள், நான் சொன்ன மாதிரியெல்லாம் கேப்பா. பாக்கறீங்களா?''

“அவ உன்கூட முகம் கொடுத்துக்கூட பேசமாட்டா...''

“இவ்வளவு பேசற உங்களையும் என்னால கட்டிப் போட முடியும். அதையும் பாக்கறீங்களா?''

''ஸ்ரேயா... உன் உடம்பைக் காட்டி இனி என்னை மயக்க முடியாது. அதை ஞாபகம் வெச்சுக்கோ.''

''அவசியமே இல்லை... இனி எதுக்கு எனக்கு உடம்பு?''

''அப்படின்னா வேற என்ன இருக்கு உன்கிட்ட?''

''புத்தி...''

''புத்தி... அடேயப்பா. உன் புத்தியோட சக்தி எனக்குத் தெரியாது?'' ஜம்னாலால் கிண்டலாக சிரித்தார்.

''போதும் டார்லிங்... இனி பேச்சு வேண்டாம். உங்களை நான் புரிஞ்சுகிட்டேன். 'ஒரு நடிகையா நான்

வந்தேன். நடிகையாவே போயிட்டேறன். உங்க விருப்பப் படியே நான் ஒதுங்கிக்கிறேன். உங்ககூட மோதினா, எனக்கு எலும்புகூட மிஞ்சாதுங்கறது தெரியும்."

-ஸ்ரேயாவிடம் திடீரென்று ஆவேச மாற்றம். ஜம்னா லாலுக்கே அவளது மாற்றம் ஆச்சரியம்தான் அளித்தது. கூடவே அவருக்கே உரிய அந்த புத்தி கூர்மைக்கும் மாறியது.

"டார்லிங்... எனக்கு நீங்க கொடுக்கறதை கொடுங்க. நான் அதை வாங்கிட்டு போயிட்றேன். கடைசியா உங்க கையால ஒரு விருந்து சாப்பிடவும் விரும்பறேன்."

"என்ன ஸ்ரேயா... சுனாமியா புறப்பட்டே அப்படியே சுருண்டு அடங்கிட்டே? என்ன ஏதாவது புது பிளானா?"

"ஒரு பிளானும் இல்லை. நீங்க ஸ்ட்ராங்கா இருக்கறது தெரிஞ்சிடிச்சு. உங்க செல்வாக்கு, பணபலம் இது எல்லாம் என் நினைவுக்கு வந்தது. அடங்கிட்டேன்."

"நிஜமா...?"

"சத்தியம் வேணா பண்ணட்டுமா?"

-அதற்கு மேல் ஜம்னாலாலால் ஸ்ரேயாவை குடைய வில்லை. அங்கிருந்தபடியே ஒரு சூப்பர் விருந்துக்கு ஏற்பாடு செய்தார்.

அந்த அறைக்குள்ளே எல்லா அயிட்டங்களும் வந்து நிரம் பின. ஸ்ரேயாவே எழுந்து சென்று அயிட்டங்களை அடுக் கினாள். அப்படியே வரிசைப்படுத்தும்போது ஞாபகமாக அந்த பீடாவை வெற்றிலை தட்டின் நடுவில் வைத்தாள்.

ஜம்னாலால் போய் கை கழுவிக் கொண்டு வந்தார். அவரே அவளுக்கு பதார்த்தங்களை எடுத்துப் போட்டார். அவளும் அமைதியாக சாப்பிட்டாள். நடுநடுவே அந்த பீடா மேலேயே பார்வையாக இருந்தாள். விருந்தும் ஒரு முடிவுக்கு வந்தது. அவளும் எழுந்து போய் கை கழுவிக்

கொண்டு வர அகன்றாள். அப்போது அவரது செல்போனில் கோகலே!

"சார்... ஜெயகர்ன்னு ஒரு ரிப்போர்ட்டர் உங்ககூட அவசரமா பேசணும்கறார்."

"என்ன விஷயமாம்?"

"ரொம்ப பர்சனலான விஷயம்னு சொல்றார்..."

"என்னன்னு கேள்... நான்லாம் பேசத் தயாரா இல்லை. என் மகள் விஷயத்தைக் கைல எடுத்தா நான் என்னத்த பேச..."

"நான் அதை கேட்டுட்டேன். இது ஸ்ரேயா சௌத்ரி சம்பந்தமான விஷயமாம்."

"ஸ்ரேயா விஷயமா... என்ன?"

"உங்க கிட்டதான் பேசுவாராம். நிச்சயம் இதனால உங்களுக்கு தான் நல்லதுன்னும் சொன்னார்..."

"சரி... என் நம்பரைக் கொடு..."

-ஜம்னாலால் பதில் கூறிவிட்டு ஸ்ரேயா பாத்ரூமில் இருந்து வருவதற்குள் அவசரமாக அந்த அறையைவிட்டு வெளியேறி இன்னோர் அறைக்குள் நுழைந்து கதவைத் தாழ்போட்டுக் கொண்டார். கச்சிதமாக செல்போனும் சப்தமிட்டது!

"யெஸ் ஜம்னா ஸ்பீக்கிங்..."

"சார்... வெரிகுட் மார்னிங் சார். ஐ ஆம் ஜெயகர். ஃப்ரம் மராட்டியமித்ரா..."

"ஓ... சொல்லுங்க மிஸ்டர் ஜெயகர்..."

"சார் மிஸ் ஸ்ரேயா சௌத்ரி இப்ப உங்ககூட தானே இருக்காங்க?"

"இல்லையே... அவங்களுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்?"

''சார்... நீங்க என்கிட்ட பயப்படவோ, எச்சரிக்கையா பேசவோ வேண்டாம். உங்க கூடத்தான் இப்ப ஸ்ரேயா இருக்கா. அது எனக்கு நல்லாத் தெரியும்.''

''ஓ.கே... அதுக்கு என்ன இப்போ...?''

''சார், நான் உங்களுக்கு ஒரு அதிர்ச்சியான செய்தியை சொல்லப் போறேன். கேட்டா நீங்க ஆடிப்போயிடுவீங்க...''

''என்ன மேன் இது. எனக்கு நிறைய வேலை இருக்கு. வாட்ஸ் த மேட்டர்...''

''நான் அதை சொல்லணும்னா நீங்க பத்து லட்ச ரூபா எனக்குத் தர வேண்டியிருக்கும். ஓ.கே.வா...?''

''என்னய்யா... புதுவிதமான பிளாக்மெயிலா இருக்கே?''

''அதெல்லாம் ஒண்ணுமில்ல சார்... பத்து லட்ச ரூபா செலவுல ஒரு வசிய மருந்தை லக்கானிங்கற ஒரு நேபாள மந்திரவாதிகிட்ட இருந்து நான் வாங்கி ஸ்ரேயாகிட்ட கொடுத்துருக்கேன். அதை நீங்க அவ கையால சாப்ட்டா அவ்வளவுதான்...''

''என்னது... வசிய மருந்தா?''

''ஆமாம் சார்... அது மட்டுமில்ல. இன்னொரு அதிர்ச்சியான தகவலும் எனக்குத் தெரியும். அதுக்கும் நீங்க ஒரு பத்து லட்சம் தந்தா அதை சொல்றேன்.''

''வசிய மருந்து சாப்பிட்டு மயங்க நான் என்ன மூளை இல்லாதவனா...? யாருக்கு காது குத்தறே நீ?''

''சரி சார்... நான் சொல்றபடி மட்டும் செய்யுங்க. அப்ப தெரியும். உங்களுக்கு அந்த வசிய மருந்தோட வேல்யூ...''

''என்னய்யா என்னென்னமோ சொல்றே... ஸ்ரேயா எதுக்கு எனக்கு வசியமருந்து தரணும்?''

"நீங்க அவங்களைக் கல்யாணம் பண்ணிக்க சம்மதிக்கணுமே..."

"சரி... நீ சொல்றதை நான் எதை வெச்சு நம்பறது?"

"அவ உங்களுக்கு எப்படியாவது ஒரு பீடாவை கொடுக்க நினைப்பா. அதை திறந்து பாருங்க. உள்ள இரண்டு மிளகு உருண்டை சைஸ்ல மருந்து இருக்கும்."

"அதைச் சாப்பிட்டா நான் அப்படியே மயங்கிடுவேனா?"

"மயங்கறது மட்டுமில்ல. உங்க சொத்தையே கூட அவ கேட்டா எழுதிக் கொடுத்திடுவீங்க."

"இந்த சைன்ட்டிஃபிக் வேர்ல்டுலையும் எப்படிய்யா இப்படி எல்லாம் பேச முடியுது?"

"சரிதான்... நீங்க பேப்பர் படிக்கறதில்லையா? இன்னிக்கும் பல பஸ் ஸ்டாண்டுகள்ள ஒரு மயக்க பொடியை தூவி அதை சுவாசிக்க வெச்சு தன்னை மறக்க செய்து கழுத்து சங்கிலியை எவ்வளவு பேர் அறுத்துக்கிட்டு போயிட்றாங்க தெரியுமா?"

"அதனால...?"

"சார், சைன்ஸ் ஒருபக்கம் அதோட பாதைல போய்கிட்டு இருக்கு. மித்திகல் மேட்டரும் அதுக்கு சளைக்காம போய்கிட்டுதான் இருக்கு..."

"சரி... இதை நீ என்கிட்ட சொல்ல காரணம்?"

"ரொம்ப சிம்பிள்... அவளுக்கு உதவி செய்தா அல்பமா தான் பணம் கிடைக்கும். ஆயிரம் இரண்டாயிரம்னு... ஏன்னா அவ ஒரு கவர்ச்சி நடிகை மட்டும்தான். நீங்க அப்படி இல்லையே.... பெரிய மில்லியனர். எல்லாத்துக்கும் மேலா எனக்கு உங்கள் மகள் மாப்பிள்ளை தொடர்பான ஒரு ரகசியமும் தெரியும்..."

-ஜெயகரின் அடுத்த கட்ட செய்தி ஒரு ஹைஹவோல்ட் கரண்ட் போல அவரைத் தாக்கியது.

"என்னது... என் மகள் மாப்பிள்ளை பற்றியா?"

"ஆமா... அவங்களை ஒரு சனிக்கிழமை விபத்துதான் உயிரைக் குடிக்கப் போகுது. அந்த பழி உங்க மேல விழுந்து உங்க பிசினஸ் சாம்ராஜ்யமே சுக்கு நூறா நொறுங்கவும் போகுது..."

"ஏய்ய்ய்..."

"டென்ஷன் ஆகாதீங்க. மும்பை ஒரு தாதா சிட்டி. இங்க மூளை இருந்தாதான் காலம் தள்ள முடியும். நான் மூளை உள்ளவன். அந்த சனிக்கிழமை விபத்து யாராலு எப்போங்கற உண்மை எனக்கு தெரியும். இந்த வசிய மருந்து விஷயத்தை முதல்ல உண்மையான்னு பாருங்க. பிறகு அவளை அடக்கிட்டு என்னை கூப்பிடுங்க. அதுக்கு முந்தி நான் உங்க செல்போன் நம்பருக்கு அனுப்பப் போற என் பேங்க் அக்கவுண்ட் நம்பருக்கு 50 லட்ச ரூபா பணத்தை பேங்க்குல போட்டுடுங்க... உடனே எனக்கு எஸ்.எம்.எஸ்.ல தகவல் வரும். அடுத்த நொடி நான் அவங்களை பத்தின தகவல் தருவேன். அதைவெச்சு உங்க மாப்ளை பொண்ணை காப்பாத்தி தப்பிச்சிடுங்க. இல்லைன்னா பாவம் நீங்க.. உங்க எதிரிகள் அதாவது தொழில் எதிரிகள் நிச்சயம் இந்த முறை ஜெயிச்சிடுவாங்க..."

-ஜெயகர், வயிற்றில் புளியைக் கரைத்தான்.

"ரைட்... நீ சொல்றதுல உண்மை இருந்தா 50 லட்சம் இல்ல. ஒரு கோடி உன் அக்கவுண்ட்ல போடறேன்." என்றபடியே செல்ஃபோனை மூடக்கினார்.

புறப்பட்டார்.

ஸ்ரேயாவும் பீடாவுடன் காத்துக் கொண்டிருந்தாள்!

# 10

மெல்ல மெல்ல அந்த பெண்மணி நமது ஜோதிட சாஸ்திரத்திடம் வந்து நின்றாள். ஜோதிடம் என்கிற வார்த்தைக்கு 'ஜோதி உள்ள இடம்...' அதாவது 'வெளிச்சம் உள்ள இடம்' என்று ஒருபொருள்... அடுத்து சோதிக்குமிடம் அதாவது நமது கட்டங்களை 'சோதித்து நாம் யார்' என்று கூறும் இடம் என்பது அடுத்த பொருள். ஜோதிடத்திற்கு இப்படி பல பொருள் இருந்தாலும் உண்மையில் அது ஒரு காலக் கணக்கு!

அது முழுக்க முழுக்க ஒரு கணக்கு! இந்த உண்மை அந்த பெண்மணியை மிகவும் கவர்ந்தது. ஆம்; நாம் இந்த மண்ணில் மூச்சுவிடத் தொடங்கும் முதல் மூச்சுக்கான காலப் புள்ளிதான் நமது ஆரம்பம். அப்புள்ளியில் வாங்கப்பட்ட மூச்சு, அதன்பின் எவ்வளவு மூச்சுக்காற்றை வாங்கும் என்பதை (அதாவது ஆயுள் காலம்) முதல் மூச்சுப் புள்ளியே கூறிவிடும். அந்த நொடிப் புள்ளிமேல் நின்று நோக்கும்போது அந்த நொடியின்மேல் ஆதிக்கம் செலுத்தும் ஒன்பது கிரகங்களின் சக்தியைக் கணக்கிட்டு அதை கூட்டிக் கழித்து மொத்த வாழ்நாளின் ஒவ்வொரு செயல்பாட்டையும் நாம் கணக்கிட்டு விடலாம். இந்த கணக்கில் புலிகளாக பல சித்தர்கள் இருந்துள்ளனர். வராகமிகிரர், புலிப்பாணி, கௌடில்யர், அகத்தியர் என்று காலக் கணக்கு போட்ட ஒரு மேதைக் கூட்டம் நமக்கு முன் வாழ்ந்துவிட்டு மறைந்து போயிருக்கிறது. இதை எல்லாம் அறிந்த அந்தப் பெண்மணிக்கு நமது

*புராதனங்களின் மீது அப்படி ஒரு மரியாதையும் மதிப்பும் ஏற்பட்டது.*

ஜம்னாவால் அறைக்குள் நுழையும்போதே ஏதோ விபரீதம் என்பதை ஸ்ரேயா யூகித்துவிட்டாள். ஆனால், ஜம்னாவால் தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவளைப் பார்த்து சிரித்து வழியத் தொடங்கினார். அப்படியே தன் நரைத்த தலையை கோதிவிட்டுக் கொண்டு பீடா உள்ள பான் பிளேட்டைப் பார்த்தார். ஸ்ரேயாவும் அதைக் கவனித்தாள்.

"எங்க டார்லிங் அவசரமா போயிட்டீங்க?"

"ஒன்னுமில்ல. ஒரு அவசர போன், பிசினஸ் சம்பந்தமா...! ஓ.கே... உனக்கான விருந்து முடிஞ்சாச்சு. கடைசியா நீ தாம்பூலம் போட்டா எவ்ரிதிங் ஓவர்... இல்ல...?"

-கேட்டுக் கொண்டே பான்பிளேட்டில் ஸ்ரேயா வைத்திருந்த பீடாவைக் கையில் எடுத்தார். அதை அவளை நோக்கி நீட்டினார். அவளிடம் ஒரு சன்னமான தடுமாற்றம் இருந்தும் சுதாரித்து அதை தன் கையில் வாங்கி ஜம்னாவாலுக்கே ஊட்டிவிட முயன்றாள்.

"எனக்கு எதுக்கு டியர்... நீ சாப்பிடு. அதுதான் எனக்கு முக்கியம். நீ இப்ப என் கெஸ்ட். நான்தான் உனக்கு ஊட்டி விடணும்."

அந்த பீடா திரும்ப அவள் உதடுகளை நோக்கியே சென்றது.

"இல்ல... இல்ல..."-அவளிடம் மீண்டும் தடுமாற்றம்.

"ஏன் ஸ்ரேயா ஒரு பீடாவுக்கு இந்த பயம் பயப்படறே? இது பீடாதானே? இதுல என்ன விஷமா இருக்கு...?"

"அது... அது இல்ல டார்லிங்... எனக்கு இப்ப பீடான்னா லேயே பிடிக்க மாட்டேங்குது..."

"எதனால அப்படி...? அப்படி என்ன இதுக்குள்ள இருக்கு...?"

-கேள்வி ஒரு புறம். கைகள் மறுபுறம் பீடாவை பிரிக்கத் தொடங்கின.

உள்ளே கறுப்பாய் மிளகு உருண்டை போல் அந்த வசிய மருந்து!

ஸ்ரேயாவுக்கு வாரித் தெளித்த மாதிரி வியர்க்கத் தொடங்கி விட்டது.

"அட... இது என்ன? பீடாவுல மிளகுகூட இருக்குமா என்ன?"

-ஜம்னாலால் பேச்சோடு பேச்சாக திரும்பவும் அதை மடக்கிக் கட்டினார். அவர் பார்வையும் மாறிவிட்டது.

"இப்ப நீ இந்த பீடாவை சாப்பிடறே..."

-என்று சற்று வன்மையான குரலில் அவளை புருவ மையத்தில் வெறிக்கத் தொடங்கினார்.

"டா... டார்லிங்..."அவள் தடுமாற்றத்தில் தவித்தாள்.

"டார்லிங்காவது மண்ணாங்கட்டியாவது... நீ இப்ப இதை சாப்பிடுறே!"

"இல்ல... இல்ல..."

"ஏன்...?"

"அது வந்து... அது வந்து..."

"எது வந்து?"

"டார்லிங் என்னை மன்னிச்சிடுங்க..."

"எதுக்கு...?"

"நான் தப்பு பண்ணிட்டேன்..."

"அப்படி வா வழிக்கு...!"

"ஆவேசமான பதிலைச் சொன்ன நொடி அந்த பீடாவை ஸ்ரேயாவை இழுத்து அவளது வாயில் செருகினார்.

அவள் அதை சாப்பிட மறுத்தாள்.

"என்னை வசியப்படுத்த நினைச்ச உன்னை நான் வசியப் படுத்தறேன். இனி நீ நான் சொன்னபடி எல்லாம் கேட்கறே..."

என்று வெறியோடு பீடாவை அவள் வாய்க்குள் வைத்து அதை விழுங்கியே தீரும் விதமாக அவள் வாயையும் வலுவோடு மூடினார்.

அவளிடம் மூச்சு முட்டிற்று.

வாய்க்குள் அடங்கிய பீடா அப்படியே நெஞ்சுக்குள் இறங்கி தும்மல் பீறிட்டது.

கூடவே மயக்கமும் வந்துவிட்டது!

**மு**ம்பை ஜிஹு பீச்!

பானி பூரி வியாபாரம் பட்டை கிளப்பிக் கொண் டிருந்தது. மட்டக் குதிரைகள் குறுக்கும் நெடுக்கும் ஓடிக் கொண்டிருந்தன.

அரபிக் கடலின் கரையோட அலைகளில் ஏராளமான அழுக்கும் நுரையும்...

கரையோரமாக ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஜெயகர் நின்று கொண்டிருந்தான். அவன் அருகிலேயே அந்த நேபாளத்து லக்கானி. ஒரு நீண்ட சுருட்டை கஷ்டப்பட்டு புகைத்துக் கொண்டிருந்தான்.

அவர்கள் இருவரும் ஜம்னாலாலுக்காக காத்திருந்தனர். அவரும் ஏமாற்றாமல் ஒரு கேரவன் வேனில் அங்கு வந்து சேர்ந்தார்.

இருவரும் அந்த வேனை துல்லியமாக அடையாளம் கண்டு கொண்டு அதில் ஏறிக் கொண்டனர். அதன் கண்ணாடிகளில் கூல் லேமினேஷன். உள்ளே இருந்து வெளியே பார்க்க முடிந்தது... ஆனால், வெளியே இருந்து உள்ளே ஊடுருவ வழியில்லை.

உள்ளே ஜம்னாலலால் தன் பிசினஸ் பேச்சைத் தொடங்கினார்.

“நீதான் ஜர்னலிஸ்ட் ஜெயகரா?”

“எக்ஸாக்ட்லி...”

“இவன்...?”

“கிரேட் லக்கானி. மந்திர தந்திரத்துல ஆசியவுலையே பெரிய மேதை...”

“ஓ... அந்த வசிய மருந்து இவன் சப்ளையா?”

“ஆமாம். நான் சொன்னது உண்மைங்கறதை இப்ப தெரிஞ்சிட்டிருப்பீங்க...”

“ம்... அதான் உன்னைப் பார்க்க இங்க தனியா வந்திருக்கேனே...”

“அதுக்கு முதல்ல என் நன்றி. என்ன இருந்தாலும் நீங்க இந்திய டெக்ஸ்டைல் உலகத்தோட சக்கரவர்த்தி. உங்களை பாக்கறதே பெரிய பாக்யம்.”

“வார்த்தை ஜாலம் வேண்டாம். என் மகள் மருமகன் பத்தி நீ ஏதோ சொன்னியே... விவரமா சொல்!.”

“அதுக்கு முந்தி நீங்க என் அக்கவுண்ட்ல பணம் போட்டுட்டீங்களான்னு எனக்குத் தெரியணும்.”

“ஸ்டுப்பிட்... நான் வார்த்தை தவறாதவன். உன்னை மாதிரி பிளாக் மெயில் பண்ணி லைஃப்பை ரன் பண்றவன் இல்ல.”

"ஜம்னாலால் ஜீ... என்கிட்டையும் ஆஸ்தி பாஸ்தி ஆள் அம்பு அதிகாரம்னும் எல்லாம் இருந்தா நானும் உங்களை மாதிரிதான் டயலாக் பேசுவேன். இது என் வரைல பிசினஸ். பிசினஸை பிசினஸா பண்ணுங்க..."

"அது எனக்கும் தெரியும். நீ என் எதிரி யார்ன்னு முதல்ல சொல். அது என்ன சனிக்கிழமை விபத்து...? விவரமா சொல். அப்புறமா அது உண்மைன்னா இதோ இந்த லேப் டாப்ல இரண்டு நிமிஷத்துல நான் மெயில் ட்ரான்ஸ்ஃபர்ல அம்பது லட்சம் இல்ல ஒரு கோடிய உன் அக்கவுண்ட்ல போட்றேன்..."

"இல்ல... முதல்ல பணம். பிறகுதான் ரகசியம்."

"நீ என்னை சீட் பண்ணிட்டா?"

"நான் புத்திசாலி பத்திரிகைக்காரன். யாரைப் பகைச்சுக் கணும்னு எனக்கு நல்லா தெரியும்."

"அப்ப பணத்தை வாங்காம வார்த்தைய விடமாட்டே?"

"நிச்சயமா..."

"சரி... இப்ப உன் எதிர்லையே உன் அக்கவுண்ட்ல ஒரு கோடிய நான் ட்ரான்ஸ்ஃபர் பண்றேன். ஓ.கே.யா...?"

"சாரி..."

"வாட் யூ மீன்?"

"இது டர்ட்டி கேம். எனக்கு பணத்தை கேஷா கொடுத்துடுங்க. அக்கவுண்ட் ட்ரான்ஸ்ஃபர் வேண்டாம். அது எனக்கு நீங்க பணம் கொடுத்ததுக்கு எவிடன்ஸ் ஆயிடும்."

"புத்திசாலி நீ... 'சரி தரேன். இப்ப நான் கொண்டு வரலை. நீ விஷயத்தை சொல்."

"ஜம்னாலால் ஜீ... நீங்க பிளாக்லையும், ஒயிட்லையும் புகுந்து விளையாட்ற ஒருத்தர். இப்ப இந்த கேரவன்ல ஒரு கோடி இல்ல... ஒன்பது கோடி இருக்குன்னு எனக்கு

தெரியும். திரும்பவும் சொல்றேன். நான் பத்திரிகைக்காரன். சி.பி.ஐ.க்கு தெரியாத ரகசியம் கூட எனக்குத் தெரியும்...''

''இல்லாடிய்யா நீ... ஒவ்வொரு ஜர்னலிஸ்ட்டும் உன்னை மாதிரி நடந்துகிட்டா என்னை மாதிரி வி.ஐ.பி.க் கள் துண்டை போட்டுக்கிட்டு போக வேண்டியதுதான்...''

-பேச்சோடு பேச்சாக அந்த சேரவனின் சீட்டுக்கடியில் இருந்து இரு பிரீஃப் கேஸை வெளியே எடுத்து திறந்தார். உள்ளே சலவை நோட்டுக் கட்டுகள்! அதில் ஒரு கட்டை எடுத்து ஜெயகர் ப்ளஃப்ப செய்து பார்த்தான்.

''கள்ள நோட்டான்னு பாக்கறியா?''

''ஆமாம்... ஏன்னா உங்க இந்த முன்னேற்றத்துக்கு பின்னால அதுவும் இருந்துருக்குங்கற விஷயம் எனக்கு நல்லாவே தெரியும்.''

-ஜெயகர் சொன்னது ஜம்னாலால் நெஞ்சுக் கூட்டையே திருகியது.

''உனக்கு என் மாதிரி பெரிய மனுஷங்களை கண்காணிக் கறதுதான் வேலைன்னு நினைக்கறேன்.''

''நிச்சயமா... உங்க வெற்றிகளைவிட உங்க தப்புகள் மேலதான் நான் கவனமா இருப்பேன். அப்பதானே நானும் பிழைக்க முடியும்.''

''சரி... விஷயத்துக்கு வா. அது என்ன சனிக்கிழமை விபத்து?''

''சனிக்கிழமை மட்டுமே உங்க மாப்பிள்ளையை குறி வெச்சுக் கொல்லும்படி உத்தரவு. அந்தக் கொலை, பாக்கறதுக்கு ஊர் உலகத்துக்கு ஒரு ஆக்சிடெண்ட் மாதிரி தெரியணும். அதனால அதுக்கு பேர் சனிக்கிழமை விபத்து... தட்ஸ் ஆல்!''

''இது யாரோட வேலை?''

''உங்க தொழில்ல உங்களை பிரதான எதிரியா நினைக்கறது யார்?''

''முகர்ஜி பிரதர்ஸ்...''

''எக்ஸாக்ட்லி...''

''அவங்க என்னைல்ல கொல்லப் பாக்கணும். என் மாப்ளை என்ன செய்தான்?''

''ஒரு ரகசியம் சொல்றேன். முகர்ஜி பிரதர்ஸ் உங்க மாப்ளையை தங்களோட கம்பெனிக்கு விலைக்கு வாங்கப் பார்த்தாங்க. ஏன்னா கம்ப்யூட்டர்ல அவர் ஒரு புலி. அதைவிட டெக்ஸ்டைல் பிசினஸ்லையும் ஒரு கிங். ஆனா உங்க மகள் காதலிக்கவும் அது சட்டுறாம போயிடிச்சு. தப்பித்தவறி நீங்க சமாதானமாகி உங்க மாப்ளை சிவகுமார் உங்க நிர்வாகத்துக்குள்ள நுழைஞ்சா, உங்க பிசினஸ் இப்ப இருக்கறதைவிட பல மடங்கு அதிகரிக்கும். இது முகர்ஜி பிரதர்ஸோட பயம்...''

-ஜெயகர் ஒரு மாபெரும் விஷயத்தின் பக்கங்களை ஒவ்வொரு பக்கமாக புரட்டப்புரட்ட ஜம்னாலால் வெறித்த விழிகளோடு அவனையே கவனித்துக் கொண்டிருந்தார்.

''அந்த பயம்தான் உங்க மாப்ளையை தீர்த்துக்கட்ட அவங்க நினைக்கவே காரணம். அதுக்காக முகமதலின்னு ஒருத்தனை பிடிச்சாங்க. அவன் கூலிக்கு கொலையே செய்யறவன். ஜெயில் தண்டனையை ஒரு நாளைக்கு பத்தாயிரம் இருபதாயிரத்துக்கு விக்கறவன். அதாவது உங்க மாப்ளை மேல காரையோ, லாரியையோ ஏத்தி கொல்றது அவன் திட்டம். போலீஸ் கேட்கும்போது அவனை 'ஏவி விட்டதே நீங்கதான்'னு சொல்லணும்கறது அவங்க திட்டம். இதனால் மீடியா உங்களை குற்றவாளியா சித்திரிக்கும். உங்க இமேஜில அடிவிழும். உங்க ஷேர்மார்க்கெட்டும் ஏறி இறங்கி பிசினஸ்ல கவனம் செலுத்த முடியாமப் போகும்.

இந்த தருணத்தைப் பயன்படுத்தி டெக்ஸ்டைல் மார்க்கெட்டையே வசப்படுத்தறதுதான் முகர்ஜி பிரதர்ஸோட பிளான்...''

-ஜெயகர் மொத்தமாக அவ்வளவையும் கொட்டி முடித்தான். கவனமாக கேட்டுக் கொண்ட ஜம்னாலாலுக்குள் இதயம் தாறுமாறாக துடிக்க ஆரம்பித்திருந்தது. அதற்கு நடுவில் புத்தி துல்லியமாக அந்த கேள்வியைக் கேட்க ஆரம்பித்தது.''

''ஆமா... என் மாப்பிள்ளையைக் கொல்ல சனிக்கிழமையை ஏன் தேர்வு செய்யணும்?''

-ஜெயகரும் ஒரு சன்னமான சிரிப்போடு அதற்கு பதிலைச் சொன்னான்.

''ஜம்னாலால் ஜீ... முகர்ஜி பிரதர்ஸுக்கு சனிக்கிழமை தான் ரொம்ப ராசியான நாள். இதோ இந்த லக்கானிக்கு அவங்க ஜாதகமே அத்துபடி. அன்னிக்கு அவங்க எதைச் செய்தாலும் வெற்றிதான்னா பார்த்துக்குங்களேன்...''

''சரி... இந்த டாப் சீக்ரெட் உனக்கு மட்டும் எப்படி தெரியும்...?''

''எதுக்கு இருக்கார்? லக்கானி... மைண்ட் ரீடிங்ல இல்லாடி இவர். பாக்கறீங்களா... நீங்க என்ன நினைக்கறீங்கன்னு இவரை இப்ப சொல்ல வைக்கறேன்...''

''சொல் பார்ப்போம்...'' -ஜம்னாலால் சீண்ட லக்கானியும் முறைப்புடன் வாயைத் திறந்தான்.

''ஜம்னாலால்... நீ நல்ல மனுஷனே இல்ல. நாங்க இங்க இருந்து பணத்தோட கிளம்பும் போது எங்ககிட்ட இருந்து பணத்தைப் பிடுங்க நீ ஒரு குரூப்பை ஏற்பாடு செய்துட்டு தான் வந்துருக்கே. அவங்களும் இப்ப இந்த கேரவானுக்கு வெளியே அங்கங்க நின்னுகிட்டிருக்காங்க. நீ உன்

செல்போன்ல ஒரு சிக்னல் கொடுத்தா போதும். காரியம் முடிஞ்சிடும்... சரியா?''

-லக்கானி கேட்கவும் ஜம்னாலால் தலை அடுத்த நொடியே குனிந்தது.

''ஜம்னாலால் ஜீ... ரியல்ல பெரிய மனுஷனா நீங்க எப்ப மாறப் போறீங்க? உங்களுக்காக நாங்க பாவம்... அந்த ஸ்ரேயா பொண்ணையே காட்டிக் கொடுத்துருக்கோம். இதெல்லாம் நல்லாவா இருக்கு?''

-ஜெயகரும் உடனேயே கொத்தினான்.

''சாரி ஜெயகர்... வெரி சாரி... வெரி வெரி சாரி... என்னை மன்னிச்சிடுங்க...''

ஜம்னாலால் அவர்கள் இருவரிடமும் படுவேகமாக நிமிர்ந்தார்.

''அட போங்க ஜீ...''

''இல்ல... உனக்கு இன்னும் கூட பத்து லட்சம் கூட தரேன் ஜெயகர். ப்ளீஸ் என்னை மன்னிச்சிடு...''

-பேச்சோடு பேச்சாக பணத்தையும் எடுத்து நீட்டினார்.

ஜெயகரும் சிறிது யோசிப்பதுபோல் யோசித்துவிட்டு வாங்கிக் கொண்டான்.

''தேங்க்யூ... ஆமாம். இந்த சனிக்கிழமை என் மாப்ளை யைக் கொல்ல அந்த முகமது அலி தயாராயிட்டானா... அவன் இப்ப சென்னைலதான் இருக்கானா?''

''எக்ஸாக்ட்லி. அதுக்கு முந்தியே நீங்க சென்னை போய் உங்க மாப்ளை பொண்ணை சமாதானம் செய்து அவங் களை ஃபாரீனுக்கு அனுப்பிடுங்க. அப்புறமா சனிக்கிழமை முகர்ஜி பிரதர்ஸுக்கே போன் போட்டு நேரா பேசுங்க. உங்களுக்கு அவங்க சதிவேலை தெரிய வந்ததை அவங்களால் தாங்கிக்க முடியாது. அவங்க முதல்ல மறுத்துப்

பேசுவாங்க. நீங்க 'லக்கானி இப்ப என் கூடதான் இருக்கான்'னு மட்டும் சொல்லுங்க. அவங்க அப்படியே ஆடிப் போயிடுவாங்க. பெட்டிப் பாம்பாவும் அடங்கிடுவாங்க..."

"யூ ஆர் ரைட்... அப்படித்தான் நானும் பதிலடி தரணும்."

"ஒரு வேளை அவங்க உங்ககூட பேசலைன்னா விட்டுருங்க. ஏன்னா நீங்க விரும்பின லக்கானிய உங்ககூட வெச்சுக்கிட்டு என்ன வேணும்னாலும் பண்ணலாம். அதான் இப்பவே இங்கயே லக்கானியோட பவரை பார்த்திங்களே..."

"யெஸ்...யெஸ்... யெஸ்..." -ஜம்னாலால் ஓர் ஆயிரம் வாட்ஸ் பல்பு போல படு பிரகாசமானார்.

"ரைட் ஜம்னாலால் ஜீ. உங்களுக்காக நானே ஒரு வேலை பண்றேன். அந்த முகமதலிக்கு போன் பண்ணி 'உன்னோட பிளான் ஜம்னாலால் ஜீக்கு தெரிஞ்சு போச்சு. அவர் மாப்ளையும் பொண்ணும் ஃபாரின் போயிட்டாங்க. நீ வந்த வழியே திரும்பிடு... இல்லாட்டி உன் மேல ஒரு லாரியோ, பஸ்ஸோ மோதறது நிச்சயம்'னு சொல்லிடறேன். சரியா...?"

-ஜெயகர் கேட்டு முடிக்க ஜம்னாலால் அவனை காரவன் என்றும் பார்க்காமல் கட்டித் தழுவிக் கொண்டார்.

அப்படியே "இனி அடிக்கடி மீட் பண்ணுவோம். உன்னோட இந்த உதவியை நான் மறக்கவே மாட்டேன்" என்று இரு கையையும் கூப்பினார்.

ஜெயகரும், லக்கானியும் பதிலுக்கு சிரித்தனர். ஒரு கோடியே பத்து லட்ச ரூபாயோடு காரவனை விட்டும் இறங்கினர்.

காரவனும் அவர்கள் இறங்கவும் கிளம்பியது. ஜெயகர், லக்கானியை ஓர் அர்த்தமுள்ள பார்வை பார்த்தான்.

பதிலுக்கு லக்கானியும் ஜெயகரை ஒரு பார்வை பார்த்தான். பிறகு இருவர் உதட்டிலும் ஒரு புன்னகை மண்ட ஆரம்பித்தது. கொஞ்சம் கொஞ்சமாய் அது பெரிதாகி பெரிய அளவில் அது ஓர் அசுரச்சிரிப்பாக வெடித்தது.

"லக்கானி... நாம ஜெயிச்சிட்டோம். புத்தியிருந்தா போதும். யாரையும் கவுத்துடலாம். எதையும் பொரட்டிப் போடலாம்னு நீ சொன்னது ரொம்ப சரி..."-என்று ஜெயகர், லக்கானியின் கரத்தை உற்சாகமாக தட்டினான்.

"பாவம் ஜம்னாலால்... ஷ்ரேயா சௌத்ரி கிட்ட நாம கொடுத்தது நிஜமாலுமே மிளகு... உலகத்துலயே ஒரு சிங்கள் மிளகை அஞ்சு லட்சத்துக்கு வித்தது நாமளாதான் இருப்போம்." என்றவன், அதற்கும் பெரிதாக சிரித்தான்.

"அதைவிடு... சென்னைல சும்மா ஒரு அஞ்சாறு சனிக்கிழமை ஜம்னாலால் மாப்ள ஹிட் பண்ணிட்டு அந்த ஹிட்டுக்கு காரணம் முகமதலி, முகர்ஜி பிரதர்ஸ்ன்னு சொல்லி ஒரு கோடியைக் கறந்துட்டோமே. அதை என்னன்னு சொல்றே?"

"ஜம்னாலால் மாதிரி முதலைங்கள இப்படித்தான் ஏமாத்த முடியும். அவங்க பிரச்சினைகளை அவங்களுக்கே தெரியாம பயன்படுத்தி அவங்கள அடிக்கறதுதான் புத்தி சாலித்தனம். இதுக்கு உன்னோட டெலிபதிபவர் பயன் பட்டதுக்காக அந்த பவருக்குத்தான் நாம நன்றி சொல்லணும்."

"இப்ப என்ன கெட்டுப்போச்சு ஜெயகர்? நாம ஒரு வகைல நல்லதுதான் செய்துருக்கோம். ஜம்னாலால் தன் மகளையும் மருமகனையும் ஓடிப்போய் பார்த்து ஒத்துமை யாக்கப் போறானே. இது நம்ம சோஷியல் சர்வீஸ்... என்ன சொல்றே?"

"பாவம் லக்ஷ்மணி... ஸ்ரேயா சௌத்ரியைதான் ஏமாத்திட்டோம்..."

"நோ ப்ராப்ளம்... இந்த ஜம்னாலால் எங்க போயிடப் போறான்? ஸ்ரேயா சௌத்ரியை நீ கட்டிக்கிட்டா குபேரனுக்கெல்லாம் குபேரன் ஆயிடுவே. அது ஜாதகம் அப்படின்னு ஏத்திவிடுவோம். நாம எதைச் சொன்னாலும் தான் அந்த பெரிய மனுஷன் இனி கேட்பானே...?"

இருவரும் மாறி மாறி பேசியபடியே அவர்கள் காரை நோக்கி நடந்தனர்.

அரபிக்கடலின் அலைகள் கூட அவர்களின் சாமர்த்தியத்தைப் பார்த்து அடங்கிவிட்டது போல் இருந்தது.

## 11

***'அந்தப் பெண்மணி இறுதியாக ஆஸ்திரேலியா புறப்படும் போது ஒரு தெளிவு அவருக்குள் பரிபூரணமாக ஏற்பட்டிருந்தது. வாழ்க்கையின் ஏற்ற தாழ்வுகளுக்கு அவரவர்களின் கர்ம வினைகள் தான் காரணமாகின்றன. தெரியாமல் செய்யும் பிழைகள் நமது வாழ்வின் குறைவே. தெரிந்து செய்வதுதான் நிறைய!***

***எனவே வினைகள் எவரையும் விடுவதேயில்லை. ஒரு தவறு செய்தவன், அதற்கு பதில் சொல்லியே தீர வேண்டும் என்கிற தர்ம நெறியை அந்தப் பெண்மணி பெரிதாக கருதினார்.***

***பலரை பலநாள் ஏமாற்றுகிறவர்கள் சிலரிடம் ஒட்டுமொத்தமாக ஒருநாளில் ஏமாந்து போகிறார்கள். அப்படி ஓர் ஏமாற்றத்தை அளிப்பவர்களையும் காலம்***

*விட்டு விடுவதில்லை. அது ஏதோ ஒரு வகையில் கருவறுக்கத்தான் செய்கிறது!*

**கா**லிங்பெல் சப்தம் கேட்டு கதவைத் திறந்த நிரோஷா, விக்கித்து விட்டாள். கதவுக்கு அந்த பக்கமாய் ஒரு பெரிய மலர்க் கொத்துடன் ஜம்னாலால்!

அவர் கண்களிலும் ஒரு பாச ஒளி!

நிரோஷாவும் அரை மனதாக ''வாங்க டாடி...'' -என்றாள். ஹாலில் லேப்டாப்பில் ஏதோ செய்து கொண்டிருந்த சிவகுமார், ஜம்னாலாலைப் பார்க்கவும் துள்ளிக் கொண்டு எழுந்து நின்றான்.

''சார் வாங்க...''

''சார் இல்ல மாப்ளே... நான் உங்க மாமா...''

''மாமா...''

''யெஸ்... நான் உங்க மாமா! த சேம் டைம் நான் எந்தக் கொலை முயற்சியும் செய்யலை மாப்ளே. செத்துட்ட என் மனைவி மேல சத்யமா சொல்றேன். என்னை நம்புங்க.''

-ஜம்னாலால் சிவகுமாரின் கைகளை பிடித்துக் கொண்டு அடுத்த நொடியே மன்றாடத் தொடங்கி விட்டார்.

''இல்ல சார்... நான் அப்படி நினைக்கல! நீங்க ஏன் பெரிய வார்த்தை எல்லாம் பேசறீங்க...?''

''இல்ல... நிரோ என்னை இப்ப கூட தப்பா நினைக்கறா பாருங்க. நான் இங்க வந்தும் அவ முகத்துல ஒரு சந்தோஷம் இல்லாததை...''

-அவர் அப்படி சொல்லவும் நிரோஷாவும் விடவில்லை.

''டாடி... அப்ப இவர் மேல காரை ஏத்தி கொல்லப் பார்த்த அந்த பம்பாய்காரன் யார்...? அவனை யார் அனுப்பினா?''

"கரெக்ட்... நீ இப்படி கேப்பேன்னு தெரியும். நல்லா கேட்டுக்கோ. அது நம்ம பிசினஸ் எதிரியான முகர்ஜி பிரதர் ஸோட ஏற்பாடு. மாப்ளையைக் கொல்லணும், பழியை என் மேல போடணும்; நம்ம டெக்ஸ்டைல் சாம்ராஜ்யத் தையே ஆட்டம் காண வைக்கணும்கறது அவங்க நோக்கம்.

நான் உங்க காதலை ஆரம்பத்துலையே ஏத்துக்கிட் டிருந்தா அவன் உள்ள நுழைஞ்சிருக்கவே முடியாது. அந்த விஷயத்துல நான் தப்பு பண்ணிட்டேன்.

ஐ ஆம் சாரி டியர்... ஐயாம் வெரி சாரி... நான் இப்ப அந்த ஸ்ரேயா சௌத்ரியையும் விட்டு விலகிட்டேன்."

-ஜம்னாலால் திரும்பவும் உருகினார். நிரோஷாவும் அதன் பிறகுதான் சமாதானமாகத் தொடங்கினாள்.

"நிரோஷா... இனியும் நீயும் மாப்ளையும் இங்க இருக்கக் கூடாது. நான் நாளைக்கு ஜெர்மன் போறேன். அங்க எனக்கு பிசினஸ் காண்ஃப்ரன்ஸ் இருக்கு. நீங்களும் கூட வர்றீங்க. உங்க ஹனிமூனை நீங்க அங்க செலபிரேட் பண்றீங்க..."

-ஜம்னாலால் பொங்கி வழிந்தார். சிவகுமார் தர்மசங்கத் துடன் அவரைப் பார்த்தான்.

"மாப்ளை... இனி நீங்க என் கம்பெனிக்கோட ஜே.எம்.டி! அதாவது ஜாய்ண்ட் மேனேஜிங் டைரக்டர். உங்க அவ்வளவு சாமர்த்தியத்தையும் நம்ம பிஸினஸ்ல காட்டுங்க. என்ன சொல்றீங்க...?"

-ஜம்னாலால் அங்கு வந்து பத்து நிமிடம் கூட ஆக வில்லை. அவர்கள் வாழ்க்கையையே தலைகீழாக புரட்டிப் போட்டு விட்டார்.

நிரோஷாவும் அதன் பிறகு பிகு ஏதும் சொல்லவில்லை. அன்று மாலையே இருவரும் அவருடன் மும்பை புறப்பட் டனர். அதற்கு முன்னதாக ஒரு சிறு பிரேக் [illegible]

மூவரும் சேர்த்து போஸ் கொடுத்தனர். ஜம்னாலால், சிவகுமாரை தன் கம்பெனிகளின் ஜே.எம்.டி. என்பதையும் பிரஸ்மீட்டில் அறிவித்தார்.

பிறகுதான் விமான நிலையத்துக்குச் சென்றனர். விமான நிலையத்தில் சொல்லி வைத்த மாதிரி முகர்ஜி பிரதர்ஸ்களில் ஒருவரான லக்ஷ்மன் முகர்ஜியும் கண்ணில் பட்டார். அவரைப் பார்க்கவும் ஜம்னாலாலுக்கு "உன்னை வீழ்த்தி விட்டேன் பார்த்தாயா?" என்பது போல ஒரு நினைப்பு.

லக்ஷ்மன் முகர்ஜிக்கு ஜம்னாலாலின் அந்த உள்ளோட்டம் எதுவுமே புரியவில்லை, நிரோஷா சிவகுமாரை பண்பாட்டோடு வாழ்த்திவிட்டு, "நான் கல்கத்தா போய்கிட்டிருக்கேன்..." -என்று கிளம்பிப் போனார்.

அதைப் பார்த்த ஜம்னாலாலுக்குள் அடிவயிற்றில் பாலும் தேனும் கலந்து ஊறியது போல இருந்தது.

விமானமும் அவர் மனதை போலவே குஷியாக ஆகாயத்தில் மிதக்கத் தொடங்கியது. மிகச் சரியாக ஒரு மணி நேரப் பயணம்தான். மும்பை வந்து விட்டது!

நிரோஷாவும் சிவகுமாரும் ஏதோ பேசியபடி வந்தனர். அதை எல்லாம் பெருமிதத்தோடு பார்த்தார். எல்லா சிக்கல்களும் சரியாகி, வாழ்க்கை திரும்ப தன்வசம் வந்துவிட்டது போலத்தான் தோன்றியது.

அவ்வளவுக்கும் காரணமான ஜெயகர் முகமும் லக்கானி முகமும் அவருக்குள் அவ்வேளையில் எழும்பியது.

செல்போனில் ஜெயகரை தொடர்புகொள்ள முயன்றார். மறுபக்கமாய் ஓர் இளம்பெண் குரல் தான் ஒலித்தது.

"ஹலோ யார் பேசறது?"

"நான் ஜம்னாலால் பேசறேன். ஜெயகர் சாப் இல்லையா?"

"நான் ஜெயகர் சாப் டாட்டர்தான் பேசறேன். அப்பா அப்பா..." அந்த பெண் தொடர்ந்து பேச முடியாமல் அழுதாள்.

"ஏம்மா அழறே... அப்பாவுக்கு என்ன?"

"அப்பா எங்களை எல்லாம் விட்டுட்டு ஒரு ஆக்சி டென்ட்டுல செத்துப் போயிட்டாரு..."

"வாட்!"

"ஆமாங்க... சனிக்கிழமை காலைல மும்பைல இருந்து பூனா போகும் போது அப்பாவோட கார் ஆக்சிடென்ட் ஆயிடிச்சு. அப்பா கூட போன அவர் ஃப்ரெண்ட் லக்கானிங்கறவரும் இறந்துட்டார்."

"மை காட்!"

"யாரோ அப்பாவை ஃபாலோ பண்ணி இந்த ஆக்சி டென்ட் பண்ணிட்டாங்கன்னு போலீஸ்ல சொன்னாங்க. ஏன்னா அப்பாகிட்ட அப்ப ஒரு கோடியே பத்து லட்ச ரூபாய் இருந்ததாம். அப்பா சாகறதுக்கு முந்தி அதை சொல்லிட்டுதான் செத்துருக்காரு..."

-அந்த பெண் தொடர்ந்து அழுதாள்.

ஜம்னாலாலுக்கு பகீர் என்றது!

வினை விளையாடி விட்டது.

ஆனால், அவருக்கு அதெல்லாம் தெரியவில்லை.

"என் மாப்ளையை ஆக்சிடென்ட்டுல இருந்து காப்பாத்தினவங்களுக்கு இப்படி ஒரு ஆக்சிடென்ட் முடிவா... கடவுளே..." -என்று பரிதாபப்பட்டார்.

ஆனால், பாவம் அவர்!

அவருக்காகப் பரிதாபப்படத்தான் யாருமில்லை.

முற்றும்


சனிக்கிழமை
விபத்து
இந்திரா சௌந்தர்ராஜன்
திருமகள் நிலையம்